பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 15 சனிக்கிழமை (29.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 184

## இலங்கையில் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு

# போர்க்குற்ற முறைப்பாடு எதனையும் விசாரிக்கும் அதிகாரம் வழங்கவேண்டும்

## அமெ. வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி வலியுறுத்து



நியூயோர்க்,மே29

முறைப்பாடு செய்யப்படும் எந்த வகையான போர்க்குற்றம் குறித்தும் விசாரணை செய்யும் பூரண அதிகாரம், இலங்கையில் நிறுவப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட வேண்டும்.

அத்தோடு ஆணைக்குழு கண்டறிந்த தகவல்களை ஒழிவு மறைவின்றிப் பகிரங்கப்படுத்துவதும் மிகவும் அவசியம்.

இவ்வாறு அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் வலியுறுத்தினார்.

அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸுடன் நேற்றிரவு (இலங்கை நேரப்படி 10.30 மணி) நடத்திய உத்தியோகபூர்வ சந்திப்பின் பின்னர், இருவரும் சேர்ந்து நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர்க்கால அட்டூழியங்கள் குறித்து ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் எந்த வகையான முறைப்பாட்டையும் விசாரிப்பதற்கான பூரண அதிகாரங்களும் அதற்கான வளங்களும் அரசினால் ஆணைக் குழுவுக்கு வழங்கப்படுவதும் மிகவும் பிரதானமானதும் அவசியமானதும் ஆகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. பத்திரிகையாளர் சங்கக் கூட்டத்தில் பேசவிருந்த பீரிஸ் திடீரென வெளிநடப்பு

### காரணம் தெரியவில்லை என்கிறார் கூட்டத்தின் தலைவர்

நியூயோர்க்,மே29

அமெரிக்காவிலுள்ள தேசிய பத்திரிகையாளர் சங்கத்தில் (National Press Club) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அந்தக் கூட்டத்தில் உரையாற்றாமலேயே அங்கிருந்து திடீரென வெளிநடப்புச் செய்தார்.

'இலங்கையுடனான அமெரிக்க உறவுகள்' என்ற தலைப்பில் அந்தக் கூட்டத்தில் உரையாற்றவிருந்த பீரிஸ், திடீரென எதுவும் பேசாமலே வெளிநடப்புச் செய்தமையானது சர்வதேச அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியிருக்கிறது. (24ஆம் பக்கம் பார்க்க)

## படை விட்டோடிகளுக்கு மீண்டும் பொது மன்னிப்பு

கொழும்பு,மே29

படையை விட்டு ஓடியவர்களுக்கு மீண்டும் பொதுமன்னிப்பு ஒன்றை வழங்க அரசு முன்வந்துள்ளது. படையை விட்டு ஓடியவர்கள் அடுத்த மாதம் 07 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் தங்களுடைய கடமையில் இருந்து சட்ட ரீதியாக ஓய்வுபெறலாம் என்று ராணுவம்

(24ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நிபுணர்குழு அமைக்குமாறு பிரிட்டனும் வலியுறுத்துகிறது

கொழும்பு,மே29

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சவதேச விசாரணைக் குழு அமைக்கப்படுவது மிகவும் அவசியமானது என பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் அவசியம் என்பதை ஐ.நா செயலளர் பான் கீ மூனுடன் இடம் பெற்ற சந்திப்பின் போது வலியுறுத்தியுள்ளார் என்றும் , அதற்கு பிரிட்டன் முழு ஆதரவுகளையும் வழங்கும் என்றும் ஐ.நாவுக்கான பிரிட்டன் தூதுவர் லயால் கிரான்ட் தெரிவித்துள்ளார்.

(சி)

## இந்தோனேஷியக் கடலில் மீட்கப்பட்ட 26 இலங்கையர்கள் ஜாவா முகாமில்

கொழும்பு,மே29

இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியா செல்லும் வழியில் இந்தோனேஷிய கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது இந்தோனேஷிய மீனவர்களால் காப்பாற்றப்பட்ட 26 இலங்கை அகதிகளும் மத்திய ஜாவாவில் தொடர்ந்தும் தங்கவைக்கப் பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவுக்கு அழைத்துச் செல்வதற்கு இன்னும் சில நாள்கள் எடுக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

ஜகார்த்தாவில் உள்ள முகாம்களில் இடமில்லாத (24ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் விசேட அதிரடிப்படைப் பிரிவு இப்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ்

கொழும்பு,மே29

இதுவரை காலமும் பொலிஸ் திணைக்களத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்து வந்த விசேட அதிரடிப் படைப் பொலிஸ் பிரிவு பாதுகாப்பு அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. இப்புதிய நடவடிக்கையின் மூலம் விசேட அதிரடிப்படைப் பொலிஸ் பிரிவினரை வழிநடத்தும் செயற்பாடுகள் இலகுவாக்கப்படும் என்று அரச தரப்பு தெரிவித்துள்ளது

இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கி உள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரிலும் வீதியிலுள்ள கட்டடங்கள் உடைக்கப்படும்

### அரச அதிபர் சாள்ஸ் தெரிவிப்பு

கொழும்பு,மே 29

வவுனியா நகரில் வீதி அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், ஏற்கனவே தயாரிக்கப்பட்ட திட்ட வரைவின்படி அகற்றப்பட வேண்டிய கட்டடங்கள் உடைக்கப்படும் என வவுனியா அரச அதிபர் பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின்படியே, வீதி அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுகிறது எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் மேற்படி கட்டடங்களின் உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதுடன், அவர்களின் அனுமதி கிடைக்கப் பெற்றிருக்கின்றது (24ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் மீள்கட்டுமானம்; இலங்கை அரசு துரிதமாக்க வேண்டும்!

### ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தெரிவிப்பு

கொழும்,மே29

''வடக்கு கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள இடங்கள் வழமையான நிலைக்கு கொண்டுவரப்படுதல் வேண்டும். அதற்காக குறித்த பகுதிகளுக்கான மீள்கட்டுமானப் பணிகளை இலங்கை அரசு துரிதமாக்க வேண்டும்'' - என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஹருகிகோ குருடா தெரிவித்தார்.

இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த புதனன்று இலங்கை வந்த அவர்,நேற்று மாலை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்

(24ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த ஆண்டில் சனத்தொகை மதிப்பீடு

கொழும்பு,மே 29

யுத்தத்தக்குப் பின்னரான முதலாவது சனத்தொகை மதிப்பீடு அடுத்த வருடம் நடைபெறவுள்ளது. நாடு முழுவதுமுள்ள கிராமசேவகர் பிரிவுகள் அனைத்திலும் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

புள்ளிவிவரம் சேகரிப்போர் 80 ஆயிரம் பேர், மாவட்ட நிர்வாக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலாளர்களைக் கொண்ட குழு சனத்தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகளில் (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டோ-கன்ரர் நேருக்கு நேர் மோதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலி

## மேலும் 8 பேர் காயம்; கெக்கிராவையில் அனர்த்தம்

கொழும்பு, மே 29

அநுராதபுரம் கெக்கிராவ, குருத்துவெவ பகுதியில் நேற்று அதிகாலை 12.30மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் 8 பேர் காயமடைந்தனர்.

ஓட்டோ ஒன்றும் கன்ரர் வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது என்று தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தின்போது ஓட்டோவில் 10 பேர் பயணித்துக் கொண்டிருந்தனர் என்றும் அவர்களில் மூவர் உயிரிழந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் நொச்சியாகம பகுதியைச் சேர்ந்த ஆர்.எம்.ஜகத் நியதபால (வயது - 37), நிலுங்காதிலினி ரத்னாயக்க(வயது - 27) ஆகிய தம்பதியினரும், அவர்களது ஒரு வயது புதல்வியான ஹஸான் தீக்ஷனாவுமே உயிரிழந்தவர்களாவர்.

வெஸாக் போயா தினத்தையொட்டி அநுராதபுரப் பகுதியில் இடம்பெற்ற சமய நிகழ்வுகளில் கலந்துவிட்டுத் திரும்பிய கன்ரர் வாகனமும், ஓட்டோவுமே இந்த விபத்தில் சிக்கின என்று தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் சீ.எல். சந்திரசேகர தெரிவித்தார்.

இவ்விபத்தில் காயமடைந்தவர்களுள் சிறுமிகள் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றமையால் அவர்கள் கண்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்த ஏனையவர்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து தொடர்பாக கன்ரர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஒ-சி)

## மஸ்கெலியா, லக்கம் பகுதியில் குப்பைக் குழியிலிருந்து சிசு மீட்பு!

மஸ்கெலியா, மே 29

மஸ்கெலியா, நோட்டன் பிரதான வீதியில் லக்கம் பகுதியில் நேற்றுக்காலை குப்பைக் குழியில் இருந்து பொலிஸார் சிசு ஒன்றை மீட்டுள்ளனர்.

பிரதேச மக்கள் கொடுத்த தகவலை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற மஸ்கெலியா பொலிஸார் குப்பைக்குள் போடப்பட்டிருந்த இந்தப் பெண்சிசுவை மீட்டு மஸ்கெலியா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இச்சிசு நேற்றுக்காலையிலேயே பிரசவிக்கப்பட்டுள்ளது எனவும், குழந்தை ஆரோக்கியமாக உள்ளது எனவும் மஸ்கெலியா மாவட்ட வைத்திய அதிகாரி பி. ஜீ.பி. கமகே தெரிவித்தார்.

இச்சிசு மேலதிக வைத்திய பரிசோதனைக்காக நாவலப்பிட்டி ஆதாரவைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார்.

இச்சிசுவின் தாய் எனக் கருதப்படும் 23 வயதுடைய இளம் பெண் ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் மஸ்கெலியா மாவட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, பின்னர் நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையில் மேலதிக பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளார் என்றும், வைத்திய அறிக்கைகளின் பின் இவர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஒ-சி)


### VILLAGE 2 CITY CLUB
THEVARAIALI, JAFFNA.

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்
28.05.2010

| | | | |
|---|---|---|---|
| முதலாம் பரிசு - | 4410 | ஆறுதல் பரிசுகள் | |
| 2ஆம் பரிசு - | 5283 | 1052, | 4326, |
| 3ஆம் பரிசு - | 4233 | 1110, | 2055, |
| | | 2110 | |

தொ.பே: 0778331202 நிர்வாகிகள்


## காணவில்லை



களுத்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலாப் பயணியாக வந்த 80 வயதுடைய வின்சென்ட் கொத்தலாவல என்பவரை நேற்று பகல் யாழ்.நகரில் காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொள்ளவும். அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கவும்.

கொத்தலாவல (மகன்). (98886) 077-9637237 077-1314930


### கடை வாடகைக்கு
யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:க.பிரபாகரன்
52/2, வைமன் றோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 2157

### தேவை
யாழ்.நகரில் வசிக்கும் கௌரவமான சிறு குடும்பத்திற்கு வீட்டுப் பராமரிப்பாளராக ஒரு நடுத்தர நற்குணமுள்ள பெண் தேவை. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
டாக்டர் இ.தெய்வேந்திரன்,
சென்றல் நேசிங் ஹோம்,
350, பலாலி வீதி, திருநெல்வேலி.

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த விவாகரத்துப் பெற்றவரும், 1972ஆம் ஆண்டு, உத்தரட்டாதி 3ஆம் பாதம் நட்சத்திரம், கிரகபாவம் 14 கொண்ட, வங்கியில் கடமையாற்றும் மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்பு: 0779687774,
0774029875

### காணி விற்பனைக்கு
திருநெல்வேலி கிழக்கு, இராசபாதைக்கு மிக அருகில் கிணற்று வசதியுடன் வீடு கட்டக் கூடிய 4½பரப்புத் தோட்டக் காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்புகளுக்கு:
தொ.பே.இல: 0779814551

### விற்பனைக்குண்டு
ஒருவயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான அல்சேசன் ஆண், பெண் நாய் குட்டிகளும், 8மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாயும், டாசோன் பெண் நாயும், டாசோன் ஆண், பெண் குட்டியும், பொக்கட் பெனியர் பெண் நாயும், வான்கோழிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி.மயூரன்
இல.209, பலாலி றோட்.

### தேவை
Akai Spool Tape Deck Gx Head
(Professonal)
விற்பனைக்கு இருந்தால் கீழ்க்காணும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே: 0777901197,
0716960600

### இறைச்சிக்கோழி விற்பனை
இறைச்சிக் கோழிகள்விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0779907104


## வெசாக்கை முன்னிட்டு உணவுப் பார்சல்களை வழங்கும் இராணுவத்தினர்

யாழ்ப்பாணம். மே 29

வெசாக் தினத்தை முன்னிட்டு நீர்வேலிப் பகுதியில் இராணுவத்தினர் மக்களுக்கு மதிய உணவு, குளிர்பானம் மற்றும் சிற்றுண்டி வகைகளை வழங்கி வருகின்றனர்.

வீதியால் சென்ற மக்களுக்கு உணவு பார்சல்கள் வழங்கப்படுவதோடு சிற்றுண்டிகளும், குளிர்பானங்களும் விநியோகிக்கப்பட்டன.

இப்பகுதியில் வெசாக் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு பல்வேறு வடிவங்களில் வெசாக் கூடுகளும் வைக்கப்பட்டுள்ளன. (50-224)

## நவநாள் வழிபாடுகள்

கோப்பாய் தெற்கு புனித மரியன்னை ஆலய வருடாந்தத் திருவிழா நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 6.45 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூபப் பவனியும், ஆசீரும் இடம்பெறும். (ஒ-135)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி எட்வின் யோசவ் இராஜமலர்



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்தவருமான திருமதி எட்வின் யோசவ் இராஜமலர் 25.05.2010 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டானியல்-கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை(உடையார், சில்லாலை) -மரியம்மா தம்பதியரின் மூத்த மருமகளும் எட்வின் யோசவ்வின் (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் திவ்வியராஜ் ஸ்ரீபன் (லண்டன்), பேணாட் கொலின் (மாணவன், BCAS கொழும்பு HND in QS), பிளசிடா மொறின் (மாணவி, யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனம், HNDM ) ஆகியோரின் பாசமிகு தாயும் டானியல் பிரான்சிஸ் வில்லியத்தின் (அவுஸ்திரேலியா) அன்புச் சகோதரியும், டெனிசியஸ், காலஞ்சென்ற ஜெயராஜா, அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை (லண்டன்), றஞ்சி(லண்டன்), புஸ்பம் (லண்டன்), புனிதம் (லண்டன்), இன்பம் (லண்டன்) ஆகியோரின் அன்பு அண்ணியும் ஜெயமணி, பற்றிமா, யேசு தாசன், ஜெயராஜா, யோகதேவா, மைக்கல் ஆகியோரின் அன்பு மைத்துனியும் அரவிந், ஆர்த்தி, சங்கீதா ஆகியோரின் பெரியம்மாவும் றொகான், டயான், யேசன், யோகன், யூலியன், ஜெறமி, அந்தியா, அனிக்கா, ஜெனிவர், ஜெனுஷா ஆகியோரின் பெரிய மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (29.05.2010) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இறுதி இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கல்கிசை பொது சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19,கரகம்பிட்டிய குறுக்கு வீதி,
தெகிவளை.
தொ.பே: 0779905302

தகவல்:
ம.எட்வின் யோசவ் (கணவர்),
பிள்ளைகள்.

### திருமதி செல்லம்மா சம்பந்தன்



காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமான திருமதி செல்லம்மா (செல்வதி) சம்பந்தன் நேற்றுமுன்தினம் (27.05.2010) வியாழக்கிழமை லண்டனில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும் வளுப்போடை, களபூமி, காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான த.கா. ஐயாத்துரை - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் ஐ.தி. சம்பந்தனின் (சோமஸ்கந்தமூர்த்தி) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், முத்தாச்சி, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோரியும் ஞானவடிவேல், ஞானானந்தன், ஞானலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயும் கௌசல்யா, பகீரதி, மலர்விழி ஆகியோரின் மாமியும் ஐஸ்மிதா, ஹர்சிகா, தருண், சயனிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் விநாயகமூர்த்தியின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உறவினர்,
4 ஏ, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
0776057153

தகவல்:
ஐ.தி. சம்பந்தன் (லண்டன்)
00442085526992
கை/தொ.: 00447852950089

## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் அருஜெயக்குமார்
(பெரிய தம்பி)



வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தியைப் வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் அருஜெயக்குமார் (பெரியதம்பி) நேற்று (28.05.2010) வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் இராசலிங்கம்-அனட் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் தவரத்தினம்-இராணி தம்பதியரின் பாசமிகு மருமகனும் ஜீவமதியின் அன்புக் கணவரும் ஐவர்ஜன் (யா/இந்துக் கல்லூரி), அஜீவன் (கோப்பாய் நாவலர் பாடசாலை), வஜனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பவானி, ரவீந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சாந்தமதி, சந்திரவதனன் (பிரான்ஸ்), மதிவதனன், ஜெயமதி, ஸ்ரீவதனன், ஜெயவதனன், சூரியவதனன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது வீட்டில் இடம்பெற்று பூதவு டல் தகனக்கிரியைக்காக மு.ப.11 மணியளவில் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் கட்டை,
கோப்பாய்.

(98699)

தகவல்:
மனைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அரசமைப்புச் சபை மீளமைப்பு நல்லாட்சிக்கு வகை செய்ய வேண்டும்

அரசமைப்புச்சபை (Constitutional Council) மீண்டும் இரண்டு மாதத்தில் இயங்கும், செயற்படும் என்று பிரதமர் டி.எம்.ஜயரத்னா தெரிவித் துள்ளார். 8மோதங்கள் நிலுவையாகவுள்ள் இந்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீதான விவாதம் நடைபெற்று முடிவடைந்த பின்னர் அரசமைப்புச் சபையை அமைப் பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

கடந்த பல வருடங்களாக அரசமைப்புச் சபை செயலிழந்து போய்க் கிடக்கிறது. அத்னால் பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு, லஞ்ச ஊழல் ஆணைக் குழு, பொதுச் சேவை ஆணைக்குழு ஆகியனவும் செத்துப் போய் விட்டன. அத்தகைய ஆணைக்குழுக்களும் இந்த நாட்டில் இருக்கின்றனவா என்று கேட்கும் அளவுக்கு, மக்கள் மறந்து போகும் அளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது!

நாட்டில் நீதி நிர்வாகம் கோணலாகி விடாமல் அவற்றுக்குரிய மக்கள் சேவையை உரிய விதிமுறைப் பிரகாரம், சட்டங்களுக்கு உட்பட்டு நடைபெறுவதைக் கண்காணித்துக் கொள்வதும் அரசமைப்புச் சபையினால் நியமிக்கப்படும் ஆணைக் குழுக்களின் உறுப்பினர்களின் பிரதான பணிகளில் ஒன்று. நல்லாட்சி நடைபெறுவதை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆணைக் குழுக்கள் செயற்பட வேண்டும் என்பதே அவை தோற்றுவிக்கப்பட்டதற்கான பிரதான காரணம்.

ஆனால் அவை புதுப்பிக்கப்படாமல், காலஅவகாசம் முடிந்த நியமனங்களுக்குப் பதிலாக ஆணைக்குழுக்களுக்குப் புதியவர்கள் நியமிக்கப்படாமல், செயலிழந்து போனதால் அரசாங்கமே எல்லாவற் றையும் தனது கைக்குள் அடக்கிக் கொண்டு, பொத்திக் கொண்டு அதிகாரம் நடத்துவதற்கு உடந்தையாகி விட்டது.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்று நெருக்கீடான காலங்களில் எதிர்க் கட்சிகள் உட்பட நல்லாட்சியில் அக்கறையுள்ள அமைப்புக்கள் விடுத்த கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்காகவே ஆயிற்று.

இப்போதாவது நாட்டில் நல்லாட்சிக்கு வகை செய்யப்பட வேண்டும் என்ற எண்ணம் அரசிடம் தோன்றியிருப்பது வரவேற்கப்பட வேண்டியதாகும். அரசமைப்புச் சபை செயலிழந்து கிடப்பதால், அதன்கீழ் செயற்பட்ட நாட்டின் நல்லாட்சியை ஊக்குவிக்கும், (அல்லது உறுதிப்படுத்தும் என்றும் கூடச் சொல்லலாம்) ஆணைக்குழுக்கள் கடந்த கால ஆட்சியில் செயலற்று வீழ்ந்ததால் எதேச்சாதிகாரம் தலைவிரித்தாடியதை மறந்து விடமுடியாது.

நாட்டின் மிக உயர்ந்த சட்டவாக்கச் சபையான மக்கள் பிரதிநிதிகள் சபை - அதாவது நாடாளுமன்றம் - உட்பட மக்கள் ஆட்சியை நடத்தும் ஆளும் சபைகளைத் தெரிவு செய்யும் தேர்தல்கள் சம்பந்தப்பட்ட தேர்தல் ஆணைக்குழு இயங்காததால், தேர்தல் திணைக்களத்துக்கு புதிய ஆணையாளர் ஒருவர் பல வருடங்களாக நியமிக்கப்படவில்லை. ஓய்வு பெறும் காலம் பலவருடங்களுக்கு முன்னரே கடந்து போன நிலையில், தம்மைப் பதவியிலிருந்து விடுவிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கெஞ்சிக் கேட்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

அது ஒன்றே, இந்த நாட்டில் நல்லாட்சி நடத்துவதற்கு குந்தகம் விளைவிக்கும் பாதக நிலை ஏற்பட்டமைக்குச் சிறந்த உதாரணம் ஆகும். அந்த நிலைமையை தூண்டுவிக்கும் அளவுக்கு மிதமான அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பதால், மக்கள் விரோதச் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்தும் போக்கும் இதனால் பலமுறுகிறது.

மேற்கூறப்பட்ட ஆணைக்குழுக்களுக்கு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை புதியவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பது சட்டவிதி. ஆனால் அதனையும் மீறித் தனது விருப்பப்படி செயலாற்றுவதற்கு நிறைவேற்று ஜனாதிபதி முறை வகை செய்கிறது. மக்கள் நலன் நாடிய நல்லாட்சி என்பது துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு என்றாகிவிட்டது.

ஆகையால் அரசமைப்புச் சபை மீண்டும் நியமிக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், அதிலுள்ள ஓட்டை ஒடிசல்கள் நீக்கப்படுவது மிகமிக அவசியம். அரச தரப்பில் அதீத பலம் உள்ள நாடாளுமன்றம் இந்த நிலையை நீக்கப் போக்க முயலுமா என்பதற்கான பதில் அரச தரப்பிலிருந்து வெளிவர வேண்டும்.

அதனை மக்கள் எதிர்பார்க்கலாமா?

# மீளக்குடியமர்ந்தோரில் காணி இல்லாத முஸ்லிம்களுக்கு பள்ளிவாசல் நிலங்களை வழங்குவதற்குத் திட்டம்

## யாழ்.மாநகரசபை உறுப்பினர் சுபியான் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறி வருகின்ற முஸ்லிம் மக்களில் காணி இல்லாதவர்களுக்கு பள்ளிவாசல் காணிகளை வழங்கிக் குடியேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபை உறுப்பினர் மௌலவி ஏ.சுபியான் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஏ - 9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் இதுவரை 59 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. இந்தக் குடும்பங்கள் யாழ். செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

இது தவிர 100 குடும்பங்கள் குடியேறியுள்ளன. இதில் சொந்தக் காணி உள்ள குடும்பங்களுக்கு நிரந்தரமான வீடுகளை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் காணியில்லாத குடும்பங்களுக்கு 2002 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற குடும்பங்கள் என்ற முன்னுரிமை அடிப்படையில் சுமார் 20 குடும்பங்களுக்கு யாழ். சின்னப்பள்ளி வாசலின் பின்புறமாகவுள்ள மையவாடிப்பகுதியிலும் 50 குடும்பங்களுக்கு வேலணை சாட்டி பள்ளிவாசல் பின்பக்கமாகவுள்ள பகுதியிலும் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காணிகள் வழங்குவது தொடர்பாக அரச அதிபரின் அனுமதி கிடைத்ததும் அவை பகிர்ந்தளிக்கப்பட்டு அவர்களுக்கு தற்காலிக வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படும் - என்றார். (50-9)

# உள்ளூர் உற்பத்திப் பொருள் கண்காட்சி யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று ஆரம்பம்

## மூன்று நாள்கள் தொடர்ந்து இடம்பெறும்

யாழ்ப்பாணம், மே 29

''உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம்'' என்ற கருப்பொருளில் வடமாகாண பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களின் மாகாண மட்ட மூன்று நாள் கண்காட்சி நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலக்சுமி தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்விற்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திர சிறி, வடமாகாண பிரதம செயலாளர் ஏ.சிவசுவாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். இவர்களுடன் அரச அதிபர் கே. கணேஷ் உள்ளிட்ட பலர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தின்போது விருந்தினர்கள் அனைவரும் பண்பாட்டு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வடமாகாணக் கொடியை ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியும் ஏற்றிவைத்ததுடன் இருவரும் இணைந்து சம்பிரதாய பூர்வமாக நாடாவெட்டிக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர். யாழ்.மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன.

பாடசாலை மாணவர்கள், உள்ளூர் மற்றும் வெளிமாவட்ட மக்கள், உள்ளூர் தொழில்முயற்சியாளர்கள் எனப் பலரும் ஆர்வத்துடன் கண்காட்சியைக் கண்டு களித்ததை அவதானிக்க முடிந்தது.

வடமாகாணத்தின் வாழ்வாதார செயற்பாடுகளில் ஈடுபடும் விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கூட்டுறவுத் திணைக்களம், சமூகசேவைகள் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், சுதேச வைத்தியத்துறை திணைக்களம், பனை அபிவிருத்தி சபை ஆகிய அரசு திணைக்களங்களும் ஏனைய உள்ளூர் கிராம மட்ட அமைப்புக்களும் இந்தக் கண்காட்சியில் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்தியிருந்தன.

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் வவுனியா, மன்னார் மாவட்டங்களின் உற்பத்திகள் இந்தக் கண்காட்சியில் இடம் பிடித்திருந்தன.

இரண்டாவது தடவையாக வடமாகாண உள்ளூர் உற்பத்திக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (50-14-224)

(படங்கள் 5 ஆம் பக்கத்தில்)

# பாலர் பாடசாலைகளை நிர்மாணிக்கும் பணியில் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனம்

யாழ்ப்பாணம், மே 29

பாலர் பாடசாலைகளை நிர்மாணித்து வழங்கும் திட்டத்தை கியூடெக் - கரித்தாஸ் நிறுவனம் தற்போது யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தலா பன்னிரண்டு லட்சம் ரூபா பெறுமதியில் எட்டுப் பாலர் பாடசாலைகள் இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. பாலர் பாடசாலை அமைப்பது தொடர்பாக யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாகத் தகவல்கள் திரட்டப்பட்டன. அதன் அடிப்படையில் சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் பாலர் பாடசாலை அமைப்பதற்கென தெரிவுசெய்யப்பட்டன.

அவற்றுள் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நான்கு பாலர் பாடசாலைகளும் யாழ்ப்பாணப் பிரிவில் மூன்றும், நல்லூர்ப் பிரிவில் ஒன்றும் என எட்டுப் பாலர் பாடசாலைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த மாதம் (ஜூன்) நடுப்பகுதியில் அவற்றின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்து கையளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (50-14)

# முறிகண்டிப்பிள்ளையார் ஆலயத்தை அரசு சட்டபூர்வமாகப் பொறுப் பேற்கவில்லை

## இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,மே29

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தை சட்டபூர்வமாக அரசு பொறுப்பேற்க வில்லை. ஜனாதிபதி செயலகத்தின் பணிப்புக்கு அமைய தற்காலிக ஏற்பாடாக பரிபாலனை சபை ஒன்று உருவாக்கப்பட்டு ஆலயம் நிர்வகிக்கப்பட்டுவருகிறது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் மேற்க்ண்டவாறு தெரிவித்துள்ளார்.

திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயம் தொடர்பாக எழுப்பப்பட்டுள்ள சர்ச்சை குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த வருடம் யுத்தம் முடிவுற்ற பின்னர் ஏ-9 பாதை திறக்கப்பட்டு பொதுமக்களுக்கான வாகனப் போக்குவரத்து ஆரம்பமானவுடன் திருமுறிகண்டி ஆலயத்தை பொதுமக்கள் தரிசித்துச் செல்லவேண்டும் என்ற தொடர்ச்சியான கோரிக்கைகள் திணைக்களத்துக்கு விடுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இவ்வாலயத்துக்கென குருக்கள் ஒருவரை நியமித்து முறையான பூஜைகளை நடத்தும் ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி செயலகத்திலிருந்து இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு பணிப்புரை வழங்கப்பட்டது.

அதற்கமைவாகவே குருக்கள் ஒருவர் நியமிக்கப்பட்டு வழமையான பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக ஆலயத்தின் சூழலை முகாமை செய்து கொள்வதற்காக திணைக்களத்தின் மூலம் முகாமையாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டார்.

இவ்வாலயம் தொடர்பாக திணைக்களத்திற் பேணப்படும் கோவையின் ஆதாரங்களுக்கமைய 1992 ஆம் ஆண்டிலிருந்து தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அடங்கிய பொதுமக் கள் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு புதியயாப்பு விதிகள் உருவாக்கப்பட்டு அப்பிரதேச மக்களாலேயே அவ்வாலயம் நிர்வகிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகப் பணிப்பிற்கமைய, தற்காலிக ஏற்பாடாகவே திணைக்களம், இந்து கலாசார நிதியம், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் அடங்கிய பரிபாலன சபை ஒன்று உருவாக்கப்பட்டு இவ்வாலயம் நிர்வாகிக்கப்பட்டு வருகின்றது.

சட்டபூர்வமாக இவ்வாலயத்தை அரசு பொறுப்பேற்றுள்ளது என்பதும் ஆலய நிதியை அரசு கையாள்கிறது என்பதும் மிகவும் தவறான கூற்றுக்களாகும். ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்கும் சுற்றுச்சூழல் வசதிகளுக்குமாகவே ஆலய வருமானம் பயன்படுத்தப்படுகின்றது என்பதே உண்மையாகும்.

இப்பிரதேசத்தில் பொதுமக்கள் குடியேற்றம் முழுமைபெறும் போது இப்பிரதேசத்தைச் சேர்ந்த பொது மக்கள் பிரதிநிதிகளிடம் இவ்வாலய நிர்வாகம் கையளிக்கப்படவுள்ளது. அத்துடன் மிகுதியான ஆலய வருமானம் இப்பிரதேச நலன்புரிப் பணிகளான ஆதரவற்ற சிறுவர் கல்வி, முதியோர் இல்லங்களின் பராமரிப்பு போன்றவற்றுக்கு மட்டுமே முன்னுரிமையளித்து செலவிடப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாலயம் தொடர்பான நிர்வாக ரீதியான தீர்மானங்கள் அனைத்தும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருடன் கலந்தாலோசிக்கப்பட்டே மேற்கொள்ளப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது. (1)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 16 | 30.05.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி | : திருதியை முழுவதும் |
| நட்சத்திரம் | : மூலம் பி.ப. 3.12 வரை |
| சுபநேரம் | : 08.52 - 10.22 |
| ராகுகாலம் | : 04.22 - 05.52 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பொழுது கிளிநொச்சியிலும்

WESTERN UNION
மணி டிரான்ஸ்பர்

MMBL Money Master
நம்பிக்கை, நாணயம், பாதுகாப்பான சேவை

முகவர் நிலையத்தில் உலககெங்கும் இருந்து ஒரு சில நிமிடங்களில் பணத்தை பெற்றுக்கொள்ள இலகுவழி
மற்றும்
உள்நாட்டு, வெளிநாட்டு, பார்சல் சேவை, கடிதங்கள், உணவுப்பொருள்கள் VCD ,CD க்கள் என்பன உடனுக்குடன் அனுப்பிவைக்கப்படும். மற்றும் தொலைபேசி அட்டைகள், போட்டோ கொப்பி, பக்ஸ், (தொலைநகல்), லமினேற்றிங் இன்னும் பல சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

## குளோபல் மல்ரி சேவிசஸ்

கண்டி வீதி, கிளிநொச்சி. (கந்தசாமி கோயில் முன்பாக)
*T.P: 021 228 5300, Fax: 021 228 5301, Hot: 021 7200 233*
*e.mail: globalk2010@gmail.com*



## BUSவிற்பனைக்கு

IS UZU JOURNEY MODEL 60-XXXX
மிகவும் நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு. டொல்பினுக்கும் மாற்றலாம்.
என். ஆனந்தராஜா,
88, குருசோ வீதி, கண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.



## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1976 ஆம் ஆண்டு செவ்வாய் குற்றமற்ற, கிரகபாவம் 04, ஆயிலியம் நட்சத்திரம், UK P.R.உடைய மணமகனுக்கு படித்த அழகிய மணமகளை தேடுகிறார்கள்.
**தொடர்பு: 0777165082**



## தேவை

யாழ்.பிரதான வீதியில் இயங்கும் பிலிப்ஸ் நேசிங் ஹோம் இற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.
1. தாதிய உதவியாளர் [சுற்றாடலில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது], 2. ஒப்பரேசன் தியேட்டர் வேலை தெரிந்த தாதியர்/ தாதிய உதவியாளர், 3. சுத்திகரிப்பாளர் (பெண்), 4. மேற்பார்வையாளர் (ஆண்), 5. வரவேற்பாளர் (பெண்).
நேர்முகத் தேர்வு- ஞாயிறு *(30.05.2010)* மு.ப. 10 மணிக்கு.
இடம்: **பிலிப்ஸ் நேசிங் ஹோம்**
*(சிறைச்சாலை முன்பாக, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.)*


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமேஸ்வரி மகேசன்



வட்டுக்கோட்டை, மாவடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி பரமேஸ்வரி மகே சன் 25.05.2010 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Auditor நாகலிங்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற Income tax Assessor, S.M.மகேசனின் அன்பு மனைவியும் மற்றும் காலஞ்சென்ற வர்களான A.G.A சவுந்தரநாயகம், Dr. இராசதுரை, Income tax Assessor செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருக்கேசன் (கனடா), சந்திராணி (கனடா), சரோஜினி (கனடா), ஜெயந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் மோகனா, குலம், பரந்தாமன் ஆகியோரின் பாசமிகு மாமியும், மைதிலி, அகிலா, திவ்வியன், நிதிபன் ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Dr.செல்வத்துரை வீதி, சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
T.P. 021 300 7030

*தகவல்:*
திருமதி லீலாமணி இராசதுரை.

*(98867)*

## துரைராஜா தெய்வநாயகி

கருங்காலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா தெய்வநாயகி 27.05.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கந்தசாமி (உடையார்)-மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரைராஜாவின் அன்பு மனைவியும் சண்முகநாதன், தேவசாயினி, அன்னபூரணம், சிறீஸ்காந்தநாதன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெகதாம்பாள் (ஆசிரியர், கொழும்பு), உதயகுமார் (மின்சாரசபை, கொழும்பு), யோகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), ராஜேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனஞ் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்கிசை,
கொழும்பு.

*தகவல்:*
க.சிறீஸ்காந்தநாதன் (சகோதரன்).

*(98881)*

## தம்பு இராமசாமி கனகலிங்கம்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இராமசாமி கனகலிங்கம் இந்தியாவில் 26.05. 2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் நவமணியின் அன்புக் கணவரும் சிவதாயினி (CF, Sri Lanka), கௌசலன் (Hoston,USA) ஆகியோரின் பாசமிகு தந்தையும் முத்துலிங்கம் (Qatar), காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், யோகலிங்கம், அஞ்சலிங்கம் மற்றும் மகேஷ்வரி-இராஜசூரியர் (Canada), ஞானலிங்கம் (U.K), சோதியலிங்கம் (Canada), நவரட்ணலிங்கம் (Colombo), நாகேஷ்வரலிங்கம் (U.K) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இராஜரட்ணம், இராசமணி, காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், சீவரட்ணம் மற்றும் அழகரட்ணம், விஜயரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05. 2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் 32, கொலிங்வூட் பிளேஸ், வெள்ளவத்தையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக Mount Lavania பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

*(சி/5678668)*






நல்லூர்
## சரவணா ரெக்ஸ்
ரகங்கள் பலவிதம்! தரத்தில் முதலிடம்!!

- ★ இந்தியன் திருமணப் பட்டுச் சாறிகள்
- ★ இந்தியன் சில்க் சீக்குன்ஸ் சாறிகள்
- ★ இந்தியன் கொட்டன் சாறிகள்
- ★ இந்தியன் சில்க் சாறிகள்
- ★ இந்தியன் பன்சி சாறிகள்
- ★ இந்தியன் கொட்டன் பஞ்சாபிகள்
- ★ இந்தியன் கொட்டன் பஞ்சாபித் துணிகள்
- ★ இந்தியன் சில்க் பஞ்சாபித் துணிகள்
- ★ பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபித் துணிகள் மற்றும் பட்டுவேட்டிகள், ரி.சேட், சேட், என்பன மலிவான விலையில் நிறைந்த தரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

Saravana Tex
526,529,பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின்வீதி) சிவன்கோயில் அருகில் யாழ்ப்பாணம்.

குறிப்பு:
தினசரி காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை வியாபாரம் நடைபெறும்.


## பரிசளிப்பு விழா

கைதடி யூப்பிட்டர் கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கைதடி கயிற்றப்பிட்டி திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்வி நிலைய முதல்வர் சி.மதியழகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் கலந்து கொள்வார்.

(201-121)

## ஆண்டு விழா

கைதடி தெற்கு சனசமூக நிலையம் ஊடான சமூக முன்னெடுத்தல் குழுவின் ஓராண்டு நிறைவு விழா இன்று சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி தெற்கு சனசமூக நிலையக் கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

நிலையத்தலைவர் எஸ்.ஜெயராஜ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி நவரத்தினம் ரஞ்சனா, தென்மராட்சி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெகதீஸ்வரன் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

(1)

## சிங்கப்பூர் உயர்கல்வி; நாளை கருத்தரங்கு


சிங்கப்பூரில் உயர் கல்வி வாய்ப்புக்கள் என்னும் தலைப்பிலான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் யாழ்.ரில்கோ ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

சிங்கப்பூர் வளவாளர்களுடன் பிரபல கல்வியாளர்கள் இக்கருத்தரங்கில் கருத்துரை வழங்குவர்.

(1)

# மரண அறிவித்தல்

## வைரமுத்து மாணிக்கவாசகர் (மெக்கானிக்)



மயிலிட்டி, வீரமாணிக்கத்தேவன் துறையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, 2 ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து மாணிக்கவாசகர் (மெக்கானிக்) 27.05.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் பொன்னானராசாத்தியின் கணவரும் கேதீஸ்வரன் (உரிமையாளர், கேதீஸ் கேபிள் ரீ.வி.), மணிவண்ணன் (ஜீவா), காலஞ்சென்ற அன்பழகன் மற்றும் சுவர்ணா, மாலினி (சுவிஸ்), மணிசேகரன், யோகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும் விஜி, ஜெயந்தி, சியாமளா, சங்கர், தங்கன் (சுவிஸ்), ரெம்சி, விஜியாதேவி (லண்டன்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.
தொ.பே.: 0776682108

தகவல்:
மா. கேதீஸ்வரன் (மகன்).

*(96629)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







லண்டன் தமிழ் 'எயிட்' அமைப்பு யாழ்.போதனாவைத்தியசாலைக்கு குழந்தைகளுக்கான மஞ்சள் காமாளை நோய்ச் சிகிச்சைக் கருவியான மின்குமிழ் லாம்பை அண்மையில் வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் லயன் இம்மனுவல் யோசெப், குழந்தைகள் வைத்திய நிபுணர் எஸ்.கே.அருண்மொழியிடம் உபகரணங்களைக் கையளிப்பதையும் போதனா வைத்தியசாலையின் தேவைகள் குறித்து லயன்ஸ் கழக உறுப்பினர்கள், பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# அரச உத்தரவாதமுடைய தேசிய சேமிப்பு வங்கியிலே சிறந்த சேவையை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்

## தேசியசேமிப்பு வங்கிப் பொதுமுகாமையாளர் சுனில் பெரேரா தெரிவிப்பு

சங்கானை, மே 29

தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிடும் மக்களின் பணத்துக்கு அரச உத்தரவாதம் உண்டு. சில தனியார் வங்கிகள் போலல்லாது சிறந்த வங்கிச் சேவையை மக்கள் பெற்றுக்கொள்ள தேசிய சேமிப்பு வங்கியில் வாடிக்கையாளராக இணைந்து கொள்வதே சிறந்தது- என்று தேசிய சேமிப்பு வங்கியின் பொதுமுகாமையாளர் சுனில் பெரேரா தெரிவித்தார்.

அண்மையில் சங்கானையில் தேசிய சேமிப்பு வங்கியை நாடாவெட்டித் திறந்து வைத்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனதுரையில் கூறியவை வருமாறு:

வடக்கின் வசந்தத்திட்டத்தின்கீழ் திறக்கப்படும் 10 ஆவது தேசிய சேமிப்பு வங்கிக்கிளை இதுவாகும்.நாடளாவிய ரீதியில் 160 வங்கிக் கிளைகளையும், தபாற்கந்தோர், உப தபாற்கந்தோர் சேமிப்பு கிளையாக 4000 இற்கும் மேற்பட்ட கிளைகளை உள்ளடக்கியதாக தேசிய சேமிப்பு வங்கி உயர்ச்சி பெற்றுள்ளது. சர்வதேச அளவிலும் எமது வங்கியின் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. எந்த நாட்டில் இருந்தாலும் உடனுக்குடன் பணத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகளையும் தேசிய சேமிப்பு வங்கி நடைமுறைப்படுத்தி வருகிறது- என்றார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு, கிழக்கு வலய தேசிய சேமிப்பு வங்கியின் பொதுமுகாமையாளர் யூ.எல்.ரசித் தனதுரையில்- நீண்டகாலமாக சங்கானைப் பகுதியில் ஒரு தேசிய சேமிப்பு வங்கிக் கிளையைத் திறப்பதற்கு முயற்சித்தும் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் செயற்படுத்த முடியாமல் போய் விட்டது. இன்று இக்கிளையைத் திறப்பதில் பெருமகிழ்ச்சி அடைவதோடு, இப்பகுதி வாடிக்கையாளர்களுக்கும் எமது வங்கியின் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கவேண்டிய கடமையும் உள்ளது.

1972 இல் ஆரம்பிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி, இன்று நாட்டின் சகல பாகங்களிலும் தனது சிறந்த சேவையை அதன் 160 கிளைகள் மூலம் செயற்படுத்தி வருகிறது. அத்துடன் தபாற்கந்தோர், உப தபாற்கந்தோர்களை உள்வாங்கி இதன் மூலம் இவ்வங்கியின் சேமிப்பு ஊக்குவிப்புக்கள் தொடர்கின்றன எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் சங்கானை மல்லாகம் சந்தியில் இருந்து மங்கள வாத்தியத்துடனும், யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய முழக்கத்துடனும் வங்கிவரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். மாவட்டத்தின் கிளை முகாமையாளர்கள், வர்த்தகர்கள், வாடிக்கையாளர்கள் உட்படப் பலர் பங்குபற்றினர்.

(எ-29)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## விவரம் சேகரிப்பு

நாவற்குளி,மே 29

இராணுவத்தினரின் பயன்பாட்டிலுள்ள வீடுகள், பாடசாலைகள், வணக்கத்தலங்கள், வணிக நிலையங்கள், பொதுக்கட்டடங்கள், காணிகள் போன்றவற்றின் விவரங்களைப் பிரதேச செயலர்கள் திரட்டி வருகின்றனர்

கிராம அலுவலர்கள் இவை தொடர்பான விவரங்களைச் சேகரித்துப் பிரதேச செயலர்களுக்கு அறிக்கையிடும் பணியை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் கடந்த 15 வருடங்களாக நிலை கொண்டுள்ள இராணுவத்தினரால் பொதுமக்களின் பாவனைக்குரிய இடங்களை மீளக் கையளிக்கும் பூர்வாங்க நடவடிக்கைகள் பெரிதும் வரவேற்பைப் பெற்றுள்ளன. இராணுவத்தினர் நிலை கொள்வதற்காக மாற்று ஏற்பாடாக அரச காணிகள் பற்றிய விவரம் திரட்டப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ-121)

# வேலணைப் பிரதேச செயலகம் நடத்திய கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

வேலணை, மே 29

வேலணைப் பிரதேச செயலர் பிரிவு 2010 ஆம் ஆண்டுக்கான தேசிய இலக்கியக் கலைப் பெருவிழாவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் விவரம் வருமாறு:

**கனிஷ்ட பிரிவு- கவிதை**

1ஆம் இடம்- அ.கவியரசன் (புங்குடுதீவு மகா வித்தியாலயம்), 2ஆம் இடம்- கு.லோஜினி (வேலணை மேற்கு, நடராஜா வித்தியாலயம்), 3ஆம் இடம்- க.சுவஸ்திகா (வேலணை மத்திய கல்லூரி).

**சிறுகதை**

1ஆம் இடம்- க. நிறோஜா (வேலணை மேற்கு, நடராஜா வித்தியாலயம்), 2ஆம் இடம்- யோ. மொறின் சண்சிதா (புங்குடுதீவு மகா வித்தியாலயம்), 3ஆம் இடம்- தே.மேரி கொண்சில்டா (புங்குடுதீவு மகா வித்தியாலயம்).

**பாட்டு**

1ஆம் இடம்- ச. ஜெயமதி (வேலணை மத்திய கல்லூரி), 2ஆம் இடம்- ஜெ. சாளினி (வேலணை மத்திய கல்லூரி), 3 ஆம் இடம்- க. சுவஸ்திகா (வேலணை மத்திய கல்லூரி).

**கட்டுரை**

1ஆம் இடம்- த. தேனுஜா (வேலணை மேற்கு, நடராஜா வித்தியாலயம்), 2ஆம் இடம்- சி.கஜேந்தினி (வேலணை மேற்கு, நடராஜா வித்தியாலயம்), 3ஆம் இடம்- யே. சரண்ஜா (புங்குடுதீவு மகா வித்தியாலயம்).

**சிரேஷ்ட பிரிவு -கவிதை**

1ஆம் இடம்- சி.தர்சிகா (வேலணை மத்திய கல்லூரி), 2ஆம் இடம் -சி.ஜெயதர்சினி (வேலணை மத்திய கல்லூரி),3ஆம் இடம்- சு.கஜாயனி (வேலணை மத்திய கல்லூரி).

**சிறுகதை**

1ஆம் இடம்- செ. திரிக்ஷனா ( வேலணை மத்திய கல்லூரி), 2ஆம் இடம்- அ.சிந்துஜா (வேலணை மத்திய கல்லூரி), 3 ஆம் இடம்- ச. அனுசா (புங்குடுதீவு மகா வித்தியாலயம்).

**பாட்டு**

1ஆம் இடம் -கு.மகிந்தன் (வேலணை மத்திய கல்லூரி), 2ஆம் இடம் - த.வைதேகி (வேலணை மத்திய கல்லூரி), 3ஆம் இடம்- தே.நிதர்சனன் (வேலணை மத்திய கல்லூரி).

**கட்டுரை**

1ஆம் இடம்- நா. பிரதீபன் (வேலணை மத்திய கல்லூரி) ,2ஆம் இடம்-த.வைதேகி (வேலணை மத்திய கல்லூரி),3ஆம் இடம்- க.நிர்மலா (வேலணை மத்திய கல் லூரி).

இதேவேளை திறந்தபிரிவில் கவிதை, சிறுகதை, பாட்டு ஆகிய மூன்று நிகழ்வுகளிலும் ரேணுகா இரத்தினசிங்கம்- வேலணை மேற்கு என்பவர் முதலிடத்தைப் பெற்றுள்ளார். (எ-167)

# தாகத்துக்குத் தண்ணீர் கிடைக்க விழியிழந்தோருக்கு வழி பிறக்குமா?

கைதடி, மே 29

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடியில் அமைந்திருக்கின்ற தொழிற்பூங்காவில் தங்கி இருப்போர் குடி நீருக்காக அங்கு பெரும் அலைச்சல்களையும் அவலங்களையும் சந்திப்பதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி தொழிற்பூங்காவில் இளைஞர்கள், யுவதிகள் உள்ளிட்ட 20இற்கும் மேற்பட்ட விசேட தேவையுடையோர் வசித்து வருகின்றபோதிலும் அவர்களுக்கான குடி தண்ணீர், இருநூறு மீற்றர் தூரத்தில் இருந்து கற்கள் நிறைந்த சீரற்ற வீதியூடாகத் தடுமாறிய நிலையில் அவர்கள் எடுத்து வருவதாகவும் சில வேளைகளில் அவர்களில் சிலர் வீதிகளில் வீழ்ந்து விபத்துக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை "மனதுருக்கும் இலங்கை" எனும் நிறுவனம் இவர்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக ஒரு லட்சம் ரூபா செலவில் குழாய்க்கிணறு ஒன்றைத் தோண்டியபோதும், குழாய்க்கிணற்று நீர் உவர்த்தன்மை கொண்டதாக இருப்பதாகவும் கடவுளே தம்மை புறக்கணிப்பதாகவும் அங்கு வசிக்கும் விசேட தேவையுடையோரால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இவ்விடயத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் உரிய கவனமெடுத்து இவர்களுக்கான குடிதண்ணீரைக் குழாய் மூலம் பெற்றுத்தர முன்வர வேண்டும் எனவும் அத்துடன், இவர்களின் அங்கக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கூடிய நவீன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் எனவும் கைதடியிலுள்ள பொது அமைப்புக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-288)

# சீரழியும் இளைய சமூகத்தினரிடையே முன்மாதிரியாக கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தினரின் குருதிக்கொடை!

## வைத்திய அதிகாரி பாராட்டு

கைதடி, மே 29

ஆண்டு விழாக்கள் என்ற பெயரில் களியாட்டங்களையும், பண்பாடுகளைச் சீரழிக்கின்ற கலை நிகழ்வுகளையும் நடத்தி வருகின்ற இன்றைய இளைய தலைமுறையினர் மத்தியில் சமூகத்தின் தேவையை அறிந்து, உணர்ந்து வளர்மதி சனசமூக நிலைய உறுப்பினர்கள் செய்யும் இக்குருதிக் கொடை மகத்தானதும் மரியாதைக்கு உரியதும் ஆகும்.

இவ்வாறு கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 51ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நிலைய அங்கத்தவர்களால் வழங்கப்பட்ட குருதிக் கொடை நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்திய அதிகாரி கே. விஜயதாசன் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் உரை நிகழ்த்துகையில்:

இன்று எம்மைப் பொறுத்த வரையில் பொதுப் பணிகள் செய்வதில் எமது இளைய சமூகம் பின்நிலையில் நிற்கின்றது. இது மாறவேண்டும். இல்லையேல் மாற்றியமைக்க வேண்டும். சமூகத்திற்கு ஒவ்வாத நிகழ்வுகளை நடத்தவே இளைஞர்கள் மிக ஆர்வமாகவுள்ளார்கள். சமூக விழிப்புணர்வின்மை, பெரியோர்களின் அறிவுரை இல்லாமை போன்றனவே இத்தாக்கத்துக்கான காரணங்களாகும்.

இன்று இச் சனசமூக நிலையத்தில் இளைஞர்களே இதுவரை காலமும் குருதிக் கொடை செய்தார்கள்.இம்முறை முதன்முறையாக யுவதி ஒருவரும் அவர்களுக்குப் போட்டியாக குருதி வழங்க வந்திருப்பது ஒரு வரவேற்கத்தக்க நிகழ்வாகும். இது ஒன்று பலவாக உருவாக வாய்ப்பை ஏற்படுத்தும். இந்தக் குருதிக் கொடை நிகழ்வு ஏனைய சனசமூக நிலையங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகவும்,ஒரு போட்டியாகவும் இருக்கும்- என்றார்.

நிலையத் தலைவர் சி.கந்தையா தலைமையில் நடைபெற்ற இக்குருதிக் கொடை நிகழ்வில் பெருந்தொகையானோர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக் கொடையை வழங்கினர். (எ-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டகப்புலம்
# புனித அமலோற்பவ மாதா ஆலயப் பெருவிழா
## காலம்: 31.05.2010



**காலை 9.00 மணியளவில் விழா திருப்பலி ஆரம்பமாகும்.**

கடந்த ஆறு ஆண்டுகளுக்குப் பிற்பாடு மாதாவின் விழா நடைபெற இறையருள்பாலித்திருப்பதால் மாதாவின் அருளாசி பெற்றிட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழாவிற்கு செல்வதற்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

செல்லவிரும்புவோர் 31.05.2010 அன்று காலை 7.00 மணியளவில் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய முன்றலில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பக்தர்களின் நன்மை கருதி இராஜ வீதி , பருத்தித்துறை வீதி ஊடாக பேருந்துகள் பயணிக்கவிருப்பதால் இவ்வழிகளில் இடையில் இருந்து பயணிக்கவிரும்புவோர் கீழ் காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

0212223302
0773671545

பங்குத்தந்தையும்,
பங்குமக்களும்.

## குடித்தொகை மதிப்பீட்டு மாநாடு

நாவற்குழி, மே 29

குடித்தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி வித்தியாரட்ண அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

2011ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள குடிமதிப்பீடு தொடர்பான பூர்வாங்க ஏற் பாடுகளைச் செய்யும் வகையில் இவரது வருகை அமைந்திருந்தது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் இது தொடர்பாக நடைபெற்ற மாநாட்டில் அரசாங்க அதிபர், பிரதேசசெயலர்கள், புள்ளி விவர அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ-121)

### வீடு வாடகைக்கு உண்டு

சுதுமலை மத்தியில் இரண்டு வீடுகள் சகல வசதிகளுடன் வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல: 0770220314

### கோழிக் குஞ்சு விநியோகம்

தடுப்பு ஊசிபோடப்பட்ட NO.1 புறொயிலர் குஞ்சு 07.06.2010 இல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யும் வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப் படும். தொடர்புக்கு:- நல்லூர் பாம் சென்ரர், 191,முருகேசர் லேன், நல்லூர்.T.P: 021 222 6944

## 20 ஆவது ஆண்டு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும்

வலி வடக்கு,மே 29

யாழ்ப்பாணம் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சீனியர் லேன், கலட்டியில் அமைந்துள்ள தலைமையலுவலகக் கட்டடத்தில் விளையாட்டுக் கழகத் தலைவர் கெ.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவர் மு. சந்திரகுமார் உட்பட மற்றும் பலர் கலந்துகொள்ளவுள்ளார்கள். (எ-86)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள P-4 Computers, Monitor மற்றும் கணனிப் பொருள்கள் என்பன உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு.

(விலை 14750/= மட்டுமே)

தொடர்பு: Sky Computers System
162, Main Street, Jaffna. T.P.: 021 222 1417

### மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

இடம்: சங்க மண்டபம்
காலம்: 10.06.2010 முற்பகல் 10.30 மணி
விடயம்: புதிய நிர்வாகத்தெரிவு

மேற்படி சங்கத்தின் நிர்வாகத் தெரிவுக் கூட்டம் வி.த. 18 (1) இற்கு அமைவாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.கு.அருந்தவநாதன் அவர்கள் தலைமையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தல் சங்க அங்கத்தவருக்கான தனியான அழைப்பிதழாக ஏற்றுக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பொ.கோகுலன்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாசமிகு நண்பர்களான கு.இராயப்பு (கலையார்வன்) அவர்களின் அன்புத் துணைவியாரும் றோமான் கில்பேட் அவர்களின் அன்புச் சகோதரியுமான

**திருமதி இராயப்பு லூர்துநாயகி**

அவர்களின் மறைவால் ஆறாத் துயரடைந்துள்ளோம். இவரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக இறைவனைப் பிரார்த்தித்துப் பிரிவால் கலங்கித் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி-567994) நண்பர்கள்.

### விற்பனைக்கு

பால் கறக்கக் கூடிய சணல் ஆடு மற் றும் பன்ரம் கோழிகள் Shark Gold கொக் கற்றில் குருவிகள் விற்பனைக் குண்டு.

தொடர்பு: இல. 169, விவசாய வீட முன்பாக கொக்குவில் கிழக்கு, கொக்குவில் (ஆடியபாதம் வீதி)

### வேலைக்கு ஆள் தேவை

(விற்பனையாளர்)
யா/மாநகர எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்
11-A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0212223857

### German, Swiss மொழி வகுப்புகள்

தமிழ் மொழிபெயர்ப்புடன் நடை பெறுகின்றது.(Germanyயிலிருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது)
தொடர்புகளுக்கு - 10, Palaly Road, Jaffna. T.P. 0771604823

### நம்பினால் நம்புங்கள்

சகல விதமான நோய்களும் 3-6 மாதத்திற்குள் பக்க விளைவுகளற்ற இயற்கை உணவுக் குளிசை மூலம் முற்றாகக் குணப்படுத்தலாம்.

Tiens Health and Wealth Care Centre
54, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0778449890

### புறொயிலர்/பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு

முதற்தர புறொயிலர் மற்றும் பேட்டுக் குஞ்சுகள் (சிவப்பு முட்டைக் கோழி) உடன் விற்பனைக்கு.
01.06.2010 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும்.
பதிவுகளுக்கு உடன் அழையுங்கள்.
தொ.பே:- 0217200616

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாலசிங்கம் இரத்தினசிகாமணி



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் இரத்தினசிகாமணி 22.05.2010 அன்று காலமானார்.

அன்னார் கந்தையா - இராசமலர் தம்பதியரின் அன்பு மகளும், பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், சோமசுந்தரம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தவயோகராஜன் (லண்டன்), கமலராஜன் (கனடா), குகதாஸ் (லண்டன்), ஜெயதர்சன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரேணுகா (லண்டன்), சுஜிதா (கனடா), பிரியதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், லண்டனில் வசிக்கின்ற ரீசிபன், கரிசா, கபிசா, அக்சயா, கனடாவில் வசிக்கின்ற அஜய், சஜீவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செல்வரட்ணம் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, அண்ணாமலை, துரைசிங்கம், வரதராஜா மற்றும் மனோன்மணி (கனடா), சந்திரவதனா, பராசக்தி (கனடா)ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்துத்துறை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகரத்தினம் வீதி,
வட்டுக்கோட்டை. (98854)

தகவல் :
குடும்பத்தினர்.

### தங்கராசா நிர்மலானந்தராசா



பண்டகை, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கல்லுவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா நிர்மலானந்தராசா 27.05.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சுலோசனாவின் அன்புக் கணவரும், நிஷாந்தன், முகுந்தன், குமுதா, உஷாந்தன், விஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.05.2010) சனிக்கிழமை மு.ப. 11மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லுவம்,
கரணவாய் மேற்கு.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம்' என்ற தொனிப்பொருளில் வடமாகாண பிரதேசங்களில் கிராம மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களின் மாகாண மட்ட கண்காட்சி நேற்று ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஆரம்ப நிகழ்வின்போது வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி தலைமையுரை நிகழ்த்துவதையும், அதிதிகளாகக் கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து நாடாவெட்டிக் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதனையும் விருந்தினர்கள் கண்காட்சியை ஆர்வத்துடன் கண்டுகளிப்பதனையும் முதல் மூன்று படங்களிலும், காட்சிப்படுத்தப்பட்டிருந்த சேதன முறையில் வளர்க்கப்பட்ட வாழையின் 54 கிலோ எடையுள்ள வாழைக் குலையையும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

*(படங்கள்: ரட்ணம்)*




# ஜூன் மாத நடுப்பகுதியில் 175 நிரந்தர வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கிறது கியூடெக்

யாழ்ப்பாணம்,மே29

போருக்குப் பின்னரான மீளக் குடியமர்த்தல் திட்டத்தின் கீழ் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தினால் யாழ்.மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 175 நிரந்தர வீடுகள் ஜூன் மாதம் நடுப்பகுதியில் பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

அல்லைப்பிட்டியில் 65 வீடுகளும், யாழ்.நகரை அண்டியுள்ள பகுதிகளில் 60 வீடுகளும், நல்லூரில் 50 வீடுகளும், இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தலா 8.5 லட்சம் ரூபா பெறுமதியில் இந்த நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்தகால யுத்த அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட குடும்பங்களும், வீடற்ற நிலையில் குடியடர்த்தியாகவுள்ள குருநகர்ப் பகுதியில் வசிக்கும் குடும்பங்களும் வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகளாக உள்ளனர்.

இதேவேளை - 2004 இல் இடம்பெற்ற சுனாமிப் பேரலை தாக்கத்தின் பின்னர் முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வரை இதுவரை ஆயிரத்து 300 வீடுகளை பயனாளிகளிடம் கியூடெக் நிறுவனம் கையளித்துள்ளது. இந்த வீடுகள் தலா 8.5 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

(50-14)

# தென்கொரியாவில் நடக்கும் கணிதப் போட்டிக்கு வேம்படி மகளிர் மாணவி ஷரோன் வான்மதி



யாழ்ப்பாணம்,மே29

இவ்வருடம் இஞ்சொன், தென்கொரியாவில் நடைபெறவிருக்கும் அகில உலக கணிதப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் எட்டு மாணவர்களில் 5 ஆம் இடத்தை வேம்படி மகளிர் கல்லூரியில் 10 ஆம் ஆண்டில் பயிலும் செல்வி ஷரோன் வான்மதி குருபாதம் பெற்றுள்ளார்.

ஸ்ரீலங்கா கணித ஒலிம்பியாட் நிறுவனத்தினால் தேசிய மட்டத்தில் போட்டிகள் இம்மாதம் 22 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தில் பாடசாலை மட்டத்தில் தெரிவாகி 44 மாணவர்களிடையே போட்டி நடத்தப்பட்டு இம்மாதம் 25ஆம் திகதி முதல் 29 திகதி வரை தென் கொரியாவில் நடைபெறவிருக்கும் அகில உலக கணித போட்டிகளில் கலந்துகொள்ளும் 8பேர் கொண்ட தேசியகுழு தெரிவு செய்யப்பட்டது.

இக்குழுவில் முதல் 3 இடங்களையும் 7ஆவது இடத்தையும் கண்டி தர்மராஜா கல்லூரி மாணவர்கள் பெற்றது குறிப்பிடத்தக்கது.

யாழ்.பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் செல்வன் ஏ.ஜனாதன் 8ஆம் இடத்தைப்பெற்ற மூன்று மாணவரில் ஒருவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

(50)

# யாழ்.ஆஸ்பத்திரி 'எக்ஸ்றே' பிரிவின் பழுதடைந்த குளிரூட்டி சீரமைப்பு

## படப்பிடிப்புப் பணிகள் வழமைக்கு

யாழ்ப்பாணம்,மே29

யாழ்.போதனா வைத்தியசாலையில் 'எக்ஸ்றே' படப்பிடிப்புக்கு இருந்து வந்த தாமத நிலை தற்போது முற்றாக நீங்கியுள்ளது.

'எக்ஸ்றே' படப்பிடிப்பு அறை ஒன்றின் குளிரூட்டி இயந்திரம் ஒன்று பழுதடைந்தமையால் படப்பிடிப்புப் பணிகள் மந்த கதியிலேயே நடைபெற்று வந்தன.

தற்போது இந்த குளிரூட்டி திருத்தப்பட்டதையடுத்து 'எக்ஸ்றே' படப்பிடிப்புக்கு இருந்து வந்த சிரமங்கள் முற்றாக நீங்கியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(50-224)

# 'இ' முத்திரைக்கான நிவாரணம் இரண்டு மாதங்களாக இல்லை

யாழ்ப்பாணம்,மே29

இடம் பெயர்ந்தோர் முத்திரை வைத்திருப்போருக்குக் கடந்த மார்ச் மாதத்திற்குப் பின்னர் இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு மாத காலமாக இந்த நிவாரணம் தமக்கு விநியோகிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள மக்கள் இந்த நிவாரணத்தை மாதாந்தம் உரிய முறையில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர்.

இந்த நிவாரணத்துக்குரிய முத்திரை விநியோகிக்கப்பட்டுள்ளபோதும் நிவாரணப் பொருள் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(50-224)

# குப்பிளான் கிராம அபிவிருத்தி கட்டடத் திறப்பு விழா

வலி.வடக்கு,மே29

குப்பிளான் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குப்பிளான் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.கவாஸ்கர் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன், உடுவில் பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், யாழ். மாவட்ட செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ந.சு.ஜெயராஜன் உட்படப் பலர் பங்குபற்றுவர்.

(1-86)

# யோகர் சுவாமி ஞாபகார்த்த பரிசில் தினம் இன்று

யாழ்ப்பாணம்,மே29

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் நடத்தும் யோகர் சுவாமிகள் ஞாபகார்த்த பரிசில்தினம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யோகர் சுவாமிகள் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் எஸ்.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் பாடசாலை வேலைகள் பொறியியலாளர் கு.சிவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(50-224)

# தீர்வு குறித்துப் பேச நாம் எப்போதும் தயார் ஆனால் மஹிந்த அரசு தொடர்ந்து மௌனம்

## சாடுகிறார் விநாயகமூர்த்தி எம்.பி

யாழ்ப்பாணம்,மே29

தமிழ் மக்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்கும் நீதியான, நியாயமான, அரசியல் தீர்வு குறித்து பேசுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வேளையும் தயாராகவே இருக்கிறது. இது குறித்து கூட்டமைப்பின் தலைவர் ஏற்கனவே அறிவித்துவிட்டார். ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசும் இதுவரை சாதகமான பதில் எதனையும் கூறவில்லை. ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்து மௌனம் காத்து வருகின்றது.

இவ்வாறு கூறினார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

நேற்று முன்தினம் மாலை அவரது இல்லத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேற் கண்டவாறு தெரிவித்த அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு,

வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது தமது ஆணையை வழங்கி மக்கள் பிரதிநிதிகளாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை நாடாளுமன்றுக்கு அனுப்பியுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பாக அவர்களது பிரதிநிதிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று தேர்தல் காலத்தில் கூறியிருந்தார். எம்மைப் பேச அழைத்தால் நியாயமான தீர்வு குறித்து அவருடன் கலந்துரையாட நாம் ஆவலாக - தயாராக - இருக்கின்றோம். ஆனால் அவரிடம் இருந்து - அரசிடமிருந்து எவ்வித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

### தொடரும் துன்ப, துயரங்கள்

தமிழ்மக்கள் சொல்லொணாத் துன்ப துயரங்களை தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றனர். அதி உயர் பாதுகாப்பு வலயம் என்று கூறி மக்களின் வாழ்விடங்களுக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இதனால் 60 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

யுத்தம் இடம்பெற்றபோது குவிக்கப்பட்ட இராணுவத்தினர் தற்போதும் வடக்கு,கிழக்குப் பகுதிகளில் முகாமிட்டுள்ளனர்.

வன்னிப்பகுதியில் தற்காலிக காவலரண்களாக மாற்றப்பட்ட தற்காலிக இராணுவ முகாம்ங்கள் நிரந்தர முகாம்களாக விஸ்தரிக்கப்படுகின்றன.

### இப்போதும் இராணுவ ஆட்சியே

தமிழர் பகுதிகளில் இராணுவ ஆட்சியே இடம்பெறுகின்றது. ஆனால் சிவில் நிர்வாகம் இடம்பெறுவதாகக் கூறப்பட்டு வரு கின்றது. சிவில் நிர்வாக கூட்டமைப்புக்குப் பதிலாக இராணுவ நிர்வாக கட்டமைப்பே நடைமுறையில் உள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இன்னமும் உரியமுறையில் மக்கள் குடியமர்த்தப்படவில்லை. முறிகண்டிப் பகுதியில் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாடசாலை ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 250 இற்கும் அதிகமான குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளன.




அத்துடன் அனுராதபுரம் சலியபுரம் முகாம், பனாகொட இராணுவ முகாம், கொழும்பு ஸ்ரீலங்கா றெட் குவாட்டஸ் முகாம், நெளுக்குளம், தொழில்நுட்பம் கல்லூரி முகாம் என பல முகாம்களில் தமிழ் மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த முகாம்களில் யார் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர், எத்தனைபேர் என்ற விவரங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து கடந்த வாரம் வன்னிப்பிரதேசத்துக்குச் சென்று மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் நிலை குறித்து நேரில் அறிந்துள்ளனர். அவர்களுடன் இணைந்து என்னால் பயணிக்க முடியவில்லை. எனது உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதே அதற்குக் காரணமாகும்.

அத்துடன் நீண்ட நாள்களுக்கு முன்னராக திட்டமிட்ட நிகழ்வு ஒன்றுக்கு செல்ல வேண்டியிருந்தமையும் இதற்கு மற்றொரு காரணமாகும் - என்றார்.

(ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.பாதுகாப்புப் படையினரின் வெசாக் கொண்டாட்டம் நேற்று முன்தினம் இரவு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க ஆகியோர் மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதை மேல்வரிசையிலுள்ளமுதல் இரண்டு படங்களிலும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் யாழ்.மணிக்கூட்டு வீதியில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார வளைவையும் துரையப்பா விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ள 70 அடி உயரமான மலையையும், ஏனைய வெசாக் அலங்காரங்களையும் கீழ் வரிசையில் உள்ள படங்களில் காணலாம். (படங்கள்: ரட்ணம், நந்தன்)

# நகரப்புற பாடசாலைகளுடன் ஒப்பிட்டுச் சொல்லுமளவிற்கு சண்டிலிப்பாய் இந்துவின் கல்வி ஆளுமை விருத்தியடைந்துள்ளது

## பாராட்டு விழாவில் போராசிரியர் கிருஷ்ணராஜா புகழாரம்

யாழ்ப்பாணம் மே, 29

நகர்ப்புற பாடசாலைகளுடன் ஒப்பிடுமளவிற்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் கல்வி, ஆளுமை என்பன விருத்திபெற்றுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை இணைப் பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியின் உப அதிபர் கு.விமலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

'' யாழ்ப்பாண மக்களின் கல்விப் பாரம்பரியம் போற்றுதற்குரியது. எவ்வகையான இடர்வரினும் கல்வியை இழக்க விரும்பாதவர்களாக எம்மவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த வரலாற்றை திருப்பி விடக்கூடியதான , வீழ்த்தக்கூடியதான நிகழ்வுகள் பல தற்போது நடைபெறுகின்றன. மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தவனவாக கடத்தல்களும், கேளிக்கைகளும், கட்டுப்பாடில்லாத நடத்தைகளும் எமது பிரதேசத்தில் காலுன்ற முற்படுகின்றன.

இவற்றைத் தகர்த்து நமது சந்ததியை அறிவுசார் உலகை நோக்கிக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு. கிராமப்புறப் பாடசாலையாய் இருந்தபோதும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் கல்வி, ஆளுமை விருத்தி நகர்ப்புறப் பாடசாலைகளுடன் ஒப்பிடுமளவிற்கு வளர்ந்து வருவது பாராட்டக்குரியது- என்றார்.

கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தனது வாழ்த்துரையில் -

''பாடசாலைக் கல்வியில் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற முதலாவது தேசிய மட்டப் பொதுப் பரீட்சை தரம் 5புலமைப் பரிசில் பரீட்சை என்பதால் அதில் பெறும் சிறப்பான அடைவுமட்டமே எதிர்காலக் கல்வியைத் தீர்மானிக்கின்றது என்ற மனநிலை பெற்றோர் மத்தியில் இன்று காணப்படுகின்றது.

இதனால் அவர்கள் இப்பரீட்சைக்கு முக்கியத்துவம் கொடுத்து தமது பிள்ளைகளை ஊக்கப்படுத்தும் வகையில் செயற்படுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. எமது கல்லூரியின் பெற்றோர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எதனைக் கொடுத்தும் கல்வியைப் பெறவேண்டுமென்ற மனோநிலை மாற்றத்துக்குள்ளாகியிருக்கின்றார்கள். இதனால் ஆசிரியர்களின் செயற்பாடு இலகுபடுத்தப்படுகின்றது- என்று தெரிவித்தார்.

இந் நிகழ்வில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் 'வைகறை - 4' சஞ்சிகை வெளியீடும் ஆசிரியர் க.சிறிநந்தகோபன் எழுதிய 'எமது நல்வாழ்வு' நூல் வெளியீடும் இடம்பெற்றன. கல்லூரியின் பிரதி அதிபர் இ.ஆனந்தநடராசா, ஆசிரியை திருமதி ல.கிருஸ்ணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சித்திபெற்ற மாணவர்கள் பதக்கம் சூட்டி பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். உயர்புள்ளி பெற்ற மாணவி செல்வி ர.கிருத்திகாவுக்கு ஆசிரியர்களால் துவிச்சக்கர வண்டியொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (எ-9)

# கைதடியில் நாளாந்தம் அகழப்படும் கற்கள்

நாவற்குழி,மே 29

கோரதீவுக்கும் சங்குப்பிட்டிக்கும் இடையில் கடற்பரப்பில் பாலம் ஒன்றைக் கட்டுவதற்கென பெருமளவு கற்கள் கைதடிப்பிரதேசத்தில் இருந்து நாளாந்தம் கொண்டு செல்லப்படுவதாகக் கூறப்படுகின்றது.

நாவற்குழியூடாக கனரக வாகனங்களில் இவற்றை எடுத்துச் செல்வதைத் தினசரி காணமுடிகிறது.

கைதடி வடக்கு, மத்தி போன்ற கிராமங்களில் விளைந்து வைரம் ஏறிய கற்கள், கல்லுடைக்கும் இயந்திரத்தின் உதவியுடன் நாளாந்தம் அகழ்ந்தெடுக்கப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

கற்கள் உள்ள நிலமுள்ளவர்கள் அவற்றைப் பெருந்தொகைப் பணத்திற்கு விற்று வருமானமீட்டி வருகின்றனர். இயந்திரத்தின் உதவியுடன் மட்டுமே கற்களை அகழும் பணி நடைபெறுவதால் கூலித்தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு பெருமளவில் கிடைப்பதில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-121)

# திருத்தம் செய்யப்பட்ட பெயர்ப்பலகை நாவற்குழியில் மீண்டும் நடப்பட்டது




கைதடி, மே 29

நாவற்குழிப் பிரதேசத்தை அடையாளம் காட்டும் பெயர்ப்பலகையில் ''நாவந்குழி'' எனப் பிழையாக எழுதப்பட்டிருந்த செய்தி ஒன்று கடந்த 18 ஆம் திகதி உதயனில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இத்தவறின் தாக்கத்தை உடன் அறிந்துகொண்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உடனடியாகவே செயற்பட்டு பெயரைச் சரியான வகையில் திருத்தம் செய்து மீண்டும் வீதிப் பெயர்ப் பலகையை நாட்டியுள்ளனர். இவர்களின் இந்த உடன் நடவடிக்கையை பொதுமக்கள் பெரிது பாராட்டி வரவேற்றுள்ளனர்.

இப்படியான தவறுகளை மனதோடு ஏற்று உடன் திருத்தம் செய்யும் இவர்களைப் போல ஏனையோரும் நடந்தால் நமது பிரதேசம் விரைவில் வளம்பெறும். இதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மீண்டுமோர் பாராட்டு. (எ-288)

# திருட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்கு துண்டுப்பிரசுரம் மூலம் பொலிஸார் அறிவுறுத்து

நவாலி, மே 29

அண்மைக்காலமாக அதிகரித்துவரும் திருட்டுச் சம்பவங்களை அடுத்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் அப்பிரதேச மக்களுக்கு துண்டுப்பிரசுரம் மூலம் பல அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதில் யாழ். மாவட்டத்தில் யுத்த சூழல் நிலை முடிவடைந்து தற்போது திருட்டுச் சம்பவங்கள் அதிகளவு இடம்பெற்று வருவதாகத் தெரியவந்துள்ளது.

இப்பகுதியில் கடைகள் மற்றும் வீடு என்பவற்றை உடைத்துத் திருடுதல், சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியன காணாமல் போதல்போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இதற்கு எம்மால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றிச் செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது சரியாகப் பூட்டிய பின்னர் மீளவும் ஒருமுறை அதனை உறுதிப்படுத்தி விட்டுச் செல்லவும். நீங்கள் தினமும் வெளியே செல்வதானால் வீட்டில் ஒருவரை பாதுகாப்புக்கு விட்டுச் செல்லவும். நகருக்கு வரும் போது நீங்கள் செலுத்தி வரும் எந்த வாகனத்தையும் தரிப்பிட இடங்களில் நிறுத்தி பூட்டிவிடவும்.

வீட்டிலிருந்து வேறு நகருக்கு பஸ்ஸில் செல்வதானால் நீங்கள் அணிந்து வரும் தங்க நகைகளை மிகவும் அவதானமாக வைத்திருக்கவும்- மானிப்பாய் நகரிலுள்ள தங்கநகைகள் வியாபார நிலையங்கள் ஏனைய வியாபார நிலையங்கள் ஆகியவற்றிலுள்ள பொருள்களை மிகவும் பத்திரமாக வைத்துப் பூட்டிவிட்டுச் செல்லவும்.


மேலும் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத வீதிகளில் செல்வதைதவிர்க்கவும்- இவ்வாறு இப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபாதைப் பிணங்களாக காத்திருக்கும் மக்கள்

அண்ணா, என்ட அப்பான்ர பேரையும் எழுதுங்கோ எனக் கலங்கிய கண்களுடன் வருகிறாள் ஒரு 7 வயதுச் சிறுமி.

52 வயதான அவளுடைய அப்பா இப்போது அவளுடன் இல்லை. புலி உறுப்பினர் பட்டியலில் அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். தடுப்பில் வைக்கப்பட்டிருப்பவர்கள் விவரங்களைச் சேகரிக்கிறேன் என்ற எண்ணத்தில், தன் தந்தையும் மீட்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துவிடுமோ என்ற ஆதங்



கத்தில் அவசரமாக ஓடிவந்து மூச்சிரைக்க அவள் தன் முறைப்பாட்டைப் பதிவு செய்கிறாள்.

பெனடிக் சில்வா என்கிற அவளது தந்தைக்கு மொத்தம் 7 பிள்ளைகள். வீட்டின் ஒரே உழைப்பாளி அவர்தான். குடும்பம் நிர்கதியாகி வாழும் வழி தெரியாது திக்கித்து நிற்கிறது.

கிட்டத்தட்ட வயோதிபத்தை எட்டிவிட்ட அந்த மனிதரை எப்போது, எப்படி, யார் மீட்பார்கள் அது வரைக்கும் அந்தக் குடும்பத்தை யார் காப்பாற்றுவார்கள் இது ஒரு கடுகளவு உதாரணம் தான். வன்னி மண் முழுவதும் இப்படி ஒவ்வொருகிராமத்திலும் குறைந்தது 15 குடும்பங்களாவது ஒருவரை தடுப்புக் கம்பிகளுக்குப் பின்னால் விட்டு வந்துள்ளது.

அவர்களது உள்ளமும் தேடலும் அந்த கம்பிகளுடன் அலைந்து திரிய நடைப்பிணங்களாக உடலங்கள் மட்டும் கிராமங்களில் அலைந்து திரிந்து கொண்டிருக்கின்றன.

ரிச்சர்ட் ராஜன் சுரேதினிக்கு (31) மூன் பிள்ளைகள். மூத்த பிள்ளைக்கு வயது 10, கடைசிப் பிள்ளைக்கு 3 வயது. கணவர் ராஜன் (32) தடுப்புக் காவலில். எப்போதுவிடுவிக்கப்படுவார் என்பது தெரியாது.

ஒரு காலத்தில் போராளியாக இருந்தவர்' பின்னர் விலகி வந்து திருமணம் செய்து மூன்று பிள்ளைகளுக்கும் அப்பா ஆகிப் போனாலும் தடுப்பில் இருந்து மீள்வதற்கு அவையெல்லாம் போதிய மனிதாபிமானக் காரணங்களாக இல்லை.

ஏற்கனவே காலில் காயப்பட்டுள்ள அவர் ஊன்றுகோல் உதவியுடன்தான் நடக்கிறார்என்பதும் அவரை விடுவிக்க சிறந்த காரணமாக அதிகாரிகளுக்குப் படவில்லை.

நெலுக்குளம் முகாமில் அவர் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார். காயக்காரர்கள் விடுவிக்கப்படுவார்கள் என சொல்லப்பட்ட போதும் அவர் இன்னும் முகாமிலேயே சிறையிருக்கிறார் என்கிறார் அவரது மனைவி.

அவரது கடைசிப் பிள்ளைக்கு இப்போதெல்லாம் அடிக்கடி மூச்சுத் திணறல் நோய் ஏற்படுகிறது.

நாங்கள் முள்ளி வாய்க்கால் வரைக்கும் போய் வந்தனாங்கள். ஷெல் அடி, குண்டுச் சத்தங்கள் எண்டு பயந்து பயந்து இப்பவெல்லாம் பிள்ளைக்கு அடிக்கடி மூச்சடங்கிப் போகுது. அவரும் கூட இல்லாமல் இதுகளை வச்சு எப்படிக் காப்பாத்தப் போறன் ஒரு வருமானமும் இல்லை என்கிறார் சுரேதினி.

சின்னப்பண்டிவிரிச்சானில் அவர்களுக்கு ஒரு மண் வீடு இருந்தது. இப்போது அது இருந்த இடம் தெரியாது.

கொடுத்த தரப்பாளையும் தடிகளையும் வைத்து தற்காலிகக் கொட்டில் கூட அமைக்க முடியாத நிர்க்கதியில் கூரையுடன் இருந்த அரசு அலுவலகம் ஒன்றில் அடைக்கலம் நாடியிருக்கிறார்கள் அந்தத் தாயும் குழந்தைகளும்.

அந்தக் கிராமத்தில் நின்றிருந்த நேரத்தில் மட்டும், அந்தோனி ஜேம்ஸ் மரியநாயகம் (24), ஜேம்ஸ் அன்ரனி குரூஸ் (26), ஜென்சி ராணி (21), பெனடிக் அன்ரனி யோகேஸ்வரன் (38), அற்புதராசா நிமல்ராஜன் (25), ஜேம்ஸ் மனோஜ் பிரதி (21), ம.அமலதாஸ் (35) ஆகியோர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்கிற தகவல் பதிவு செய்யப்பட்டது.

அவர்களில் சிலர் ஏற்கனவே காயமடைந்துள்ளார்கள். எல்லோரும் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்பது பற்றி நிச்சயமான தகவல் ஏதும் தெரியாது.

உறவுகளின் வரவுக்காக காத்திருக்கும் அவர்கள், தங்கள் கணவன்மாரையும் பிள்ளைகளை யும் விடுவித் துத்தருமா மீண்டும் மீண்டும் ஒவ்வொரு கிராமத்திலும் கண்ணீருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை முன்வைக்கிறார்கள்.

3

மீளக்குடியமர்ந்த இடத்தில் வசதிக் குறைவுகள் மட்டுமே அந்த மக்களின் பிரச்சினை என்றில்லை. தடுப்பில் உள்ள தன்து கணவரைச் சென்று பார்த்து வரு வது பெரும் கஷ்டமாக இருக்கிறது சுரேதினிக்கு.

பிள்ளையளை தனிய விட்டுட்டுப்

## வன்னி வலம்

போக ஏலாது. அதுகளப் பாத்துக் கொள்ளுறத்துக்கு ஒருத்தரும் இல்லை. வவுனியாவுக்கு ஒருக்காப் போய் வாறத்துக்கு



ஏகப்பட்ட செலவாகுது என்றார் சுரேதினி. தடுப்பு முகாமில் உள்ளவர்களைச் சென்று பார்த்து வருவதற்கென செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஒரு தொகைப் பண உதவி வழங்குகிறது.

ஆனால், தடுப்புக் கைதிகள் ஒரு முகாமில் இருந்து இன்னொரு முகாமிற்கு மாற்றப்படும் போது, புதிதாக மாற்றப்பட்ட முகாமில் உள்ள காவல் துறையினரின் அல்லது படை ஆட்களின் உறுதிப்படுத்தல் கடிதம் கொண்டு வந்து கொடுத்தால் மட்டுமே பண உதவியைப் பெற முடியும் என்ற நிலை.

பலர் இந்த ஒரு வருட காலத்திற்குள் மூன்று நான்கு இடங்களுக்கு மாற்றப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஓமந்தை, பம்மைமடு, தருமபுரம், வெலிக்கட, [illegible] இடங்களில் [illegible] உள்ளன.



காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் இரு வகையினர் உள்ளனர். பலர் வவுனியா மாணிக்கம் பண்ணை முகாம்களில் இருந்தபோது கைது செய்யப்பட்டவர்கள். சிலர் அந்த முகாம்களில் இருந்து தமது கிராமங்களுக்குத் திரும்பிய பின்னர் கைது செய்யப்பட்டவர்கள்.

இவ்வாறு கிராமங்களுக்குத் திரும்பிய பின்னர் கைது செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர் அவர்களைச் சென்று சந்தித்து வருவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உதவிப் பணம் எதனையும் வழங்குவதில்லை என்கிறார்கள் மக்கள்.

சோபாவின் (27) கணவர் சிறிகுமார் கிராமத்திற்குத் திரும்பிய சமயத்தில் கடந்த ஆண்டு கார்த்திகை 26ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

பம்பைமடு தடுப்பு முகாமில் அவர் வைக்கப்பட்டிருந்தார். இந்த மே மாதம் 3ஆம் திகதி களுத்துறைக்கு ஏற்றப் போவதாக அவருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது அவர் எந்த இடத்தில் தடுப்புக் காவலில் இருக்கிறார் என்பது சோபாவுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை.

ஏனெனில் கடந்த இரண்டு வாரங்களாக அவர் கணவரைச் சென்று பார்க்க வில்லை.

ஒரு தடவை போய் வாறதெண்டால் 3,000 ரூபா தேவைப் படுது. சின் னப் பிள்ளையளை தனிய விட்டுட்டும் போக ஏலாது. அதுகளையும் கொண்டு போறதால் செலவு கூடத்தான்.

எங்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதே சக் குழுவும் காசு தராது. முகாமில் இருந்து இல்லாமல் பிறகு பிடிச்சவை எண்ட தால எங்களுக்கு காசு தாரதில்லை. வருமானம் ஒண்டும் இல்லாத நிலை யில் எப்படி மாசத்துக்கு இரண்டு தரம் போய் அவரைப் பாக்க முடியும் என் கிறார் சோபா.

அவருக்கு ஐந்து பிள்ளைகள். மூத்த பிள்ளைக்கு 9 வயது' கடைசிப் பிள் ளைக்கு ஒன்றரை வயது.

நிவாரணமும் நிறுத்தப் போறதாச் சொல்லுறாங்கள். அப்பிடிச் செய்தால் நாங்கள் பட்டினி கிடந்துதான் சாக வேணும். இப்பவும்கூட தாற நிவார ணத்தில பிடிச்சு வைச்சிருக்கிற ஆக் களின்ட பெயரை வெட்டிப் போட்டுத் தான் தருகினம். சோபாவின் கவலை களுக்கு எப்போது முடிவு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சின்னப் பண்டிவிருச்சானில் இருந்து மன்னார் மாவட்டத்தின் ஈச்சில வக்கை கிராமத்தை அடைகிறார்கள்.

பள்ளமடு, சன்னாய், புலக்காடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 113 குடும்பங்கள் ஈச்சிலவக்கையில் மீண்டும் ஒரு இடைத்தங்கல் முகாம் அமைத்து இருக்கிறார்கள். அவர்கள் 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் குடியிருந்த இடங்கள் முஸ்லிம் மக்களின் காணிகள் என்பதால் [illegible]. அந்த இடங்களில் [illegible] மீளக்குடியமர்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பதிலாக சன்னாயில் காணி தருவதாக அவர்களுக்கு உறுதிஅளிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இன்னும் காடு துப்புரவு செய்து கொடுக்கப்படவில்லை. கடந்த பங்குனி மாதம் மீள்குடியமர்வுக்காக வந்த அவர்கள் தற்போது ஈச்சிலவக்கையில் இடைத்தங்கல் முகாம் ஒன்றை தாமே அமைத்துக் கொண்டு தங்கியிருக்கிறார்கள்.

15 நாள் தங்கி இருங்கோ. உங்களுக்கு காணி ஒதுக்கி அங்க கொண்டு போய் விடுறம் என் சொல்லிச் சென்ற அதிகாரிகள் எப்போது வருவார்கள் என்ற காத்திருப்பில் கழிகிறது அவர்களது காலம்.

சன்னாயில் காணி ஒதுக்கப்பட்டாலும் அங்கு பெரும் பிரச்சினை இருக்கிறது என்கிறார்கள் மக்கள். அங்கு படைத்துறைப் பயிற்சி முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதால் சன்னாய் பெரிய குளத்தைத் திறந்துவிட முடியாது என இராணுவம் திட்டவட்டமாகக் கூறிவிட்டதாம். அப்படி இருந்தால் எப்படி விவசாயம் செய்வது என கேட்கிறார்கள் மக்கள்.

அந்தக் குளத்தை நம்பித்தான் விவசாயம், மீன்பிடி எல்லாம் இருந்திருக்கிறது. ஆனால் 4 வருடத்திற்கு குளத்திற்கு மக்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என இராணுவம் கூறிவிட்டதாம்.

கம்பிகளால் தயாரிக்கப்பட்ட தற்காலிக கூரை அமைப்பு ஒன்றை சோ்வா அமைப்பு வழங்கி இருக்கிறது. அதனை தரப்பாள் தடுப்பால் சுற்றி அடைத்து விட்டு விடியலுக்காக காத்திருக்கிறார்கள் அந்த மக்கள். தடுப்பில் உள்ளவர்கள் விடயம் தொடர்பாகவும் ஏனைய மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் அரசுடனும் வெளிநாடுகளுடனும் உதவி அமைப்புக்களுடனும் பேசி தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதாக உதி அளித்திருக்கின்றார்கள் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

**- செரியன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



மனதிற்கு சங்கடம் தரும் செய்தியைக் கேட்கலாம். தொடங்கிய காரியம் ஒன்றை பாதியில் விட்டு விடுவீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் வாக்குவாதங்கள் செய்ய நேரிடலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றுமல் இழுத்தடிக்கலாம். வீண் அலைச்சல்களால் வெறுப்பு, விரக்தி உண்டாகும்.

### இடபம்




கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை ஓரம் கட்ட நினைப்பீர்கள். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறலாம். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். கூட்டு முயற்சிகளில் வெற்றி பெறும் நாள். நட்பு வட்டம் விரிவடையும்.

### மிதுனம்



உறவினர் ஒருவர் கேட்ட உதவியை மறுக்காமல் செய்வீர்கள். உடன் பிறப்புக்கள் மீதான பாசம் அதிகரிக்கும். சிரமம் இல்லாமல் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். வீட்டுக்குத் தேவையான சில பொருள்களை வாங்குவீர்கள். வெளியூரில் வசிக்கும் ஒருவர் உங்களை தொடர்பு கொண்டு முக்கிய விஷயமாகப் பேசலாம்.

### கடகம்



குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். சுய தொழில் புரிவோருக்கு வருவாய் அதிகரிக்கலாம். முயற்சிகளில் சிறு தடை, தாமதங்களைச் சந்தித்தாலும் இறுதியில் வெற்றி பெறுவீர்கள். அரசியல்வாதிகளை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். இறை வழிபாடு அமைதி தரும்.

### சிங்கம்



பிடிவாதமான செயற்பாடுகளை தவிர்க்க வேண்டும். கடன் மிகுதிகளை கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்போடு நடந்து உங்களுக்கு பெருமை சேர்ப்பர். கலைத்துறையினர் எதிர்பார்த்த புதிய வாய்ப்புகளைப் பெறலாம். உறவினருக்கு தெரிந்த ஒருவர் உங்களுக்கு அறிமுகமாகலாம்.

### கன்னி



எடுத்த காரியங்கள் தடையின்றி எளிதில் முடிவுக்கு வரும் நாள். மற்றவர்களுக்காக சில விடயங்களில் பிணை கொடுக்கலாம். உடன் பிறப்புக்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி விட்டு புதிய பொருள்கள் வாங்குவீர்கள்.

### துலாம்



மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும் நாள். மாலை நேரத்தில் திடீர் செலவு ஒன்றைச் சந்திக்கலாம். நீண்ட நாட்களாக செல்ல நினைத்த உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். சிலர் தங்களின் வேலைகளை உங்களின் தலையில் சுமத்தலாம். உங்கள் உதவி பெற்ற ஒருவர், திடீரென உங்களிடம் உதவி கேட்கலாம்.

### விருச்சிகம்



கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தூரத்து உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். மாமன், மைத்துனர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். பதவி உயர்வை எதிர்பார்ப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். நாளை வரும் என, நினைத்த பணவரவு ஒன்று இன்றே வரலாம்.

### தனுசு



குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். வேலையில் கடுமை காணப்படும். புதிய முயற்சிகளில் எதிர்பாராத வெற்றி கிடைக்கலாம். காலையில் வந்த பணவரவு ஒன்றுக்கு மாலையில் செலவு ஏற்படலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். மருந்துப் பொருள்கள் வாங்கலாம்.

### மகரம்



வியாபாரிகள் கூடுதல் லாபம் பெற வாய்ப்பு உருவாகும். பெண்கள் குடும்பத்தில் உள்ளவர்களின் பாராட்டுக்களைப் பெறுவர். பொது வாழ்வில் உள்ளோருக்கு புதிய பொறுப்புகள் வரலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவீர்கள்.

### கும்பம்



எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கலாம். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடலாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காக காத்திருக்கலாம். சில காரியங்கள் நடக்க வேண்டும் என, செய்த பிரார்த்தனை பலிக்கும். ஆனந்தமான நாள்.

### மீனம்



பணிபுரிவோர் வேறு வேலைகள் காரணமாக திடீர் விடுப்பு எடுக்கலாம். குடும்பப் பெரியவர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். பயணங்கள் பலன் தரும் விதத்தில் அமையும். ஏதோ ஒரு விதமான கவலை அல்லது சந்தோஷம் மனதை ஆட்கொள்ளும். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம்.




## இசை அரங்க அழைப்பு

அண்ணாமலைப் பல்கலைக்கழக B.A. பட்டதாரியும் சென்னைப் பல்கலைக் கழக M.A. பட்டதாரியுமான
செல்வி அபர்ணா குகதாசன்
(டென்மார்க்) அவர்களின்
இசை அரங்கு

இடம் : நல்லூர் துர்க்கா மணி மண்டபம்
காலம் : 30.05.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப. 3 மணி

தலைவர் :
செஞ்சொற் செல்வர் திரு.ஆறு திருமுருகன்
(அதிபர், யாழ் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

பிரதம விருந்தினர் :
சங்கீத கலாநிதி திரு.ந.வி.மு.நவரெத்தினம்
(தலைவர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள் :
பேராசிரியர் திரு.S.சிவலிங்கராசா (தமிழ்த்துறை பேராசிரியர் - யாழ்பல்கலைக்கழகம்)

திரு.பொன் ஸ்ரீ வாமதேவன்
(ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியர்)

மதிப்பீட்டுரை:
சங்கீத பூஷணம் திரு.S. கணபதிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற சங்கீத உதவிக்கல்விப் பணிப்பாளர்)

இசை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி.குகதாசன்,

(98775)

அரங்கிசைக் கலைஞர்கள்

பாட்டு:
முதுகலைமாணி
அபர்ணா குகதாசன்

வயலின்:
முதுதத்துவமாணி,
கா.குகபரன்

மிருதங்கம்:
முதுகலைமாணி
நா.மாதவன்

கெஞ்சிரா:
கலா வித்தகர்
க.நந்தகுமார்

முகர்சிங்:
கலா வித்தகர்
சி.செந்தூரன்

"பொன்னகம்"
பழைய தபால் கந்தோர் வீதி,
நெல்லியடி.


## சுயதொழில் கொடுப்பனவைப்பெற வலி.கிழக்கில் தெரிவு செய்யப்பட்டோர்

நாவற்குழி, மே 29

வலி.கிழக்கு- கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 17 பேருக்கு வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் சுய தொழில் கொடுப்பனவு நிதி வழங்கப் படவுள்ளது.

பின்வரும் பெயர் முகவரியை உடையவர்கள் தமது அடையாள அட்டையுடன் ஜூன் மாதம் முதலாம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலகத்திற்குச் சமுகமளித்து தமது கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இ.ஜெயதிலகர்ராஜா (வாதரவத்தை), அ.சுலோசனாதேவி (பூலசிட்டி, அச்செழு), ஞா.பவானி (மார்க்கம்புரை, கோப்பாய் வடக்கு), கு.விமர்சன் (நவோதய வீதி, அச்செழு தெற்கு), வி.அப்பலோசனா (சிறுப்பிட்டி வடக்கு), க.உதயகுமார் (வளலாய் கிழக்கு), தே.சாந்தகுமார் (வளலாய் கிழக்கு), அ.பவளறஞ்சினி (அரசடி வீதி, அச்சுவேலி).

க.விஜயகுமாரி (மானிப்பாய் வீதி, உரும்பிராய்), வீ.புவனேஸ்வரி (குளத்தடி லேன், அச்சுவேலி வடக்கு), அ.குமுதினி (செல்வபுரம், உரும்பிராய்), அ.சுகிர்தராஜா (செம்மணி வீதி, நாயன்மார்கட்டு), மோ.நந்தகுமார் (இராமநாதன் கலட்டி, கோப்பாய் தெற்கு), அ.வயூரன் (சிவன் வீதி, ஆவரங்கால்), கு.ஜெயந்தி (சிறுப்பிட்டி கிழக்கு), இ.மனோகரன் (கரந்தன், நீர்வேலி), சி.கிருஷ்ணகௌசலா (வாதரவத்தை).

(எ-121)

## மன்னாரில் மத்தியஸ்தர் சபைகளை அமைக்குமாறு நீதியமைச்சிடம் கோரிக்கை

மன்னார், மே 29

மன்னார் மாவட்டத்தில் இதுவரை காலமும் மத்தியஸ்த சபைகள் இயங்கவேயில்லை. யுத்தத்தைக் காரணம் காட்டி இச்சபைகளின் நியமனங்கள் பல முறையும் ஒத்திவைக்கப்பட்டன. இதன் விளைவாக மன்னாரில் பல்வேறு பிணக்குகள் தீர்க்கப்படாமலே இருந்து வருகின்றன.

எனவே இனியும் காலதாமதம் ஏற்படுத்தாமல் மேற்படி சபைகளை அமைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் மாவட்ட மக்கள் நீதியமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மன்னார் நகரம், நானாட்டான், முசலி, மாந்தைப் பிரதேசம், மடு உதவி அரச அதிபர் பிரிவு ஆகிய ஐந்து வலயங்களிலும் மன்னார் மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் அங்கு பல்வேறு பிணக்குகள், பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்த நிலைமைகளைக் கருத்தில் எடுத்து தற்போது பதவியேற்கும் புதிய அமைச்சர் இனியும் காலதாமதம் ஏற்படுத்தாமல் மத்தியஸ்த சபைக்கான தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று மாவட்டத்தில் சீரான நீதி நிர்வாகம் நடைபெற வழியேற்படுத்துமாறும் மன்னார் வாழ் மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(எ-80)

## புதிதாக முளைக்கும் வீதியோரக் கடைகள்

கொழும்புத்துறை, மே 29

யாழ்.பிரதான வீதியில் குருமடப் பகுதியில் வீதியோரக் கடைகள் புதிதாக முளைக்க ஆரம்பித்துள்ளன.

அப்பகுதியில் உள்ள மரங்களின்கீழ் பூமரக்கன்றுகள், பிளாஸ்ரிக் பொருள்கள் என்பவற்றை பரப்பிவைத்து பலர் வீதியோர வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பொதுமக்கள் பலரும் இங்கு வந்து பொருள்களை வாங்கிச் செல்வதை அவதானிக்க முடிகிறது.


பழவகைகளை திறந்த வாகனங்களில் காட்சிப்படுத்தி நடமாடும் விற்பனைச் சேவையும் இடம்பெறுகிறது.

நகரப்பகுதியில் நடைபாதை வியாபாரம் தடைசெய்யப்பட்டதையடுத்தே வியாபாரிகள் இவ்வாறான புதிய உத்தியைக் கையாள்வதாகக் கூறப்படுகின்றது. (எ-க-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனப் பயிற்சி செய்பவர்களின் கவனத்துக்கு...

*(சென்றவாரத் தொடர்ச்சி)*



ஆர்.பிரியா
யோக போதனா ஆசிரியர்,
பிரிய யோகா பயிற்சி நிலையம்.

யோகாசனப் பயிற்சியில் கிடைக்கின்ற அனுபவங்கள் ஒரே மாதிரியாக இருக்காது. காலையில் ஓர் அனுபவம் கிடைக்கலாம். மாலையில் ஓர் அனுபவம் கிடைக்கலாம். நம்முடைய உடல் நிலைக்கு ஏற்ப, மன நிலைக்கு ஏற்ப, சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு ஏற்ப இப்பயிற்சியில் அனுபவங்கள் வித்தியாசப்படுவது இப்பயிற்சியின் சரியான போக்குத்தான்.

நம்முடைய பிரச்சினைகள் எல்லாம் முடிந்த பிறகு ஆசனம் செய்யவேண்டும் என்று நினைப்பது கடலில் அலை ஓய்ந்து குளிப்பதற்குச் சமம். கடலில் அலை எப்போது ஓய்வது? நாம் எப்போது குளிப்பது? எனவே யோகாசனம் செய்வதை ஒரு பயனுள்ள பொழுது போக்கு என்று நினைக்க வேண்டும்.

சிலர் நினைக்கலாம் நான் தொடர்ந்து இரண்டு வருடங்களாகப் பயிற்சி செய்து வருகின்றேன். நான் நினைப்பது நடக்கவில்லை. என்னுடைய வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படவில்லை. தோல்விகள்தான் வருகின்றது குறிக்கோளை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருக்கின்றேன். என்னுடைய ஆசைகள் நிறைவேறுவது தாமதப்படலாம். அதற்காக இப் பயிற்சி செய்வதை நிறுத்தக்கூடாது.

யோகாசனம், பிராணாயமம், தியானம் இவற்றின் பயன்களை நண்பர்களுக்கு, உறவினர்களுக்கு விளக்கலாம். ஆனால் இச் செயல் முறைகளை விளக்கத் தேவையில்லை.

தொலைக்காட்சிகளைப் பார்த்தோ, புத்தகங்களைப் படித்தோ சுயமாக இப் பயிற்சிகளை செய்யக்கூடாது. ஒரு குருவின் ஆலோசனைப்படி முறையாக பயின்று செய்வதே சாலச் சிறந்தது.

பெற்றோர்கள் பிள்ளைகள் இப்பயிற்சியைச் செய்வதை ஊக்குவிக்க வேண்டும்.

நாம் இப் பயிற்சியை தொடர்ந்து செய்து கொண்டு இருக்கின்றபோதுதான் நம்முடைய ஆற்றல் அதிகரிக்கும், உணர்வுகள் பண்படும், மூளை அலைகளில் ஏற்படுகின்ற ஒழுங்குத் தன்மை நிலை நிறுத்தப்படும்.

" உன்னுள் இருக்கும் நீ
என்னுள் இருக்கும் நான்"

*(இன்னும் வளரும்)*

# பலம் எங்கிருந்து பிறக்கிறது

பலம் எங்கிருந்து பிறக்கிறது. மனத்திலிருந்து. அதிலும் கவலையற்ற, கவனம் சிதறாத மனம்தான் மிகப் பெரும் சக்தியாகப் பெருகிப் பாய்கிறது.

இதை விளக்க ஓஷோ ஒரு கதை சொல்கிறார்.

மன்னன் யானை மீது அம்பாரி வைத்து நாட்டை வலம் வருகிறார். ஒரு சிறு கிராமம். அங்கு போகும் போது, ஓர் இளைஞன் யானையின் வாலைப் பிடித்து இழுக்கிறான். யானை மேலே நடக்க முடியாமல் நிற்கிறது. ஊர் மக்கள் கூடி நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். மன்னன் அவமானம் அடைகிறான். அவன் யாரென்று விசாரித்துப் பார்த்தால், அவன் ஒரு பிச்சைக்காரனின் மகனென்றும் இவனும் பிச்சை வாங்கியே வாழ்வதாகவும் தெரிகிறது. ஊர் மக்களின் அன்பைப் பெற்றவன்.

எப்போதெல்லாம் மன்னன் அவ்வழியாகப் பயணம் செய்கிறானோ, அப்போதெல்லாம் இது நடக்கிறது. இவனுக்குப் பயந்து கொண்டு மன்னன் வேறு வழியாகப் போக வேண்டிய நிலை.

மன்னன் அமைச்சரிடம் ஆலோசனை கேட்டான். அமைச்சன் ஒரு பெரிய அறிஞனிடம் சென்று ஆலோசனை செய்தான். அறிஞன்,"அவனுக்கு தினம் ஒரு தங்கக் காசு சம்பளம் கொடுங்கள். மாலையில் அருகிலுள்ள பிள்ளையார் கோயிலில் விளக்கேற்றுவது அவன் பணி என்றும், அதற்கான சம்பளமே இந்த ஒரு தங்கக் காசு என்றும் சொல்லுங்கள்" என்றார். அவ்வாறே செய்யப்பட்டது.

ஒரு மாதம் கழித்து அவ்வழியாக அரசன் யானை மீது சென்றான். இப்போதும் இந்த இளைஞன் யானை வாலைப் பிடித்து இழுத்தான் . ஆனால் யானையை நிறுத்த முடியவில்லை. வாலைப் பிடித்தபடியே யானையின் இழுப்பில் பின்னாலேயே போய்க் கொண்டிருந்தான். ஏன் என்ன நடந்துவிட்டது அவனுக்கு?



சொன்னவர்:
புலவர் இரெ.சண்முகவடிவேல்

அவன் கவனத்தில் சிதறல் உண்டாகிவிட்டது. காசை சேர்க்க ஆரம்பித்து விட்டான். நூறு காசு சேர இன்னும் எத்தனை நாள் விளக்கேற்ற வேண்டும் என்று கணக்குப் போடத் தொடங்கிவிட்டான்.அதற்கு எவ்வளவு காசு குறைகிறது என்று எப்போதும் நினைத்து நினைத்து கவலைப்பட ஆரம்பித்தான். அவன் பலம் போய்விட்டது. ஆற்றல்- நினைப்பு-எல்லாவற்றிலும் பிரிவினை உண்டாகிவிட்டது. விளையாட்டாக யானை வாலை இழுத்தபோது ஒரு முகம் இருந்தது. இப்போது இருமுகம் ஆகிவிட்டது. ஆற்றலில் பாதியைத் தொலைத்துவிட்டான்.

நக்சலைட்டுக்களுக்கு ஒரு வேலை தரப்பட்டால் அவர்களின் வன்முறைப் போக்கு மாறும். இதனால்தான் ஜான் கென்னடி சொன்னார் ' கால் மார்க்சுக்கு ஒரு கிளார்க் வேலை தந்திருந்தால் கம்யூனிசமே தோன்றியிருக்காது" என்று. இது உண்மையல்ல ஆனாலும் யோசிக்கவைக்கிறது.

# அறிவாளிகள் ஏன் கடவுளை அடைவதில்லை?

அஞ்ஞானத்தை எது போக்கும்? அறிவுதான் போக்கும். அறிவு என்பதை மூன்று விதமாகக் கூறுவர். கல்வி அறிவு, கேள்வி அறிவு, பட்டறிவு( அனுபவ அறிவு). கல்வி கற்று, கேள்வி மூலம் தெளிவு அடைந்து, அதன் பிறகு அனுபவ அறிவைப் பெற்று இறைவனின் இலக்கணங்களை அறிந்து அவனிடத்தில் ஈடுபடுவது தமக்குக் கடமை என்பதை உணர்ந்து இறையனுபவத்தில் மூழ்குதல் ஒரு வகை. இவ்வழி மிக நீண்டதும், இடையூறுகள் நிறைந்ததும் ஆகும்.

இறைவனை அறிவதற்கு எந்தக் கல்வியைத் துணைக் கொண்டோமோ அந்தக் கல்வியே பல சமயங்களில் நமது அகங்காரத்தை வளர்த்து, நம்மை அஞ்ஞானத்தில் ஆழ்த்தி விடுகிறது. இது கருதியே போலும், 'கற்றாரையான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்' (திருவாசகம்: திருப்புலம்பல்-3) என்ற அடிகளாலும்,'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' (தாயு: சித்த-10) என்ற தாயுமானவப் பெருந்தகையும் கூறிச் சென்றனர். ஆக அறிவு, ஞானம் என்பவற்றை முயன்று பெற்று, அதன் பிறகு இறையனுபவம் பெறுவதிலுள்ள இடையூறுகளை ஆராய்ந்த நம் முன்னோர்கள் மற்றொரு சுலபமான வழியைக் கண்டனர்.




அஞ்ஞானியாகவே இருந்தாலும் ஆழ்ந்த உணர்வோடு இறையிடத்தில் ஈடுபடும் நேரடி அனுபவம் கிடைத்தவுடன் அஞ்ஞானம் நீங்கப்பெறுவது மிக எளிதான காரியமாகும்.

இறையனுபவம் கிடைத்தவுடன் நல்லறிவு தானாகவே வந்து சேரும். இந்த அறிவும் அதன் முடிவான ஞானம் என்பதும் 'பரஞானம்', 'அபரஞானம்' என்று இருவகைப்படும். அபரஞானம் என்பது உலகியல் அறிவாகும். பரஞானம் என்பது கடந்து நிற்கின்ற இறைவனைப்பற்றி அறிந்து கொள்கிற அறிவாகும்.

# யோசிக்க வேண்டாமா?

அரசன் ஒருவன் தன் படைவீரர்களுடன் கடுமையான கோடைகாலத்தில் பலரும் நடந்து போகும் சாலையில் போய்க்கொண்டிருந்தான். வெயில் தாங்காத நிலையில் ஒரு மரநிழலில் எல்லோரும் ஓய்வுபெற்றுத் தங்கினார்கள். அப்போது எதிரே ஒரு வேலியில் நூற்றுக்கணக்கான வெள்ளரிப்பிஞ்சுகள் காய்த்துத் தொங்குவதை அரசன் பார்த்தான்.சேவகனை அழைத்து,"அதோ பார், கேட்பார் இல்லாமல் நூற்றுக்கணக்கில் வெள்ளரிப்பிஞ்சுகள். போய்ப் பறித்துவா. எல்லோரும் உண்ணலாம்" என்றான். அப்போது அந்த மரநிழலில் தங்கியிருந்த விழியில்லாத முதியவர் ஒருவர் இதைக் கேட்டு ஓசைப்படச் சிரித்தார். அரசர் அவர் சிரித்ததற்குக் காரணம் கேட்டான்." அந்த வெள்ளரிக்காய்கள் கசக்கும். வாயில் வைக்க முடியாது" என்றார் விழியில்லாத முதியவர். அரசன் அதை ஏற்காமல் சேவகனை அனுப்பிப் பறித்துவரச் செய்து சாப்பிட்டு பார்த்த போது தாங்க முடியாத கசப்பில் காயைத் துப்பினான்."முதியவரே, உமக்கோ விழியில்லை. நீர் இதனைப் பறித்துப் பார்த்ததாகவும் தெரியவில்லை. அப்படியிருந்தும் உமக்கு உண்மை எப்படித் தெரிந்தது?" என்று அரசன் கேட்டான். அதற்கு முதியவர், " பலரும் நடந்து போகும் பாதையில் இப்படிப் பறிக்கப்படாமல் உண்ணக்கூடிய காய்கள் இருக்கமுடியுமா?" என்று கேட்டார். அவருக்கு விழி இல்லை. ஆனால் விழிப்பிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# குழைக்காட்டுக் கதைகள்

- கோகுலராகவன் -

இனிய வாசகர்களுக்கு! ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் புகையிலை, வெங்காய செய்கைக்குரிய நிலத்திற்கு ஊட்டமிடுவதற்கு நிறையப் பச்சைக் குழைகள் தேவைப்பட்டன. இக்குழைகள் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய இடங்களில் வெட்டி அவ்வூர்க்காரர்களால் விற்பனை செய்யப்பட்டது. இதன் காரணமாக இப்பிரதேசங்கள் "குழைக்காடு" என அழைக்கப்பட்டன. அப்பிரதேச வாசிகளுக்கு இதன் மூலம் "குழைக்காட்டான்" என்ற பட்டமும் விசேடமாக கிடைத்துவிட்டது; அல்லது வழங்கப்பட்டு விட்டது. காலம்மாற இவ்வியாபாரம் இல்லாது போய்விட "குழைக்காட்டான்" பட்டம் மட்டும் நிலைத்து விட்டது. இப்பிரதேசத்தில் வாழும் மனிதர்கள் மிகவும் சுவாரசியமானவர்கள். அவர்களுடன் வாழும் நான் அங்கு நடைபெற்ற, நடைபெறும் கதைகளை உங்களுடன் பகிர்வதில் மகிழ்வடைகின்றேன்.

## வேலி — கதை ஒன்று

எங்களுக்கு பளையில் நிறைய தென்னங்காணி, தோட்டங்காணிகள் இருக்கின்றன. காணி இருப்பது பிரச்சினை கிடையாது. காணிகளுக்கு வேலி அடைப்பதுதான் பிரச்சினை. பளை மற்றும் தென்மராட்சியில் ஒவ்வொரு தனிநபருக்கும் கிட்டத்தட்ட 2,3 ஏக்கருக்கு குறையாமல் காணிகள் இருக்கும். இவற்றின் வேலிகளின் நீளம் ஒரு ஏக்கருக்கே சுற்றி பார்த்தால் 300 மீற்றர் கிட்டத்தட்ட வரும். ஒரு 25 ஏக்கர் தென்னந் தோப்புக்கு அடைக்க வேண்டிய வேலி கிட்டத்தட்ட 6000 மீற்றர் (6 கிலோ மீற்றர்) இனைத் தாண்டும்.




எங்களுக்கு இவ்வளவு பெரிய காணி இல்லாவிட்டாலும். மூன்று காணிகள். ஒன்று 1 ½ ஏக்கர், இன்னொன்று 2 ஏக்கர் மற்றது 7 ஏக்கர். இவை மூன்றினதும் வேலிகளை அடைப்பதிலும் பராமரிப்பதிலும் வருடத்தில் மூன்று மாதம் கழிந்துவிடும்.

கா்பண்ணையின்ரை சுதா சொல்வான் "அண்ணை இந்த வேலியளை அடைப்பதிலேயே எங்கடை ஆயுள் முடிஞ்சிடும்."

அவனுக்கு வெவ்வேறாக நான்கு ஏக்கருக்கு மேல் தென்னங்காணிகள் இருக்கின்றன.

ஒரு காட்டினை வெட்டி புதிதாக தென்னம்பிள்ளை வைத்தால் அந்த தென்னம்பிள்ளைகளை மாடுகளிடமும் குறிப்பாக பன்றிகளிடமும் இருந்து பாதுகாக்க வேலிகள் மிகவும் பிரதானமானவை.

ஒரு நாலுபட்டு முட்கம்பி அடித்துவிட்டால் மாடுகளிடமிருந்து பாதுகாத்துவிடலாம். ஆனால் பன்றிகளிடம் இருந்து பாதுகாக்க முட்கம்பி போதாது. பன்றி ஒரு வைரமான மிருகம். ஒரு தடவை வேலியை இடித்துப் பார்க்கும். முடியாது விட்டால் நாலு அடி பின்னுக்குப் போய் பாய்ந்து கம்பியை இடித்தால் என்றால் கம்பி ஈய்ந்து பன்றி காணிக்குள் போய்விடும்.

இதனால் பன்றிகளிடம் தென்னம் பிள்ளையைப் பாதுகாக்க வேலிக்கு பனம் மட்டை வரிய வேண்டும்.

கெட்டது குடி, பனம் மட்டை விழவிழ வெட்டிச் சேகரிக்க வேண்டும். பிறகு அதனைச் செருக்கி வரியக் கூடியவாறு பக்குவம் பண்ண வேண்டும். கிட்டத்தட்ட நாலு மாத வேலைத்திட்டம். பின்னர் கட்டுக்கம்பியாய் அடுக்காக வரிய வேண்டும். மேலே ஒராள், கீழே ஒராள். எனக்கு நல்ல ஞாபகம். எப்பவும் கீழே வரிவது நான்தான்.

குந்திக் கொண்டு இருந்து வரிவதென்பது இலகுவான வேலையல்ல, நாரி நோகும், கால்தசை நோகும்; பிடிக்கும். வரியும் போது இடது அல்லது வலது பக்கம் அசைந்து அசைந்து போய்க் கொண்டிருக்க வேண்டும்.

றமணனும் (சின்னண்ணை என்று அவனை நான் சொல்லுவதில்லை) நானும் வேலி வரிந்தால், நிச்சயம் கீழே நான்தான் வரிய வேண்டும். அவன் மிரட்டும் பேர்வழி.

"இல்லை நீ கீழே வரி"

என்று அவனுக்கு நாங்கள் சொன்னால் ஒன்றும் பேசாமல் விடுவிடு என்று வீட்டுக்குப்போய்விடுவான். பிறகு அப்பாவிடம் நானும் சேர்ந்து பேச்சு வாங்க வேண்டும். எனவே பேசாமல் வரிந்து கொண்டிருப்பேன்.

'எங்கை பாப்பம், பண்டி இனி வேலியை இடிக்கட்டும்"

அடிக்கடி றமணன் வீரம் பேசிக் கொண்டிருப்பான்.

"உன்னைப் போல ஒரு பண்டி மட்டையை வரிஞ்சால் பண்டி வேலியை ஒருநாளும் இடிக்காதுதான்"

குந்திக் கொண்டிருக்கும் எரிச்சலில் நான் சொல்வேன். முறைத்துப் பார்ப்பான் - அழகிய காலம் தான் அந்தக் காலம்.

தோட்ட வேலி என்றால் பனை ஓலை வெட்டி அடைக்கலாம். அதுவும் கெட்ட வேலைதான். பனை ஓலையை சிறில் வெட்டிய பிறகு (சிறில் - எங்களது நீண்ட நாள் தேங்காய் பறிகாரர். மரத்தில் ஏறி இருந்துகொண்டு -

"தம்பி இந்தியா தெரியுது" என்பார்.

"ஆ... உண்மையாயோ?"

நாம் வாயை பிளந்து கொண்டு நிற்க - "ஓம் தம்பி! எம்.ஜி.ஆர் வீடு தெரியுது"

"ஓமடா, ஓமடா கருணாநிதி வீடும் தெரியும். புடுங்கிவிட்டு கெதியா இறங்கு"

அம்மப்பா உறுக்கச் சிரித்துக் கொண்டு இறங்குவார்.

பாவம், பளையில் இருந்து இடம் பெயர்ந்து புதுமாத்தளனில் மருந்தில்லாமல் இறந்து விட்டார். "ராகு போவமே" சிறில் அழைக்கும் குரல் இப்பவும் காதில் ஒலிக்கின்றது.

இப்படி நிறைய உறவுகளை இழந்து விட்டோம்.

(இன்னும் சொல்வேன்)

# காக்கக் காக்க கதிரேசன் கோயி...




ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் பிற்கூறில் முற்பட்ட பண்டைய கோயில்களுள் ஒன்றாக அமைந்துள்ள கதிரேசன் கோயில் காணப்படுகி... நகரத்தினுள் அமைந்துள்ள முக்கியமான கோ... காணப்படுகின்றது.

தென் மற்றும் தென்கிழக்காசியப் பிரதேச... வணிகக் குழுக்கள் கோவில் கட்டுமானம் மற்... பிரதான போசகர்களாகத் திகழ்ந்துள்ளனர். குறி... காலத்தில் தென்னிந்தியாவை மையமாகக் செ... வணிகக் குழுக்கள் இவ்விதமான பணிகளில் அதிகம் ஈடுபட்டுள்ளனர். வர்த்தக ரீதியான செயற்பாடுகளை மையமாகக் கொண்ட அவர்களது அசைவானது தமது பிறப்பிடங்களிற்கு வெளியாலும் குடியேறவும், குடியேறிய இடங்களின் சமூக உருவாக்கத்தில் மிக முக்கியமான செயற்பாட்டாளர்களாகவும் அவர்களைத் தொழிற்பட வைத்துள்ளது. குறிப்பாக அவர்களது பொருளாதார ரீதியான வலு அவர்களை அவர்கள் வாழ்ந்த இடங்களின் மிக முக்கியமான போஷகர்களாக ஆக்கிய பிரதானமான காரணியாகும்.

இவற்றினூடாக அவர்களது செட்டியார் மரபுரிமையைப் பல்வேறு இடங்களிலும் ஆக்கியுள்ளனர். செட்டித் தெருக்களும், செட்டிக் குறிச்சிகளும், செட்டியார் மடங்களும் மேற்படி அசைவியக்கம் - குடியேறல் - தொழிற்பாடு ஆகியவற்றின் உதாரணங்களாக எம்மிடையே இன்றுமுள்ளன.



அவ்வகையில் வண்ணார்பண்ணை கோயில் நகர உருவாக்கத்திலும் செட்டியார்களின் பங்கும் பணியும் மிக முக்கியமானது. வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலும், கதிரேசன் கோயிலும் மேற்படி வேறுபட்ட செட்டியார் வணிகக் குழுக்களின் பங்களிப்பே.

கதிரேசன் கோயில், யாழ்ப்பாணத்தின் மூத்த கோயில்களில் ஒன்றாக இருப்பது மட்டுமின்றி குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கருங்கல் மற்றும் மரச்செதுக்கு பாரம்பரியத்தினையும் தனதாகக் கொண்டது. பொதுப்படையாக நாயக்கர்காலத்தின் சுவடுகளையுடைய மேற்படி செதுக்களின் ஒரு தொகுதி இன்று, நாவலர் வீதியில் அமைந்துள்ள தொல்பொருள் சேகரிப்புகளுக்கான அரும்பொருளகத்தில் காணப்படுகின்றது. இவை யாழ்ப்பாணத்தின் கலைவெளிப்பாட்டுச் செயற்பாடுகளுள் உள்ள வேறுபட்ட இயல்புகளைக்கண்டுகொள்வதற்கான வாழும் சான்றாக உள்ளன.

அதேநேரம் அதன் சர்பக்கிருக, அர்த்த மண்டபப் பகுதிகள் கற்... செதுக்கு... மரபின் பண்டைய பாரம்பரியத்தினை அறிவதற்கான இன்னொரு வாழும் த...யா... அவை சமூக, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்தவையாகவுள்ளன.

வீதி அகலிப்புச் செயற்பாட்டால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள யாழ்... இடங்கள், மரபுரிமைச் சொத்துக்களுக்குள் மேற்படி கோயிலும் அமைந்துள்ளது ... உண்டாக்குகின்றது. பல நூறு வருடகால சொத்துக்களை பேணிப்பாதுகாத்துக் கொ... எதையும் உடைத்து, அழித்து விற்றுக் கொள்வதில் தமிழர்கள் காட்டும் நாட்டம் இவ்... காரணமாகும்.


# கையைப்பிடி, காலைப்பிடி...!

காலைப்பொழுதென்றபடியால் அந்தப் பாடசாலை வளாகம் சுறுசுறுப்புப் பெற்றிருந்தது. ஆசிரியர்கள் எல்லோரும் விரைவாக வந்து கொண்டிருந்தனர்.

ஆனால் அந்த ரீச்சர் மட்டும் சற்றுத் தாமதமாய்த்தான் வருவார். ஏனென்றால் அவர் "எக்ஸ்பெற்றிங்கா" இருக்கிறா... ஆசிரியைகளுக்கு கர்ப்பகாலத்தில் இத்தகைய சலுகைகள் வழங்குவதிலும் நியாயமிருக்கிறது.

அப்பிடியானால் இம்முறை பார்த்தீர்களா? கேட்டீர்களா? எதைத்தான் சொல்லப் போகிறது என்று நீங்கள் சிந்திப்பது எமக்குத் தெரிகிறது.

உங்கள் சிந்தனையை நீண்ட நேரம் நீட்டாமல் விடயத்தைச் சொல்கிறேன்.




வாசித்த பின்னர் மீண்டும் உங்கள் சிந்தனைக்குச் சிறகு வைத்து அது சரியா? என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

"பிள்ளையள் இரண்டு கேள்ஸ்" எழும்பி வாங்கோ என்ர காலையும் கையையும் அமுக்கி விடுங்கோ" என்று கேட்டது தான் தாமதம் ஒவ்வொரு பிள்ளைகளும் தறதறவென முழித்துக் கொண்டார்கள்.

"இன்றைக்கும் ரீச்சர் படிப்பிக்க மாட்டா போல. கை கால்பிடிச்சுத்தான் விட வேணும் போல கிடக்குது என்று அந்த வகுப்பில் இருந்த சின்னஞ்சிறுசுகள் தமக்குள்ளே பேசிக் கொண்டனர்.

'வாடி.. வாடி.. போய் 'ரீச்சருக்கு' கால், கை பிடிப்போம். இல்லையென்றால் அவா அடிப்பா.. என்று கூறி தனது நண்பியையும் அழைத்துக் கொண்டு ஆசிரியைக்கு அருகில் சென்றாள் அந்த மாணவி.

இனிமேல் என்ர கால், கை பிடிச்சு விடுகிற வைக்கு ரொபி வாங்கித்தரப் போறன் என்று கூறி அசட்டுச்சிரிப்புச் சிரித்தார் அந்த ஆசிரியை.

(கால், கை பிடிச்சு விடாத பிள்ளைகளுக்குத் தண்டனை கூட வழங்கியிருக்கிறார் என்றால் பாருங்கோவன்)

இப்படியொரு சம்பவம் உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் நடந்து கொண்டிருக்கிறது.




சின்னஞ்சிறுசுகளுக்குக் கல்வியை அன்போடு அரவணைத்துச் சொல்லிக் கொடுக்க வேண்டிய நேரத் தில் தமக்குப் பணிவிடை செய்யுமாறு கூறி அவர்க ளுக்குக் கல்வி கற்பிக்கும் நேரத்தையும் வீணடிப்பதோடு அந்தச் சிறுசுகள் மன உளைச் சலுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்பதும் அந்த ஆசிரியையின் மனச்சாட்சிக்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை.

குருவுக்குப் பணிவிடை செய்து கல்வியைப் பெற்றுக் கொள்கின்ற முறை எமது பாரம்பரியத்தில் உள்ளது தான். அதனையாரும் மறுப்பதற்கில்லை.

அதற்காக கற்பித்தல் நேரத்தில் அந்தச் சின்னஞ் சிறுசுகளா? இத்தகைய பணியைச் செய்ய வேண்டும்? இது உரிய பாடசாலை அதிபரின் கவனத்திற்குச் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலை காக்க...

...த்தின் பிற்கூறில் உருவாகிய சுமார் இருநூறு வருடங்களுக்கு ...களுள் ஒன்றாக யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியில் ...யில் காணப்படுகிறது. வண்ணார்பண்ணைக் கோயில் ...முக்கியமான கோயில்களுள் ஒன்றாக மேற்படி கோயில்


...காசியப் பிரதேசத்தில் 'இந்தியாவை' மூலமாகக் கொண்ட ...கட்டுமானம் மற்றும் கலைவெளிப்பாட்டுச் செயற்பாடுகளின் ...ந்துள்ளனர். குறிப்பாக மேற்கத்தைய காலனிய ஆட்சிக் ... மையமாகக் கொண்ட செட்டியார் கழகங்களைச் சேர்ந்த ...ான பணி ...னர். வர்த்தக ...மயமாகக் ...ானது தமது ...லும் ...ங்களின் ...த் தொழிற்பட ...வர்கள் ...ரணியாகும். ...லும் ...ங்களும் ...களாக

...கத்திலும் ...ணை ...றுபட்ட

...ல் ஒன்றாக ...ல் மற்றும்

...ற்படி ...ள்ள

...ட்டுச் ...வதற்கான



...சதுக்கு... ...வாழும் த...யமாகக் காணப்படுகின்றது என்ற வகையில் ...ன்.

...பட்டுள்ள யாழ்ப்பாணத்தின் பல்வேறு பண்பாட்டு ...மைந்துள்ளது என்பது மிகப் பெரிய அச்சத்தை ...பாதுகாத்துக் கொண்டாடும் உலகப் போக்கிற்கு மாறாக ...ம் நாட்டம் இவ்விதமான அச்சத்திற்கான அடிப்படைக்

# கவிதைமொழி கொண்டு நாடகம் படைத்த ஷேக்ஸ்பியர்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

அனார்க்கலி கதையில் தலைவி கல்லறையில் வைத்து சமாதியாக்கப்படுவது போல் ரோமியோ அன் ஜூலியட் காவியமும் கல்லறையிலேயே முடிவுறுவது கவனிக்கத்தக்கது.

மகாகவி ஷேக்ஸ்பியர் துன்பியல் நாடகங்களை எவ்வளவு சிறப்பாக எழுதி மக்கள் மனங்களில் இடம் பிடித்தாரோ அதே விதமாக இன்பியல் நாடகங்களையும் எழுதி வெற்றி கண்டார்.

அவ்வாறான 12 க்கும் மேற்பட்ட இன்பியல் நாடகங்களை அவர் எழுதி நடித்துமுள்ளார். அவைகளில் '' ஏஸ் யு லைக் இற் (As you like it)'' என்பதும் ஒன்று. உங்கள் விருப்பம் போல்- நீங்கள் விரும்பியபடி என்று தமிழில் கருத்து கொள்ளலாம்.

அந்நாடகத்தின் கதையை மட்டும் இங்கு நாம் பார்க்கலாம்.

ஏஸ் யூ லைக் இற்

பிரான்ஸ் நாட்டின் வடக்கில் ஒரு பிரதேசத்தை குறுநில அரசர் ஒருவர் ஆட்சி புரிந்து வந்தார். அவருக்கு பெடரிக் என்ற தம்பி ஒருவர் இருந்தார். இவர் தனது தந்திரங்களாலும் கூடாத எண்ணங்களினாலும் நாட்டு மக்களை தமையனுக்கு எதிராகத் திருப்பி விட்டார். அதனால் அரசர் நாட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்டு பெடரிக் நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றார்.

அரசர் தனக்கு விசுவாசமாக இருந்தவர்கள் சிலருடன் ஆர்டன் என்ற காட்டுப் பகுதிக்குள் சென்று இங்லிஷ் கதைகளில் வரும் பழங்காலத்து றொபின்ஹுட் போன்று வாழத் தொடங்கினார்.



ஷேக்ஸ்பியரின் 'ரஸ் யூ லைக் இற்' (நீங்கள் விரும்பியவாறு) என்ற நாடகத்தில் வரும் ஒரு காட்சி. ரோசலின்ட் ஆண்வேஷத்தில் அண்ணனாகவும் சீலியா பெண் வேஷத்தில் தங்கையாகவும் காட்டில் ஒரு மரத்தடியில் இருக்கிறார்கள். அவர்களுக்குதவிய டச்ஸ்ரோன் என்பவரையும் காணலாம்.

அவர் மிக அமைதியும் மனிதர்களிடம் அன்பும் கொண்டு விளங்கினார். இயற்கை அழகை இரசித்தார். இயற்கையிலிருந்து பலவற்றைக் கற்றுக் கொண்டார்.

அவர் கூறுவார், ''இந்த நடுங்கவைக்கும் குளிர் காற்றானது, உண்மையான ஆலோசகர் ஆகும். அது என்னை தடுமாறச் செய்வதில்லை. ஆனால் என் உண்மையான நிலைமையை எடுத்துக் கூறுகின்றது. அது என்னை நறுக்கென்று கடித்து விடக் கூடும். ஆனால் அதன் பற்கள் அன்பில்லாமையையும் நன்றிகெட்ட தன்மையையும் போலக் கூர்மையாக இருப்பதில்லை'' என்று. இவ்வாறு தாம் காணும் எல்லாவற்றிலிருந்தும் ஒரு பயனுள்ள படிப்பினையைக் கண்டுபிடித்துக் கொள்வார்.

**ரம்யன்**

மரங்களில் நாக்குகளையும் ஓடைகளில் நூல்களையும் கற்களில் உபதேசங்களையும் மற்றும் எல்லாவற்றிலும் நல்லவைகளையே அவர் காண்பார்.

அவருக்கு ஒரு அழகான மகள் இருந்தாள். அவள் பெயர் ரோசலின்ட். அரசைப் பறித்துக் கொண்ட பெடரிக்குக்கும் ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் சீலியா.

இரு பெண்களும் ஒருவரை ஒருவர் பாசத்துடன் நேசித்தனர். ஒருவரை மற்றவர் பிரிய முடியாதவராய் இருந் தமையால் ரோசலின்ட் தனது சித்தப்பா வின் அரண்மனையிலேயே சீலி யாவிற்குத் துணையாக தங்கிவிட்டார்.

ரோசலின்ட் அடிக்கடி தனது நாடு கடத்தப்பட்ட தந்தையை நினைத்து உருகுவாள். அதனால் சீலியா தன்னா லான எல்லாவ்ற்றையும் செய்து சகோதரி யைத் தேற்றுவாள்.

மல்யுத்தமும் இளைஞனும்

ஒரு தினம் அரண்மனையின் மைதானத்தில் இடம்பெறவிருந்த மல்யுத்தம் ஒன்றை இரு பெண்களும் பார்க்கச் சென்றனர். மன்னரின் சார்பில் பலசாலியான சார்ள்ஸ் என்பவன் எவருடனும் மோதி ஜெயிக்க ஆயத்தமாகி இருந்தான். இதற்கு முன் பலரை மோதி வெற்றி கொண்டவன்- பலரின் கைகால்களை முறித்து முடவர்களாக்கியிருந்தான்.

ஆச்சரியம் என்னவென்றால், இந்த வீரனை எதிர்த்துப் போட்டியிட அனுபவமில்லாத ஓர் இளைஞன் அங்கு வந்திருந்தான். மல்யுத்தம் ஆரம்பமாகும் நேரம் அண்மித்தது.

போட்டியைக் காண்பதற்கு இரு சகோதரிகளும் வந்திருப்பதை மன்னர் கண்ணுற்றார். '' மல்யுத்தத்தைப் பார்க்க வந்திருக்கிறீர்களா ? அது உங்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்காது. உங்க ளால் முடியுமானால் அந்த இளைஞனை போட்டியிலிருந்து விலகிக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளுங்கள் என்று அப்பெண்களிடம் கூறினார் மன்னர்.

சகோதரிகள் இருவரும் அதைச் செய்ய மிகவும் விருப்பம் காட்டினார்கள். ஏனென் றால் அந்த இளைஞன் தோற்கடிக்கப்பட்டு விடுவான், காயப்படுத்தப்படுவான், ஒரு வேளை கொல்லப்படவும் கூடும் என்று அப் பெண்கள் பயந்தார்கள். (இன்னும் வரும்)




# இலக்கியங்களில் சிருங்காரம்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான கோதையாழ்வார் பரமாத்மாவாகிய கண்ணனை நாயகனாக்கி அவனையே கனவில் கணவனாகக் கண்டு வாழ்ந்தவர்-அவரது அழகிய மதுரபக்தி-சிருங்காரத்தை அவரது பின்வரும் பாடல் மூலம் காணலாம்.



இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மையுடையவன் நாராயணன் நம்பி
செம்மையுடைய திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழி
நான்''

இது பக்தி நெறிக்கால சிருங்காரத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதுபோன்ற பல சிருங்காரக் காட்சிகளை இலக்கியங்களில் காண்கின்றோம்.

நாட்டியக் கலாவித்தகர்
திருமதி அ.உமாமகேஸ்வரி (B.F.A)
உடுவில் தெற்கு.மானிப்பாய்.

நாட்டியத்தில் ரஸம் என்பது கிளிப்பிள்ளை பாடமாக வருவதில்லை. தன் ஆழ்மனத்திலிருந்து உந்தப்படவேண்டும். தனக்கு குறித்த பாத்திரமாக மாறி யாதார்த்தத்திலும் அதை அனுபவிக்க வேண்டும். இரஸத்தோடு லயிக்கும்போது ஒருவித தெய்வீகம் எம்முள்தொடும். அது சிறப்பான இரஸ வெளிப்பாட்டை எம்முள் கொண்டுவரும். அதற்கு நாட்டியத்தை விசுவாசிக்க வேண்டும். அதனை எமது ஆத்ம திருப்தியாக மாற்றிக் கொள்ளவேண்டும். அப்போது சிருங்காரத்தை மட்டுமல்ல நாட்டியத்தினுடைய எல்லையெனக் கொள்ளப்படும் இறைவனை இலகுவில் எட்டமுடியும்.

''உயிருள்ளவரை உணர்வோடிரு-
உணர்வாகிய பக்தி (சிருங்காரம்) யோடிரு''

(முற்றும்)

# கன கரும் சங்கதியும்

(எண் சீர்க் கழிநெடிலடி விருத்தம்)




பொலிகையூர்
பொன்.சுகந்தன்

ஒன்றாய்க் காது தனிலே தோடும்
ஒளியாய்த் தோன்றி அழகாய் அசைய
சென்ற போதில் சிதறிக் கூந்தல்
செம்மை உற்றே சிறப்பாய் விளங்க
சென்ற பெண்ணைப் பார்க்கக் கனகர்
சென்றார் முன்னே வேகம் கொண்டு
நின்ற போதே நிமிர்ந்து பார்த்து
நினைவு இழந்தார் ஆணைக் கண்டு

(அடுத்த சனிக்கிழமை கனகர் சந்திப்பார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் கந்தையா சாமி

(K.S. அம்பாள் மினிபஸ் உரிமையாளர்)

மலர்வு:
*01.11.1934*

உதிர்வு:
*09.06.2009*

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
எங்கள் அன்பின் குலவிளக்கே...!
நீண்டதோர் நீங்கா நினைவுகளுடன்
நிலையற்ற இவ்வுலகில் வாழ்கின்றோம்
ஆண்டவன் அழைப்பேற்றுச் சென்றீரோ?
அன்புக் குடும்பத்தினைப் பிரிந்ததேனோ?
வேண்டாம் இவ்வுலகென்று நீர்
விரைந்து எங்கு சென்றீர் அப்பா!
மாண்டு போனீரென்று நாம் எண்ணவில்லை
எங்கள் மனையிலும் மனங்களிலும் குடிகொண்டுள்ளீர்
ஆண்டு கொண்டிருக்கும் எங்கள்
ஞான வைரவர் தாளில் வாழ்கின்ற உங்களை
அஞ்சலிக்கின்றோம் அப்பா அஞ்சலிக்கின்றோம்.

இன்று (29.05.2010) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

1/5, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் யுத்தக் குற்றங்களுக்கு எதிரான சர்வதேச நீதி விசாரணைக்கு ரஷ்யா, சீனா தடை

## கடுமையாகச் சாடுகிறது மன்னிப்புச் சபை

கொழும்பு, மே 29

ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் இலங்கையின் யுத்தக் குற்றங்களுக்கு எதிராக சர்வதேச நீதி விசாரணையை நடத்துவதற்கு தடையாக இருந்து வருகின்றன - என்று சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் நிலைமைகள் குறித்த 2010 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை மன்னிப்புச் சபை நேற்று வெளியிட்டுள்ளது.

உலகின் 159 நாடுகளில் கடந்த வருடம் மனித உரிமைகள் நிலைமைகள் எப்படி இருந்தன என்று அதில் சபை ஆராய்ந்துள்ளது.

அவற்றுள் 111 நாடுகளில் மக்கள் சித்திரவதை செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் குறைந்தது 61 நாடுகளில் மனித உரிமை மீறல் குற்றவாளிகள் தண்டனையில் இருந்து தப்ப வைக்கப்படுகின்றார்கள் என்றும் மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அறிக்கையில், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்தும், சர்வதேச சமூகம் இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்ற விசாரணையை நடத்தாமல் இருக்கின்றமை குறித்தும் பல இடங்களில் மன்னிப்புச்சபை கோடி காட்டி உள்ளது.

அப்போதே ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் மீது மன்னிப்புச் சபை இவ்வாறு குற்றஞ்சாட்டி உள்ளது.

ஐ.நா மனித உரிமை கவுன்ஸிலில் இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமா? என்று விவாதம் இடம்பெற்ற போது இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் எடுக்கப்படுவதை ரஷ்யா, சீனா உட்பட இலங்கையின் நேச நாடுகள் தடுத்தி நிறுத்தி விட்டன என்றும், இலங்கையின் யுத்தம் அந்நாட்டின் உள்விவகாரம் என்று சாதித்து வெளித்தரப்பினர் அதில் தலையிட முடியாது என்று வலியுறுத்தி நின்றன என்றும் மன்னிப்புச் சபை விளக்கம் அளித்துள்ளது.

இதனால் இலங்கை விவகாரத்தில் ஐ.நாவின் மனித உரிமைகள் கவுன்ஸில் முடமாக்கப்பட்டு செயலிழந்து போயுள்ளது என்றும் மன்னிப்புச் சபையின் அறிக்கை தெரிவித்துள்ளது.

அதே நேரம் ஆஸ்திரேலியா உட்பட ஆசிய - பசுபிக் நாடுகள் இலங்கை போன்ற நாடுகளில் இருந்து தப்பி வரும் அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்குவது தொடர்பாக கூட்டுப் பொறுப்புடன் நடப்பதில்லை என்றும் இந்த அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளை ஆஸ்திரேலியா இடை நிறுத்தி உள்ளமை பாரிய தவறு என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(சி)

# இலங்கைப் பயண எச்சரிக்கையை தளர்த்துகின்றது அமெரிக்கா

கொழும்பு, மே 29

அமெரிக்கப் பிரஜைகள் இலங்கைக்குச் செல்லக்கூடாது என்ற பிரயாண எச்சரிக்கையை அமெரிக்கா ரத்துச் செய்துள்ளது. கடந்த நவம்பர் 19ஆம் திகதி இப்பிரயாண எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த எச்சரிக்கை நேற்றுமுன் தினம் முதல் ரத்துச் செய்யப்பட்டுவிட்டது என்று அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் அனைத்துப் பகுதிகளிலும் அமைதிச் சூழல் முன்னேற்றமான நிலையில் காணப்படுகின்றமையால் இத்தீர்மானம் எடுக்கப்படுகிறது என்று அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இப்பிரயாண எச்சரிக்கை ரத்துச் செய்யப்பட்டதில் காத்திரமான பங்கு வகிக்கின்றார். - என்று அரச தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

# இலங்கைக்கு மன்னிப்புச் சபை பாடம் நடத்தத் தேவையில்லை

## துள்ளிக் குதிக்கிறார் பீரிஸ்

''சர்வதேச மன்னிப்புச்சபை எங்களுக்குப் பாடம் நடத்தத் தேவையில்லை'' என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றிருக்கும் அவர் நியூயோர்க்கில் அமெரிக்க ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அப்பேட்டியில் முக்கியமாகத் தெரிவித்தவை வருமாறு:-

''196 நாடுகள் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிரான மனித உரிமைக் குற்றச்சாட்டுகள் குறித்து ஏற்கனவே ஆராயப்பட்டிருக்கின்றது. ஐ.நாவின் மனித உரிமைகள் கவுன்ஸில் தொடர்ச்சியாக எமது விடயத்தை மூன்று நாள்கள் விவாதித்து எமக்கு எதிராக சட்ட நடவடிக்கை தேவையில்லை என்று மனித உரிமைகள் கவுன்ஸிலில் அங்கத்துவம் வகிக்கும் பெரும்பான்மையான நாடுகள் தீர்மானித்தன. இந்நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் கருத்துகளை ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தின் கருத்தாகக் கொள்ளவே முடியாது. நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை மன்னிப்புச்சபை எங்களுக்குச் சொல்லித்தரத் தேவையில்லை. அது சொல்வதை நாம் செவிமடுக்கப் போவதும் இல்லை. சர்வதேச மன்னிப்புச் சபைக்கு எங்களை வழி நடத்துவதற்கு என்ன அதிகாரம் இருக்கின்றது? மன்னிப்புச் சபையைப் போலவே, நெருக்கடிகளை ஆராயும் சர்வதேசக் குழு, மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்றவற்றுக்குக் கூட எங்களை வழி நடத்துவதற்கு எவ்விதமான அருகதையும் இல்லை.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபை - பொதுச் சபை - மனித உரிமைகள் கவுன்ஸில் ஆகியன எம்மைக் கேள்வி கேட்கலாம். நாம் பதில் கூறக் கடமைப்பட்டுள்ளோம். ஆனால் ஏனையவர்கள் எம்மைக் கேள்வி கேட்க முடியாது.

புலிகளின் கொலைகளை யாராவது கண்டித்தார்களா? இல்லையே. எனவே நாம் எவரிடமும் மன்னிப்புக் கேட்கமாட்டோம். இப்படிப்பட்டவர்கள் சொல்கின்ற சட்டங்கள் எமக்குத் தேவையில்லை. நாம் உண்மையான சட்டங்களுக்கு இணங்கவே நடக்கிறோம்.

சில நாடுகளுக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றங்கள் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் கழிந்தும் கூட இன்னும் விசாரிக்கப்படவே இல்லை. ஏன் நீங்கள் இரட்டை வேடம் போடுகிறீர்கள்? எங்கள் விடயத்தில் மட்டும் மன்னிப்புச்சபை ஏன் பாரபட்சமாக நடக்கின்றது? ஏனென்றால் இலங்கை ஒரு வறிய நாடு. இலங்கையை கால்பந்தாக வைத்து விளையாடலாம் என்று நினைக்கிறார்கள். அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.'' - என்றார்.

(சி)

# வாகனங்களை இறக்குமதி செய்ய எம்.பிக்களுக்கு 50 ஆயிரம் டொலர்

கொழும்பு, மே 29

தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக 15 ஆயிரம் அமெரிக்க டொலர்களைக் கொடுப்பனவாக வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான மொத்தக் கொடுப்பனவு 50ஆயிரம் டொலர்களாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் புதன்கிழமை கூடிய அமைச்சரவை இந்தக் கொடுப்பனவுக்கு அனுமதி வழங்கியது.

தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்வதற்காகத் தற்போதுவரை 35 ஆயிரம் டொலர்களே நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.

இந்த 35 ஆயிரம் டொலர்களை 45 ஆயிரமாக உயர்த்த வேண்டும் என்று அமைச்சர் சுமேதா ஜீ.ஜயசேன புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் யோசனை ஒன்றை முன்வைத்தார்.

இருப்பினும், அந்தக் கொடுப்பனவை 50ஆயிரம் டொலர்கள் வரை அதிகரிக்க ஜனாதிபதியும், அமைச்சரவை உறுப்பினர்களும் ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

இதனைத் தொடர்ந்து அமைச்சரவை இதற்கு அனுமதி வழங்கியது. புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்கள் உட்பட அனைத்து எம்.பிக்களும் இந்தக் கொடுப்பனவைப் பெறுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வகையான எரிபொருள்களைப் பாவிக்கின்ற வாகனமாக இருந்தாலும் சரி, எந்தளவு என்ஜின் கொள்ளளவைக் கொண்ட வாகனமாக இருந்தாலும் சரி அது தொடர்பில் எதுவித கட்டுப்பாடும் இன்றி எம்.பிக்கள் வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும். அத்தோடு இதற்காக அவர்கள் வங்கிக் கடன்களையும் பெறமுடியும். (ஒ-சி)

# மஹிந்த சிந்தனையின் உண்மைநிலை தற்போது வெட்ட வெளிச்சமாகின்றது

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

மஹிந்த சிந்தனையின் உண்மை நிலைமை தற்போது வெளிப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்டுக்குருந்தவில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற் றிய போதே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

மஹிந்த சிந்தனையின் உண்மையான அர்த்தம் சமையல் அறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமையல் எரிவாயு, கோதுமை மா என்பன அதிகரிக்கப்பட்டன. இன்னும் சில தினங்களில் பால்மாவின் விலைகள் அதிகரிக்கும். அரசிடம் தெளிவான நோக்கமோ, தெளிவான பொருளாதாரக் கொள்கைகளோ இல்லை.

வெள்ளத்தில் கொழும்பு மாத்திரமல்ல கம்பஹாவும் மூழ்கியுள்ளது. வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அமைச்சுகளில் மோசடிகள் நிறைந்துள்ளன. அரசின் இயலாமை காரணமாகவே பொருள்களின் விலைகள் அதிகரிக்கின்றன. எனினும், இவற்றுக்கான காரணம் தேசிய மற்றும் சர்வதேச சூழ்ச்சிகளின் பலாபலன்கள் என அரசு கூறுகிறது.

அரசிடம் இதுவரை தெளிவான வேலைத் திட்டங்கள் இல்லை. பொருளாதார வேலைத் திட்டங்கள் அரசிடம் காணப்படவில்லை.

இந்தப் பாதிப்பிலிருந்து நாட்டை மீட்டெடுக்க நாம் அணிதிரளவேண்டும். நாட்டின் எதிர்காலத்தை இருளாக்க அரசிற்கு இடமளிக்க முடியாது.

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மெக்ஸிக்கோவில் அரசியல் தஞ்சம்

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கும் நடவடிக்கையை தென்னமெரிக்காவின் செல்வச் செழிப்பான நாடுகளில் ஒன்றான மெக்ஸிக்கோ ஆரம்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந் நடவடிக்கையின் கீழ் ஈழத்தமிழர்கள் 6 பேருக்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன் அந்நாட்டில் அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை மெக்ஸிக்கோ அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

ஈழ அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்கலாம் என்ற தீர்மானத்தை மெக்ஸிக்கோ அரசு 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி நிறைவேற்றியது. ஆனால் கடந்த 100 வருடங்களாக ஈழ அகதிகள் எவரும் அந்நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கவில்லை.

இந்நிலையில் கடந்த மாதம் மெக்ஸிக்கோ ஊடாக கனடா அமெரிக்க போன்ற நாடுகளுக்கு செல்ல முயன்ற ஈழத்தமிழர்கள் 6 பேர் மெக்ஸிக்கோ பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு சுமார் ஒரு வாரகாலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

இந்த 6 பேருக்கும் மெக்ஸிக்கோ அரசின் ஈழத் தமிழர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கும் திட்டம் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

அவர்கள் தற்போது அந்நாட்டில் அரசியல் தஞ்சம் பெற்றுள்ளார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டிருக்கின்றமையை உறுதிப்படுத்தி அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

# ஜெனரல் பொன்சேகா மீதான விசாரணை: 3 மாதங்களுக்குள் 3ஆவது இராணுவ நீதிமன்று

கொழும்பு, மே 29

ஜெனரல் சரத் பொன்சேகா மீதான விசாரணைகளுக்கென எதிர்வரும் மூன்று மாதத்துக்குள் மூன்றாவது இராணுவ நீதிமன்றம் நிறுவப்படவுள்ளது என்று இராணுவத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த காலப்பகுதியில் சட்டவிரோதமான ஆயுதக் கொள்வனவுகளில் ஜெனரல் சரத் பொன்சேகா ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்தவே இந்த மூன்றாவது இராணுவ நீதிமன்றம் நிறுவப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரியவால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பான சுமார் 5,000 ஆவணங்கள் மீதான விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

# போரினால் உறவுகளைத் தொலைத்த தமிழர்களை சந்தித்த ஜே.வி.பி. சந்திரசேகரன் மீது விசாரணை

கொழும்பு, மே 29

யுத்தத்தில் உறவுகளைத் தொலைத்திருக்கும் தமிழர்களை கடந்த புதன்கிழமை சந்தித்து உரையாடியமையைத் தொடர்ந்து ஜே.வி.பியின் முன்னாள் தேசியப் பட்டியல் எம்.பி இராமலிங்கம் சந்திரசேகரன் உடனடியாகப் புலனாய்வு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமல் போயிருக்கும் குடும்ப அங்கத்தவர்களைத் தேடிக் கண்டு பிடித்துத் தர வேண்டும் என்று கோரி வட மாகாணத்தில் இருந்து 60 தமிழ்க் குடும்பங்களை ஜே.வி.பி சந்திரசேகரன் சந்திக்க வந்திருந்தார். இச்சந்திப்பு கிராண்ட்பாஸில் அமைந்திருக்கும் நாராயண குரு ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்றுமுன் தினம் காலையில் இடம்பெற்றது.

சுமார் இரு மணித்தியாலங்கள் வரை அது நீடித்தது. இச்சந்திப்பையடுத்து, காணாமல் போயிருப்போர் குறித்து முறைப்பாடு செய்ய அந்த மக்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குச் சென்றிருந்தனர். இதையடுத்து குற்றப் புலனாய்வுப் பொலிஸார், இராணுவத்தினர், பொலிஸார் ஆகி யோர் நாராயண குரு ஞாபகார்த்த மண்டபத்துக்கு வந்து சந்திரசேகரனை விசாரணை செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**16.09.1991**

* பேச்சுக்கான வாய்ப்பு அறவே அற்றுப் போய்விட்டதால் இனிமேல் விடுதலைப் புலிகளை இறுதியாக அழிக்கும் வரை போர் தொடரும் என இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க தெரிவிப்பு.

* நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதி பிரேமதாச நடவடிக்கை எடுத்தால் அதனை எதிர்த்து சட்டரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் போராடப் போவதாக அரசில் இருந்து விலக்கப்பட்ட லலித் அதுலத்முதலி குழுவினர் தெரிவிப்பு.

**17.09.1991**

* ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதிக்க சபாநாயகர் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிப்பு.

* ஜனாதிபதி பிரேமதாச விடுக்கும் சட்டவிரோத உத்தரவுகளை ஏற்றுச் செயற்பட வேண்டாம் என முப்படைகளுக்கும் பொலிஸாருக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் லலித் அதுலத்முதலி தரப்பினர் வேண்டுகோள்.

**18.09.1991**

* நாடாளுமன்றம் ஜனாதிபதியால் எந்தவேளையிலும் கலைக்கப்படலாம் என்ற நிலையில் அத்தகைய தமது முடிவை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என ஜனாதிபதி தெரிவிப்பு.

* விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாஸ முன்னர் ஆயுதங்களை வழங்கினார் என்பதை நிரூபிக்க தம்மிடம் ஆதாரங்கள் இருப்பதாக அரசில் இருந்து விலகிய லலித் அதுலத்முதலி தெரிவிப்பு.

**19.09.1991**

* இனப்பிரச்சினை தீர்வுக்கான சமரசப் பேச்சுக்களுக்கு அடிப்படையாக அமையக் கூடிய குறைந்த பட்சக் கோரிக்கைகளைத் தெரிவிக்குமாறு விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவருக்கு அமைச்சர் தொண்டமான் கடிதம் அனுப்பி வைப்பு.

* நாடாளுமன்றம் தற்போது கலைக்கப்படமாட்டாது என ஜனாதிபதி பிரேமதாஸ அறிவிப்பு.

**20.09.1991**

* ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேலும் இரு அமைச்சர்கள் தமது அமைச்சர் பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளதாக அறிவிப்பு.

* கிழக்கு மாகாணத்தை மக்களைப் பாதுகாப்பதற்காக அரச படையினரும் விடுதலைப்புலிகளும் இணைந்து தமிழ்த் தேசிய இராணுவத்துக்கு எதிராகச் சண்டையிட்டதாக ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

**21.09.1991**

* இந்திய அமைதிப் படையை எதிர்த்துச் சண்டையிடுவதற்கு விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அரசு ஆயுதங்கள் வழங்கியதான செய்தி குறித்து இந்திய அரசு, இலங்கை அரசிடம் விளக்கம் கோர இருப்பதாகத் தெரிவிப்பு.

* விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் போது எனக்கு இன்னும் சிறிது கால அவகாசம் வழங்கப்பட்டு இருந்தால் விடுதலைப் புலிகளை யாழ். குடாநாட்டில் இருந்தே துரத்தியிருப்பேன் என முன்னாள் அமைச்சர் லலித் அதுலத்முதலி தெரிவிப்பு.

**22.09.1991**

* மனித உரிமைகள் பேணப்படுவது தொடர்பாக இலங்கை அரசு உரிய வகையில் செயற்படவில்லை என்க் குற்றம் சாட்டி நெதர்லாந்து அரசு இலங்கைக்கான தனது அபிவிருத்தி நிதி உதவிகளை நிறுத்திக் கொண்டதாகத் தெரிவிப்பு.

* தாம் தற்போது அரசியல் ஆபத்து நிலையை எதிர்நோக்கியிருப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸ கருத்துத் தெரிவிப்பு.

**23.09.1991**

* நாடாளுமன்றத்தில் ஐ.தே.கட்சி அரசு பெரும்பான்மை வலுவை இழந்தால் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோவைப் பிரதமராக நியமிப்பேன் என ஜனாதிபதி பிரேமதாஸ மிரட்டும் தொனியில் தெரிவிப்பு.

* அமெரிக்காவிடம் இருந்து அதிகளவு இராணுவ மற்றும் நிதி உதவிகளை இலங்கை அரசு கோரியிருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவிப்பு.

**24.09.1991**

* நாடாளுமன்றத்தில் அரசின் பெரும்பான்மையை நிரூபிக்க தமக்கு உதவுமாறு ஈரோஸ் இயக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி பிரேமதாஸ அழைப்பு விடுத்து இருப்பதாக சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டார நாயக்க தெரிவிப்பு.

* நாடாளுமன்றத்தில் அரசு பெரும்பான்மையை இழந்தால் அனுரா பண்டார நாயக்காவை எம் பக்கம் வந்து பிரதமர் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுப்பேன் என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

**25.09.1991**

* இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்பட்டு கடலில் தூக்கி வீசப்பட்ட 24 இந்திய மீனவர்களில் 21 பேர் விடுதலைப் புலிகளால் காப்பாற்றப்பட்டு பாதுகாப்பாகதங்க வைக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவிப்பு.

* தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களைச் சந்திக்கத் தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

**26.09.1991**

* விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆயுதம் வழங்கியமை தொடர்பாக ஐ.தே.க. அரசு மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணையொன்று எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோவால் சபாநாயகரிடம் ஒப்படைப்பு.

* ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை மீது கிளப்பப்பட்டிருக்கும் சர்ச்சை தொடர்பான தமது தீர்ப்பை சபாநாயகர் ஒத்திவைப்பதாகத் தெரிவிப்பு.

**27.09.1991**

* அரசுடன் பேசுவதாயின் முதலில் பொருளாதாரத் தடை நீக்கம், சிங்களக் குடியேற்ற நிறுத்தம் என்பவை குறித்தே பேசப்படவேண்டும் எனவிடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தம்மிடம் கூறியதாக அவ் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

* காந்தி தேசத்துக்கு அஹிம்சை வழியில் போராட்டத்தை ஆரம்பித்து முதலடி தொடுத்தவன் தீலிபன் என விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் மாத்தயா தீலிபன் நினைவஞ்சலிக் கூட்டத்தில் தெரிவிப்பு.

**28.09.1991**

* வட பகுதியில் அரசு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்தியிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக இந்திய வானொலி அறிவிப்பு.

* வட பகுதி மீது இலங்கை அரசு விதித்து இருந்த பொருளாதாரத் தடை விரைவில் தளர்த்தப்படும் என எதிர் பார்க்கப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

**29.09.1991**

* அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் தன்மீதான குற்ற விசாரணைப் பிரேரணை என்பவற்றைத் தோற்கடிக்க ஜனாதிபதி பிரேமதாஸ பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிப்பு.

* கொழும்புக்கு வந்து திரும்பிய இரு ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கும் இடையில் உடன்பாடு ஒன்று ஏற்பட்டு இருக்கலாம் என பி.பி.சி. வானொலி ஊகம் தெரிவிப்பு.

**30.09.1991**

* விடுதலைப் புலிகளுடனான எந்தச் சமாதானப் பேச்சுக்கும் யுத்த நிறுத்தம் ஒரு நிபந்தனை அல்ல. இராணுவ நடவடிக்கை தொடரும் அதேவேளை பேச்சுக்களையும் நடத்த முடியும் என அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

* 7 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான லஞ்சப் புகார்கள் குறித்து விசாரிக்க சபாநாயகர் லஞ்ச ஆணையாளருக்கு அனுமதி அளித்துள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிப்பு.

# ஜூன் 2ஆம் திகதி முதல் முல்லைத்தீவில் மீள்குடியேற்றம் தொடர்ந்து இடம்பெறும்

## மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் தகவல்

கொழும்பு, மே 29

முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதி முதல் தொடர்ந்து மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெறும் - என முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீரங்கன் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

யாழ்ப்பாணம், வவுனியா பிரதேசங்களில் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளவர்கள் 900 பேர் முல்லைத்தீவு கரைச்சேரி கிழக்கு, மேற்குப் பிரதேசத்தில் ஜூன் 2 ஆம் திகதி மீள் குடியேற்றப்படவுள்ளனர்.

ஜூன் 4ஆம் திகதி மெனிக் பாம் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள 650 பேர் முல்லைத்தீவு முள்ளியாவளை வடக்குப் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட உள்ளனர்.

ஜூன் 07 ஆம் திகதி முல்லைதீவு வடக்கில் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ள 415 பேர் மீள்குடியேற்றப்பட உள்ளனர். இதேவேளை, ஒட்டிசுட்டான், ஒடியமலை, பெரிய சித்திமடு, பெரிய குளம் ஆகிய பகுதிகளிலும் 600 பேர் மீள்குடியேற்றப்பட உள்ளனர்.

இடம்பெயர்ந்து தற்காலிகமாக முகாம்களிலோ அல்லது உறவினர்கள் வீடுகளிலோ தங்கியிருப்பவர்களது மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் அனைத்தும் இடம்பெற்று வருகின்றன. இம்மக்களுக்கு தேவையான வசதிகளையும் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது - என்று அவர் தெரிவித்தார்.

## கொத்தணிகளின் கூட்டங்கள்

நவாலி, மே29

வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அபிவிருத்திக்கான கிராம கொத்தணிகளின் 'ஏ' பிரிவு கூட்டங்கள் மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதற்கமைய நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30மணிக்கு இல 129, 130 கிராம சேவையாளர்களின் பிரிவுகளுக்கு சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்திலும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு ஜே 131, 132, 133 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு கூழாவடி அ.மி.த.க. பாடசாலைகளிலும் இவை நடைபெறவுள்ளன.

இக் கூட்டத்திற்கு மதத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஓய்வூதியர்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோரை கலந்து கொண்டு தமது பகுதிக்கு வேண்டிய வேலைத் திட்டம் சம்பந்தமான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு மேற்படி கொத்தணியின் தலைவர் எ.மனோகரன் கேட்டுள்ளார். (56-100)


## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சமையலாள்:
* சைவச் சிறுவர் இல்லத்துக்கு அனுபவம் வாய்ந்த பெண் சமையலாள் தேவை.
இல்லத்தில் தங்கியிருப்பது கட்டாயம்.
வயதெல்லை: 35-55

பண்ணைத் தொழிலாளி
* சங்கத்தின் விவசாயப் பண்ணையை நிர்வகிக்கவும் பயிர்ச் செய்கையைத் திட்டமிட்டு மேற்கொள்ளவும் வல்லவரான ஆண்.
வயதெல்லை: 30-55

தொழிலாளி
* சிறுவர் இல்லப் பணிகளைச் செய்யக்கூடிய, தேகாரோக்கியமுள்ள ஆண் தேவை.
வயதெல்லை: 35-55

எல்லாவற்றுக்கும் ஊதியம் பேசித் தீர்மானிக்கப்படும்.
விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 12.06.2010

க.வை.குணசேகரம்,
செயலாளர்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(ச/567990)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி,
தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு,
கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி
கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும்
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன்
செல்வன்
**சண்முகநாதன் சுஜீவன்**
அவர்களின் திடீர் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

E/07 நண்பர்கள்,
பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04★07★1935

மறைவு
09★06★2009



**அமரர் தம்பன் செல்லத்துரை (செல்லன்)**
(ஓய்வுபெற்ற ஊழியர், உடுப்பிட்டி பிரதேசசபை )

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
ஆறாது ஐயா எம்துயரம் உங்கள்
உழைப்பால் செழித்த எம் குடும்பம்
உங்கள் மறைவால் வாடுது ஐயா
எம் குடும்பம் நீ சென்ற பாதையை
பார்த்து விழிகள் ஏங்குது ஐயா!

வெற்றிகாடு
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

(96620)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கவேலாயுதபுரம் பிரதேசத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கை

அம்பாறை, மே 29

கடந்த கால யுத்தத்தின்போது இடம் பெயர்ந்து வெளிமாவட்டங்களில் உள்ள அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேச சபைக்குட்பட்ட தங்கவேலாயுதபுரம் கிராம மக்களை மீள்குடியேற்றுவதற்குரிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதன் முதல் கட்டமாக 8 கோடி ரூபா செலவில் 12 கிலோ மீற்றர் கொங்கிரீட் வீதியைப் புனரமைக்கும் பணிகள் ' யுனப்ஸ்' நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வீதிப் புனரமைப்பு நிறைவடைந்த பின்னர்,இக்கிராம மக்களுக்கான வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படுவதுடன், குடிதண்ணீர் மற்றும் மின்சார வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என அம்பாறை மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளர் கே. புஷ்பகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் ' சுடர் ஒளி' யில் வெளியான செய்திக்கமைவாக இவ் வேலைத்திட்டங்கள் துரித கதியில் இடம் பெற்று வருகின்றன எனவும் அவர் குறிப் பிட்டார்.

இதேவேளை, தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் காட்டுயானைகளின் தொல்லை அதிகமாக இருப்பதனால் இந்தப்பகுதியில் மின்சார வேலிகளும் அமைக்கப்பட வேண்டும் என இக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ளி)




# திடீரென வீசிய சுழல்காற்றால் திருக்கோவிலில் வீடுகள் சேதம்

மட்டக்களப்பு, மே 29

திருக்கோவில் பிரதேசத்தில் எதிர்பாராத வகையில் நேற்றுமுன்தினம் கடுமையான சுழல்காற்று வீசியமையால் தற்காலிக முகாம்களின் கூரைத்தகரங்கள் சேதமடைந்தன.

இந்த சுழல்காற்றினால் தம்பிலுவில், முனையக்காடு,மண்டானை, குடிநிலம், விநாயகர்புரம் ஆகிய வீடுகளின் கூரைகளும் சேதமடைந்துள்ளன என அறிவிக்கப்படுகின்றது.

இதேநேரம், கடந்த மூன்று தினங்களுக்கு மேல் கடல் கொந்தளிப்பு அதிகரித்துள்ளமையினால் மீனவர்கள் கடலுக்குச்செல்ல முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் நுகர்வோர் களப்பு மீன்களையும்,கருவாடுகளையும் வாங்கவேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அமைதியான சூழ்நிலையினால் மன்னார் பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான வர்த்தகர்கள் லொறிகள் மூலம் கருவாட்டைக் கொண்டுவந்து அம்பாறை மாவட்டத்தில் பரவலாக விற்பனை செய்துகொண்டு வருகின்றார்கள்.

மலைநாட்டுப் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் அப்பகுதியில் இருந்து தினசரி அம்பாறை மாவட்டத்திற்கு வந்துகொண்டிருந்த காய்கறிகள் கடந்த ஒருவாரத்துக்கு மேல் வராமையால் இப்பகுதியில் காய்கறிகளுக்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டிருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் மேட்டு நிலப்பயிர் செய்கையாளர்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் சீராக இல்லாததோடு, இப்பகுதியில் நிலவிக்கொண்டிருக்கும் வெப்பமான கால நிலையால் உள்ளூர் காய்கறிகளும் அதிகமான அளவு உற்பத்தி செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ளி)

# அட்டாளைச்சேனை பிரதேசசபையின் தவிசாளரின் சேவைக்கு பாராட்டு

மட்டக்களப்பு, மே 29

அட்டாளைச்சேனை பிரதேசத்தின் அடிப்படைத் தேவைகளையும், பிரச்சினைகளையும் இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ. அன்சில் மிகவும் சிறந்த பங்களிப்பை செய்து வருகின்றார் என்று புறத்தோட்டம் சனசமூக நிலையத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் பாராட்டுத் தெரிவித்தார்.

புறத்தோட்டம் சனசமூக நிலையத்தின் மாதாந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றும்போதே சனசமூக நிலையத்தின் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் அங்கு பேசுகையில்:-

அட்டாளைச்சேனை பிரதேசம் மூவின மக்களையும் தன்னகத்தே கொண்ட ஒரு பிரதேசமாகும். இது அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் போன்ற பெரிய கிராமங்களையும் மீலாத்நகர், சம்புநகர், ஆலங்குளம், தீகவாபி, திராய்க்கேணி, அஸ்ரப்நகர், தைக்காநகர் போன்ற குக்கிராமங்களையும் கொண்டுள்ளது. இன, மத வேறுபாடுகளுக்கப்பால் அனைத்துப் பிரதேசங்களையும் திருப்பதியடையச் செய்யும் வகையில் தவிசாளர் தனது நிர்வாகத்தை மேற்கொண்டு வருகின்றார்.

பிரதேச சபையின் குறைபாடுகள் தொடர்பில் ஊடகங்களில் தெரிவிக்கப் படுகின்ற விமர்சனங்களைக் கருத்திற் கொண்டு அக்குறைபாடுகளை நிவர்த்திக்க பொருத்தமான நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து அம்பாறை மாவட்டத்தின் முதன்மைத் தவிசாளராக செயற்படுகின்றமையையும் காண்கிறோம்.

தெருச்சுத்தம், தெருவிளக்குப் பராமரிப்பு, குடிதண்ணீர் விநியோகம் போன்ற அத்தியாவசிய தேவைகளை மக்களது தேவைகளுக்கேற்ப செய்து கொடுத்து அவர்களை திருப்தியுறச் செய்து மக்களது நல்லபிப்பிராயத்தையும் பெற்றுள்ளார்.

இக்கிராம மாணவர்களும், வாசகர்களும் பயன்பெறும் நோக்கில் சிறியதொரு நூலகம் அமைத்துத் தருமாறு எமது புறத்தோட்டம் சனசமூக நிலையத்தின் சார்பில் கோரிக்கை விடுத்தபோது அதனை உடனடியாக செய்து தருவதாக எமக்கு வாக்குறுதியளித்துள்ளார். அதேபோன்று புறத்தோட்டம் வாய்க்கால்கட்டு பாதையைப் புனரமைத்துத் தருவதோடு மின்சார வசதியையும் ஏற்படுத்தித் தர தவிசாளரிடம் கோரிக்கை விடுக்கிறோம் - ,என்றார்.(ளி)

# சட்டவிரோதமான மின்பாவனை: 36 பேர் வாழைச்சேனையில் கைது!

மட்டக்களப்பு, மே 29

வாழைச்சேனை மின்சாரசபை பிரிவில் சட்டவிரோதமான முறையில் மின்பாவனையில் ஈடுபட்ட 36 பேர் வாழைச்சேனை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, வாழைச்சேனை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வாழைச்சேனை மின்சாரசபை பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி, செம்மண்ஓடை, கிரான்நூறு வீட்டுத்திட்டம், கிண்ணியடி, மீராவோடை, கண்ணகிபுரம், கறுவாக்கேணி போன்ற பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் மின் பாவனையில் ஈடுபட்ட 36 பேரை கடந்த புதன் கிழமை அதிகாலை மின்சார சபையின் உயர் அதிகாரிகள் வாழைச்சேனை பொலிஸாரின் உதவியுடன் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன் கிழமை மாலை வரை தடுத்துவைக்கப்பட்டு, வாழைச்சேனை மாவட்ட பதில் நீதிவான் எம்.எச்.எம்.ஹுசைன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்கள் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அத்துடன், இவர்களுக்குரிய வழக்கு அடுத்தமாதம் 6 ஆம் திகதி இடம் பெறும் எனவும், அன்றைய தினம் இவர்கள் நீதிமன்றத்தில் சமுகமளிக்க வேண்டும் என்று பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

சட்டவிரோத மின் பாவனையாளர்களின் நடவடிக்கையைத் தடுக்கும் முயற்சியாகவே இச்செயற்பாடு இடம்பெற்றது என மின்சார சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ளி)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளம் பெற்றுத்தர தொழிற்சங்கங்கள் கொள்கைரீதியில் ஒன்றுபட வேண்டும்

## தொழிலாளர் விடுதலை முன்னணித் தலைவர் அய்யாத்துரை வலியுறுத்து

கண்டி, மே 29

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமானால் சம்பளக் கொள்கையில் தொழிற்சங்கங்கள் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இருநூறு வருடங்களாக நாம் சம்பளத்திற்காக பேரம் பேசுவதும், போராட்டம் செய்வதும் மற்றும் கூட்டொப்பந்தம் செய்வதையும் மாற்றி காலத்துக்கேற்ற வாறும், தொழிற்துறை வளர்ச்சி அடைவதற்கும் ஏற்ப தொழிலாளர்களுக்கு மாதச்சம்ப ளத்தைப் பெற்றுக்கொடுக்கும் கொள்கையை முன்னெடுக்க வேண்டும்

- என்று தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் டி. அய்யாத்துரை தொழிற் சங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளம் கேட்பது புதிய விடயமல்ல. இது 1968 ஆம் ஆண்டு முதல் தொழிற்சங்கத்தின் கொள்கையாக இருந்து வந்திருக்கின்றது. 1973 ஆம் ஆண்டுக்குப் பிறகு மாதச் சம்பளம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், தோட்டத் தொழிற் சங்க கூட்டமைப்பும் அரசை வலியுறுத்தி வந்துள்ளதோடு, மாதச் சம்பளக் கோரிக்கையை வலியுறுத்தி அடையாள வேலை நிறுத்தங்களும் தொடர்ச்சியான வேலை நிறுத்தங்களும் செய்துள்ளதை ஞாபகமூட்டுகின்றேன்.

இன்று நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் வாழ்க்கைச் செலவை விடப் பன்மடங்கு அதிகரித்து விட்டன. தோட்டத் தொழிலாளர்களின் வருமானம் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன்காரணமாக தொழிலாளர்கள் தமது வாழ்க்கைச் செலவை சமாளிப்பதற்காக தோட்டத் தொழிலைக் கைவிட்டு தமது வருமானத்தை உயர்த்திக் கொள்வதற்காக வேறு தொழில்களைச் செய்வதில் அக்கறை காட்டுகின்றனர். இதன் காரண மாக தோட்டத் தொழிற்துறையில் அக்கறையின்மையும், கவனமின்மையும் ஏற்பட்டுள்ளது.

தோட்டத் தொழிற்றுறை வளர்ச்சியடைய வேண்டுமானால் தொழிலாளர்கள் நம்பிக்கையுடன் தோட்டத் தொழிற்றுறைகளில் அக்கறை கொள்ளவேண்டும். இதற்கு மாதச் சம்பளம் பெற்றுக் கொடுப்பதற்காக தொழிற் சங்கங்கள் கொள்ளை ரீதியாக ஒன்றுப்பட்டு வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண் டும்.

எனவே, தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரவும்,தொழிற்றுறை வளர்ச்சி அடையவும் நாட்சம்பள முறையை மாற்றி காலத் துக்கேற்றவாறு மாதச்சம் பளக் கேரிக்கையை சகல தோட்டப்புறத் தொழிற்சங்கங்களும் கொள்கையாக ஏற்று அதனை பெற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது- என்று அந்த அறிக்கையில் உள்ளது. (ளி)




# மஸ்கெலியா சென். ஜோசப் கல்லூரி பழைய மாணவரின் ஆவணக் கையளிப்பு

நுவரேலியா, மே 29

மஸ்கெலியா சென்.ஜோசப் கல்லூரியில் கல்விகற்று வெளியேறிய மாணவர்களின் ஆவணங்களை மீளக் கையளித்தல் தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வெளியேறிய மாணவர்கள் தமது பிறப்புச் சான்றிதழ், பாடசாலை விடுகைப் பத்திரம் மற்றும் பிற ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பாடசாலை அனுமதி இலக்கம், பாட சாலையில் சேர்ந்த வருடம் ஆகிய விவரங்களை இம்மாதம் 31 ஆம்திகதி தொடக்கம் ஜூன் 11 ஆம்திகதி வரை பாடசாலை நாட்களில் தினமும் நண்பகல் ஒரு மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பதிவு செய்துள்ளுமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தினங்களில் பதிவுகளை மேற் கொண்டு ஆவணங்களைப் பெறத்தவறுபவர்கள் பின்னர் அவற்றைப் பெற முடியாது என்றும் அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (ளி)

# கண்டி பெருந்தோட்ட தொழிற்சங்கம் ஜனவசம நிர்வாகத்திற்கு எதிராகப் போராட்டம்

கண்டி, மே 28

கண்டி, ஹந்தானைப் பெருந்தோட்ட ஒன்றிணைந்த தொழிற்சங்கம் ஜனவசம நிர்வாகத்திற்கு எதிராகப் போரட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகிறது.

கண்டி, ஹந்தானைப் பெருந்தோட்டம் பாரம்பரியமிக்க ஒரு பெருந்தோட்டமாகும். முன்னர் இது தனியார் கம்பனிக்குச் சொந்தமாக இருந்தபோது லாபமீட்டிய ஒரு தோட்ட மாகும். 1972 ஆம் ஆண்டு 'காணி உச்ச வரம்பு' சட்டத்தை அடுத்து அது அரச உடைமை யாக்கப்பட்டு ஜனவசமவின் கீழ் கொண்டு வரப்பட்டு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் நிர்வகிக்கப் பட்டு வந்தது. இதன் காரணமாக இதன் கீழ் வரக்கூடிய 11 பிரிவுகளான ஹந்தானை, உடுவெல, போப்பிட்டிய, லிட்டில்வெலி மற்றும் கிரேட்வெலி, அப்பர்கலகா, போன்றவற்றில் தொழில்புரியும் மூவாயிரத்து 800 பேர்வரை தமது பல்வேறு சலுகைகளையும், உரிமைகளையும் கொடுப்பனவுகளையும் இழந்து வருகின்றனர்.


இதனால், அவற்றைத் தமக்கு ஈட்டித் தரும் படி கோரிக்கை விடுத்து தொழிலாளர்கள் ஹந்தானை தோட்ட உரிமைகளை வென்றெடுக்கும் ஒன்றிணைந்த தொழிற் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி போராடி வருகின்றனர்.

இவர்களது ஊடக சந்திப்பொன்று நேற்று முன்தினம் கண்டி கல்யாணி யோதய மண்ட பத்தில் நடந்தது.

அதில் உரையாற்றிய அமைப்பின் செயலாளர் கே.தங்கராஜ், உபதலைவர் எம்.கே. ஆர். டியூடர்சிங்க உட்பட பிரதிநிதிகள் தொழிலாளர்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை எண்பதில் காலடி வைத்துள்ள மூத்த பத்திரிகையாளர் செ.நடராசா



தமிழ்ப்பத்திரிகைத் துறையில், தினகரன் பத்திரிகையில் செய்தியாளராகவும் எழுத்தாளராகவும் நாடாளுமன்ற 'ஹன்சார்ட்' அறிக்கையாளராகவும் பல வருடங்கள் பணியாற்றி ஓய்வுபெற்ற செல்லப்பா நடராசா இப்பொழுது தமது 80 ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்துள்ளார்.

இந்த வயதில் அவர் இளமைத்துடிப்புடன் செயற்பட்டு வருவது ஏனைய பத்திரிகையாளர்களுக்கு முன் உதாரணம் என்று கூறினால் தவறில்லை.

1954 ஆம் ஆண்டு தினகரனில் அலுவலகப் பத்திரிகையாளராக இணைந்த அவர், ஆசிரியர் வி.கே.பி. நாதன் பின்னர் ஆசிரியர் பேராசிரியர் க.கைலாசபதி ஆகியோரின் வழிகாட்டலில் தன்னை வளர்த்துக் கொண்டவர். பேராசிரியரே இவரைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்திய பெருமைக்குரியவர்.

செல்லப்பா நடராசா முக்கிய செய்திகளை எழுதும் போது அவரது பெயருக்கு முக்கியத்துவம் கொடுத்து அவரது பெயருக்கு முத்திரை பதித்த பெருமை பேராசிரியர் கைலாசபதி அவர்களையே சேரும். இவரைப் போலவே செய்தி ஆசிரியராகவும் ஆசிரியராகவும் பதவி வகித்த இ.சிவகுருநாதனும், திரு. நடராசாவை ஆதரித்து ஊக்கப்படுத்திய பெருமைக்குரியவர்.

1961 ஆம் ஆண்டு முதல் செல்லப்பா நடராசா நாடாளுமன்றத்தில் அறிக்கையாளராகப் பணியாற்றி பின் இளைப்பாறினார்.

நாடாளு மன்றத்தில் இவர் கடமையாற்றிய காலத்தில் நாடாளுமன்ற மரபுகள், மாண்புகள், சம்பிரதாயங்கள் பற்றி தொடர்ச்சியாக எழுதிய கட்டுரைகள் இவருக்குப் பெரும் புகழை ஈட்டிக்கொடுத்தன. அதன் காரணமாக இவர் ''பார்லி மெண்ட்'' நடராசா என அழைக்கப்படலானார். இன்றும் அவ்வாறே அழைக்கப்படுகிறார். இவர் எழுதிய ''எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம்'' எனும் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால்1986 இல் அதனது பத்தாவது வெளியீடாக வெளியிடப்பட்டது. இவரது நூல் அரசியல் நூலுமல்ல. அரசாங்க நூலூமல்ல. நாடாளுமன்ற மரபுகள், மாண்புகள்,சம்பிரதாயங்கள் பற்றி முதன் முதலில் வெளிவந்த நூல் என அறிஞர்களால் பாராட்டப்பட்டது.

இவர் நாடாளுமன்றத்தில் கடமையாற்றிய போதும் பாராட்டுக்குரிய எழுத்தாளராகவும் பத்திரிகையாளராகவும் விளங்கியவர். தமது எண்பதாவது அகவையிலும் இன்றும் அவர் இளமைத் துடிப்புடன் எழுதிக் கொண்டே இருக்கின்றார். சிபெ

# வடமாகாண லயன்ஸ் கழகத்திலிருந்து முதல்முறையாக உபமாவட்ட ஆளுநர்



யாழ்ப்பாணம், மே 29

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306B1 இன் வருடாந்த மாநாடு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் 2010/11 ஆண்டிற்கான உப மாவட்ட ஆளுநர் பதவிக்கான தேர்தலில் 59.7% வாக்குகளைப் பெற்று மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தை சேர்ந்த சிரேஷ்ட தலைவர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா வெற்றி பெற்றதுடன் வடமாகாண லயன்ஸ் கழகங்களின் 37 ஆவது ஆண்டு வரலாற்றில் முதல்முறையாகத் தெரிவுசெய்யப்பட்டதன் மூலம் யாழ்.மாவட்டத்திற்கு பெருமைசேர்த்துள்ளார். இவர் கடந்த 25 வருடங்களாக முழு அர்ப்பணிப்புடன் நலிவுற்ற மக்களுக்காக சேவையாற்றி எல்லோரினதும் நன்மதிப்பைப் பெற்றவராவார்.

அவருடைய சேவைக்காலத்தில் 108 அங்கத்தவர்களை லயன்ஸ்கழகங்களில் இணைத்து அதியுயர் விருதான "Key of Nation" ஐ பெற்றுள்ள பெருமை இவரைச் சாரும். அத்துடன் யாழ்.மாவட்டத்தில் 5 லயன்ஸ் கழகங்களை இவர் உருவாக்கியுள்ளார். யாழ்.மாவட்டத்தில் பல லியோ கழகங்களை உருவாக்கியதுடன் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இவர் இருந்துள்ளார். 'கண்பார்வைக்கு முதலிடம் அளிக்கும் சேவைத்திட்டத்திற்கு பெரும் பங்காற்றியுள்ளார். இவரின் சேவைக்காக மாவட்ட ரீதியிலும் சர்தேச மட்டத்திலும் பல விருதுகளை பெற்றுள்ளதுடன் லயன்ஸ் கழக சமூகத்தில் பெரும் மதிப்பைப் பெற்றுள்ளார்.

மேலும் இவரின் வெற்றிக்கு தென்பகுதி லயன்ஸ் கழகங்களின் பெரும் ஆதரவு கிடைக்கப்பெற்றதும் இச் சாதனையை நிலைநாட்டக் கூடியதாக இருந்தது. வடபகுதியில் இத் தேர்தலில் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராஜாவின் தலைமையில் இயங்கிய பிரசாரக்குழு வடபகுதியிலுள்ள லயன்ஸ் கழங்களிடையே ஒற்றுமையை உருவாக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (50)

# நினைவு கூர வேண்டிய இரு ஊடகவியலாளர்கள்

''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ'' இது ஔவைப்பாட்டியின் கூற்று. இது நூறு வீதம் உண்மை. அப்படியானால் இறந்தவர்களை மறந்துவிடுவதா? குடும்ப மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் இறந்தவர்கள் நினைவு கூரப்படுதல் உலகில் எல்லாப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களாலும் வெவ்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. குடும்ப மட்டத்தில் நினைவூட்டல், சமய அனுட்டானங்களுடன் குடுப்ப உறுப்பினர்களின் ஒன்றுகூடலுடன் நடைபெறும். பிரதேச மட்டத்தில் நடைபெறும் நினைவூட்டல் பிரதேச மக்கள் ஒன்றுகூடி சமய, சமூக நிகழ்ச்சிகளுடன் நடைபெறும். தேசிய மட்டத்தில் நடைபெறும் நினைவூட்டல் தேசத்தின் பல பாகங்களிலும் பெரும்பாலான மக்கள் பங்குபற்றிச் சிறப்பிக்கப்படும். இவ்வாறு நினைவுகூரப்படுபவர்கள் பின்வரும் லட்சணத்தைக் கொண்டவர்களாக இருப்பதை அவதானிக்கலாம்.

அர்ப்பணிப்புடன் குடும்பமேம்பாட்டுக்கு உழைத்தவர். அர்ப்பணிப்புடன் தான் சார்ந்த சமூக மேம்பாட்டுக்கு உழைத்தவர்.

அர்ப்பணிப்புடன் இன,மத,குல பேதங்களுக்கப்பால் நின்று நாட்டுக்கும் மனித குல மேம்பாட்டுக்கும் உழைத்தவர்.

இந்தப் பின்னணியில் நாம் நினைவு கூரும் பரரூபசிங்கம் தேவகுமார், மகேந்திரன் வரதன் ஆகியோரைப் பொருத்திப் பார்த்தல் வேண்டும்.

**தேவகுமார்**

பரரூபசிங்கம் தேவகுமார் மூளாய்றோட் சமூகத்தின் செயற்பாட்டில் தன்னை ஸ்தாபன ரீதியாக இணைத்துக் கொண்டு செயற்பட்டவர்.

வட்டு - இளைஞர் உடலுள விருத்திச் சங்கம், வட்டு - மூளாய் றோட் ஐக்கிய நாணயச் சங்கம், வட்டு - தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், வட்டு - கண்ணகை அம்மன் கோயில் தொண்டர் சபை, அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோயில் தொண்டர் சபை என்பவற்றில் இவர் அங்கம் வகித்தும் செயற்பட்டுள்ளார்.

இவை எல்லாவற்றிலும் நிர்வாக மட்டத்தில் பங்குபற்றித் துடிப்புடன் செயற்பட்டவர். இவரின் தாய் மொழி ஆற்றலும் பேச்சுத்திறனும் பல முக்கியஸ்தர்களின் கவனத்தை ஈர்த்தது என்றால் மிகையாகாது. நவீன முகாமைத்துவம் எதிர்பார்க்கும் எல்லா அம்சங்களும் உள்ள இளைஞனாக அவரின் நோக்கும் போக்கும் அமைந்திருந்தன. அவரின் துணிச்சல்மிக்க அணுகுமுறை அவரை நாடி ஊடகத்துறை நகர உதவியது. சக்தி தொலைக்காட்சி நிறு வனம் அவரைத் தன் சேவையில் இணைத்தது. இந்தப் புதிய சூழலில் செயற்பட்ட ப.தேவகுமார் பல நண்பர்களையும் பல எதிரிகளையும் சம்பாதிக்கநேர்ந்தது.

அரச மட்டத்திலும் பொதுத்துறை யிலும் தொடர்பு ஏற்படுத்துதல் தவிர்க்கமுடியாததாகியது. தான் பொறுப்பெடுத்த கடமையை ஊடக தர்மதத்தைப் பேணிக் கொண்டு துடிப்புடன் செயற்பட்டார். ''அஞ்சுவதற்கு அஞ்சாமை பேதமை'' என்னும் வள்ளுவனின் கூற்றை இளம் உள்ளம் உதாசீனம் செய்தது. பலரிடம் உட்பகை வளர்ந்தது. நலன் விரும்பிகளாகக் காட்டிய சிலர் தன்னை சுயதேவைக்காகப் பாவித்தனர் என்பதை காலம் தாழ்ந்து உணர்ந்து கொண்டார். இவை எல்லாவற்றின் ஒட்டுமொத்த விளைவாக அவர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டார். தேவகுமார் மட்டுமல்ல அவருடன் பயணித்த வரதனும் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார்.



**வரதன்**

வரதன் ஓர் அப்பாவி. மத நம்பிக்கையுடையவர். அவர் எல்லோருக்கும் பிரதி உபகாரம் கருதாது உதவுபவர். அவரை எல்லோரும் எங்கள் வீட்டுப்பிள்ளை எனப் பரிவுடன் அழைப்பர். எவருக்கும் உடுக்கை இழந்தவன் கைபோல் உதவும் பண்பாளன். அரசியலில் எள்ளளவும் ஈடு பாடில்லாதவர்.

இவ்விரு இளஞ்சிங்கங்களை மூளாய் றோட் சமூகம் இழந்தது. இவர்கள் பட்டை தீட்டப்பட வேண்டிய வைரங்கள், இவ்விருவரின் கொலைகளும் தனிப்பட்ட விரோதத்தால் நிகழ்ந்தவையல்ல. இக்கொலைகளுக்கு அரசியல் பின்னணியுண்டு. எம்மைவிட்டு கொடூரக்கொலை மூலம் பிரிக்கப்பட்ட இளைஞர்களை நினைவூட்டுதல் அர்த்தபுஸ்டியாக இருக்கவேண்டும்.

–சி.இராமச்சந்திரா

# 'நெல்சிப்' பற்றிய கலந்துரையாடல்கள்

நாவற்குழி,மே 29

வலி.கிழக்குப் பிரதே சபையினர் 'நெல்சிப்' திட்டத்தை நடை முறைப்படுத் தல் தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்ள உள்ளனர். கிராம மட்டங்களில் இக்கலந்துரையாடல்கள் நடைபெற உள்ளன. இதில் பிரதேச சபையின் அதிகாரிகள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களும் பங்கேற்கவுள்ளனர். (எ-121)

# தமிழ் உறவுகள் துன்பத்தில் உழல்கின்றார்கள்; இங்கு ஆட்டம், பாட்டம் கொண்டாட்டமா?

உலகில் மிகப் பெரிய யுத்தம் இலங்கையின் தமிழர் தாயகத்தில் கடந்த வருடம் நடைபெற்று முடிந்துவிட்டது. மிகப்பெரிய அழிவை , இழப்பை, அவலத்தை எம் உறவுகள் சந்தித்திருக்கின்றன. இடம்பெயர்ந்தவர்களில் பலர் சொந்த இடங்களுக்கு இன்னமும் திரும்பாமல் அகதி முகாம்களிலும் தடுப்பு முகாம்களிலும் வாழ்க்கையைத் தொடர்கின்றனர்.

உறவுகளை இழந்தவர்கள் ஒருபுறம், அங்கங்களை இழந்தவர்கள் மறுபுறம். குடும்ப அங்கத்தவர்களைப் பிரிந்தவர்கள் இன்னொருபுறம்..... வன்னி மக்களின் அவலங்கள் தொடர் கதை தானா?

யாழ். குடாநாட்டில் பல இடங்களில் இந்து ஆலயத்திருவிழாக்கள் ''களை'' கட்டத் தொடங்கி உள்ளன. திருவிழாக்கள் போட்டா போட்டியாக நடைபெறுகின்றன. சிகரங்கள், விட்டுவிட்டு ஒளிரும் மின்குமிழ்கள், லைட் இஞ்சின், ஆயிரம் ரியூப்லைட், இசைக்குழுக்கள், மேளச்சமாக்கள், வானவேடிக்கைகள், ஒலிபெருக்கிகளின் அலறல்கள் எனப் பகட்டுடன் ஆல யத்திருவிழாக்கள் அமைதியாக வழிபடவேண்டிய ஆலயங்கள் இன்று கேளிக்கை விடுதியாக மாறிவிட்டனவோ?




அடியவர்களின் அன்பளிப்பு, காணிக்கைப் பணங்கள், கனவுத் தொழிற்சாலையின் கழிவு நீரான சினிமாப்பாடல்களை இசைக்கும் இசைக் குழுவினரின் கைகளில் போய்ச்சேர்கிறது. உள்ளூர் இசைக்குழு, கொழும்பு இசைக்குழு, தமிழக இசைக்குழுக்கள் எனப் பல இசைக் குழுக்கள் யாழ்ப்பாண இந்து ஆலயங்களில் ஆபாசம் நிறைந்த சினிமாப் பாடல்களை புனித இடமாகக் கருதப்படும் ஆலங்களில் இசைக்கின்றன. லட்சக்கணக்கில் பணம் வீணடிக்கப்படுகின்றது.

இந்தப் பணம் வன்னி மக்களின் துயரைப் போக்க பயன்பட்டால் இறைவன் உள்ளம் இன்பம் அடையும். இந்து ஆலயங்களிலிருந்து உடுபுடைவைகளாகவும், சமையற் பாத்திரங்களாகவும், பால்மாக்களாகவும், கற்றல் உபகரணங்களாகவும், பணமாகவும், மருந்தாகவும் அன் பளிப்புக்கள் வன்னி மக்களை சென்றடையவேண்டும்.

கத்தோலிக்க மக்களின் தேவாலயங்களில் சேரும் பணத்தில் ஒரு பகுதி யாழ். ஆயரின் வழிகாட்டலில் ''கியூடெக்ஸ் கரிதாஸ்'' நிறுவனத்தின் ஊடாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைகின்றன. அண்மையில் கூட கரிதாஸ் நிறுவனத்தினர் ஒரு வலைத் தொழிற்சாலையை குருநகரில் திறந்து யுத்தத்தில் கணவனை இழந்த பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி உள்ளனர்.

இந்து ஆலயங்கள் தமிழக இசைக்குழுவினருக்கும் கொழும்பு இசைக்குழுவினருக்கும் வேலைவாய்ப்பு வழங்குகின்றன. போக்குவரத்து வசதி, விமான ரிக்கட், நட்சத்திரக் ஹோட்டல்களில் தங்குமிட வசதி, உணவு வசதி என்று அடியவர் பணம் அநியாயமாக அந்நிய நாட்டுக்குப் போகின்றது. ஆலயங்களில் சின்னமேளங்கள், சினிமாப்பாடல்களைப் பாடி ஆடும் இசைக்குழுக்கள் தேவைதானா? ஏன் இந்து மதத்தலைவர்கள் இவ்விடயத்தில் மௌனம் சாதிக்கின்றனர்.

''கடவுள் ஏன் கல்லானான்- மனம் கல்லாய்ப் போன மனிதர்களால்'' எனக் கண்ணதாசன் கூறியது எமக்காகத்தானா? ''பக்கத்தில் இருப்பவன் துன்பம்தனை பார்க்கப் பெறாதவன் புண்ணிய மூர்த்தி'' எனப் பாரதி கூறினானே? யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இந்துமக்கள் புண்ணியமூர்த்தியாக வாழ்வார்களா? புண்ணியம் செய்வார்களா? அறம் செய்ய விரும்புவார்களா? அறம் செய்வார்களா? துயர் துடைப்பார்களா? அள்ளிக் கொடுப்பார்களா? ஆவன செய்வார்களா? மக்கள் பணியே மகேசன் பணி எனக் கூறுவார்களா? செயலில் காட்டுவார்களா? நல்லை ஆதீனம், இந்து அமைப்புகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயத்தில் அதிக அக்கறை செலுத்தி ஆலயப் பணங்கள் அகதிகளின் கைகளுக்கு சேருவதற்கு வேண்டிய போதிய ஒழுங்கை செய்ய வேண்டும். உறவுப்பாலம் அமைக்க வேண்டும். உறவுகளுக்கு கைகொடுக்கவேண்டும்.

[illegible], யாழ்ப்பாணம்.

# வாசகர் திருமுகம்

## பாதை புனரமைப்பு காத்திரமானதாக அமையட்டும்

யாழ்.-பண்ணை- ஊர்காவற்றுறை வீதி புனரமைப்பு தசாப்தங்களுக்குப் பின்னர் தற்பொழுது மேற்குப் பக்கமாக அகலித்து பக்கச்சுவர் அமைத்து, புனரமைப்பு செய்யப்படுகின்றது. இவ்வீதி புனரமைக்கப்படுவதன் மூலம் தீவக மக்களும், ஏனைய பிரதேச மக்களும் மிகவும் பயனடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

இனிவரும் காலங்களில் இவ்வீதிக்கான நிதி ஒதுக்கீடானது இன்னும் எத்தனை தசாப்தங்களுக்குப் பின்னரோ தெரியவில்லை. இந்நிலையில் இவ்வீதியின் ஒவ் வொரு பகுதி வேலையும் காத்திரமானதாக இருக்கவேண்டும் என எண்ணுவதில் தவறேதும் இருப்பதாகத் தெரியவில்லை.

இருப்பினும் இப்புனரமைப்பு வேலையினை அவதானிக்கும் போது இவ் வேலையின் பயனானது நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும் என்பதில் ஒரு தெளிவற்ற நிலையே காணப்படுகின்றது. ஏனெனில் கடலினுள் குறிப்பிட்ட ஆழம் வரை அத்திபாரம் வெட்டப்பட்டு, இதிலிருந்து ஒரு குறிப்பிட்ட உயரம் வரை கொங்கிறீற் கலவை கொண்டு பக்கச்சுவர் அமைக்கப்பட் டாலும், இதன் மேற்பகுதி 6'X9' சாதாரண கண்டகல் கலவை மூலமே அமைக்கப்படுகின்றது. இதனால் மிகக் குறுகிய காலத்தில் இப்பக்கச் சுவரானது சேதமடைய வாய்ப்புள்ளது. காரணம் இருபக்கமும் ஆழம் கூடிய கடல் காணப்படுவதால் காற்று வீசும் காலங்களில் இருபக்கமும் அலைகள் வந்து மோதுவதை இவ்வீதியால் செல்லும் எவரும் அவதானிக்கத் தவறமாட்டார்கள். மேலும் மழை காலங்களில் கடல்மட்டம் உயர்வடைந்து இவ்வீதியில் மோதுவதையும் காணமுடியும். இந் நிலையில் சாதாரண கண்டகல் சிமெந்துக் கட்டானது தாக்குப்பிடிக்க கூடியதாய் இருக்காது.

எனவே நீண்ட காலத்திற்குப் பின்னர் செய்யப்படும் இப்புனரமைப்பு வேலை யானது மேலும் நீண்ட காலம் நிலைத்திருக்கும் வகையில் இவ் வீதியில் அமைக் கப்படும் பக்கச் சுவரினை கண்டகல் கலவை கொண்டு அமைக்காது, அதனை யும் கொங்கிறீற் கலவைகொண்டு அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பொன் னாலை - காரைநகர் கடல்பாதை, வல்லைவெளி கடல் பகுதி என்பன முழுவது மாக கொங்கிறீற் கலவை மூலமே அமைக்கப்படுகிறது. எனவே எமது பிரதேசத்தை சேர்ந்த அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், துறைசார் வல்லுநர்கள், அரச உயர் நிர்வாகிகள் போன்றோர் இது விடயத்தில் உடனடியாக கவன மெடுத்து சிறந்த முறையில் இவ்வீதி அமைய உதவுமாறு தீவக மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

சி.உதயகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இசையும் அசைவும் நிகழ்வினை நடத்திய மட்டுவில் தெற்கு அ.மி.த.க வித்தியாலய மாணவர்களுக்கு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் விசேட பரிசில் வழங்குவதை முதல் படத்திலும், கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பங்குபற்றிய அணி வீரர்கள் விருந்தினர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுவதை இரண்டாவது படத்திலும், கரப்பந்தாட்டப் போட்டியின் விறுவிறுப்பான கட்டத்தை மூன்றாவது படத்திலும், போட்டியில் அதிக புள்ளிபெற்று முதலிடம் பெற்ற மட்டுவில் தெற்கு வளர்மதி வி.க அணிக்கு வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை கேடயம் வழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்:ஜயந்தன்)

## செல்ரனின் அதிரடிச் சதம் கைகொடுக்க ஜொலிஸ்ராரை வென்றது ஸ்ரீகாமாட்சி

யாழ்ப்பாணம்,மே29

செல்ரனின் அதிரடிச் சதம் கைகொடுக்க ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வென்றது ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழகம்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திவரும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 30 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் சிவராஜ் 64 ஓட்டங்களையும், ஜெயராஜ் 41 ஓட்டங்களையும், சுதாகரன் 19 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி வீரர்களான திலீபன் 6 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் ஜனார்த்தனன் 6 ஓவர்கள் பந்துவீசி 51 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஜெயறூபன் 6 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

209 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி 21 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்ரன் 100 ஓட்டங்களைத் தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். இதில் 10 ஆறுகள் 5 நான்குகள் அடங்கும். ஜெயறூபன் 53 ஓட்டங்களையும், நிரேஷன் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரர்களான ரெனி 6 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் லக்ஸ் சுமிகாந் 4 ஓவர்கள் பந்துவீசி 60 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (50-23)

## ஜொலிஸ்ரார் கிண்ண போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே29

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* காலை 8.30 மணி - மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி எதிர் அரியாலை விளையாட்டுக்கழக அணி.
* பிற்பகல் ஒரு மணி - கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி எதிர் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி.

(50-23)

## யாழ்.கல்விவலய ஆசிரியர் அணி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது

யாழ்ப்பாணம்,மே29

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 63ஆவது ஆண்டு நிறைவையொட்டி திணைக்களங்களுக்கு இடையே நடத்திவரும் 7பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் அரையிறுதியாட்டம் ஒன்றில் யாழ்.கல்வி வலய ஆசிரியர் அணி வெற்றிபெற்றது.

கடந்த சனிக்கிழமை அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்.கல்வி வலய ஆசிரியர் அணியை எதிர்த்து கிளிநொச்சிக் கல்வி வலய ஆசிரியர் அணி மோதியது.

இதில் யாழ்.கல்வி வலய ஆசிரியர் அணி தன்னை எதிர்த்து விளையாடிய கிளிநொச்சிக் கல்வி வலய ஆசிரியர் அணியை 8:2 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டு இறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற்றது. (50-23)

## மாவட்டச் செயலகம் நடத்தும் வலைப்பந்தாட்டப் போட்டி நாளை

வலி.வடக்கு,மே29

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ்.மாவட்டப் பிரதேச செயலங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகளுக்கு இடையேயான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளின் விவரம் வருமாறு:-

* சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் சங்கானை பிரதேச செயலக அணி.
* கரவெட்டி பிரதேச செயலக அணி எதிர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி.
* ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் உடுவில் பிரதேச செயலக அணி.
* சாவகச்சேரி பிரதேச செயலக அணி எதிர் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி.
* கோப்பாய் பிரதேச செயலக அணி எதிர் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி.
* நல்லூர் பிரதேச செயலக அணி எதிர் பருத்தித்துறை பிரதேச செயலக அணி.

இரண்டாம் சுற்றில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி விளையாடவுள்ளது. (50-6-86)

## சோமஸ்கந்தா, ஆவரங்கால் மகாஜன, உடுப்பிட்டி மிஷன் அணிகள் கரப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம்,மே29

டி.எஸ்.ஐ. ஆதரவுடன் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 18, 16, 14 வயதுப் பிரிவுகளின் ஆண் அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 18 வயதுப் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியும், 16 வயதுப் பிரிவில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணியும்,14 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும் வெற்றி பெற்றுள்ளன.

கடந்த வியாழக்கிழமை புத்தூர் நடராஜ இராமலிங்க கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற 18 வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி மோதியது.

இதில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து விளையாடிய உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி அணியை 2:1 என்ற செற் கணக்கில் வென்றது.

தொடர்ந்து இடம்பெற்ற 16 வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் ஆவரங்கால் மாகாஜன வித்தியாலய அணியை எதிர்த்து அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணி மோதியது.

இதில் ஆவரங்கால் மாகாஜன வித்தியாலய அணி தன்னை எதிர்த்து விளையாடிய அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணியை 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற 14 வயதுப் பிரிவுகளுக்குமான ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியை எதிர்த்து அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணி மோதிக்கொண்டது.

இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணியை 2:0 செற் கணக்கில் வெற்றிகொண்டது. (50 - 23)

## அத்தியார் இந்து சம்பியனானது

நீர்வேலி,மே29

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாசாலை விளையாட்டரங்கில் டி.எஸ்.ஐ.நிறுவனம் நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 14 வயதுப் பெண்கள் பிரிவில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் மேலும், 18 வயது ஆண்களும், பெண்களுமான இரு பிரிவினரும் மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (50-110)

### குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## இறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், மே 29

மல்லாகம் வானவில் விளையாட்டுக் கழகம்'' நேஷன் லங்கா பினான்ஸ்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தி வந்த ஆறு பந்து பரிமாற்றங்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி, 'ருவென்ரி-20', கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் இறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

'ருவென்ரி-20' கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் எம்.ஆர்.எப். விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காமாட்சி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.ஆறு ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டியில் இறுதியாட்டத்தில் கலையொளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இலங்கை வங்கியின் முன்னாள் பிராந்திய முகாமையாளர் எஸ்.விக்னராஜா இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக செலிங்கோ இன்சூரன்ஸ் நிறுவனத்தின் சுன்னாகம் கிளை முகாமையாளர் சி. பிரசன்னா, ''நேஷன் லங்கா பினான்ஸ்'' நிறுவனத்தின் ந. ஜெய்ரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வர். (50-23)




உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற தடகளப்போட்டியில் வீர, வீராங்கனை ஒலிம்பித்தீபம் ஏற்றுவதையும் இடைவேளை நிகழ்ச்சியையும் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பை ரயிலுக்கு குண்டு வைத்துத் தகர்ப்பு; நக்ஸல்களின் அதிரடியால் 100 பேர் பலி!

## 150 பேர் படுகாயம்; சம்பவ இடம் விரைந்தார் அமைச்சர் மம்தா



கொல்கத்தா;மே29

மேற்குவங்கத்திலிருந்து மும்பை நோக்கி வந்துகொண்டிருந்த பயணிகள் ரயில் நக்ஸலைட்டுகளால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது. இதில் 100 பேர் வரை பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மேலும் 150 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மேற்குவங்கத்தில் இருந்து மும்பை நோக்கி ஞானேஸ்வரி எக்ஸ்பிரஸ் ரயில் சென்று கொண்டிருந் தது. இந்நேரத்தில் தண்டவாளத்தில் பெரும் வெடிக்கும் சப்தம் கேட்டது. இத னையடுத்து ரயில் கவிழ்ந்தது. இதில் 13 ரயில் பெட்டிகள் ஒன்றோடு ஒன்று மோதி சரிந்து விழுந்தன. பயணிகள் அலறல் சத்தம் மட்டுமே அதிகம் ஒலித்தது என அருகில் இருந்த கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதில் 100 பேர்வரை உயிரிழந்தனர். மேலும் 150 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். பலர் ரயில் பெட்டிகளின் இடிபாடுகளில் சிக்கியபடி யுள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கவிழ்ந்து கிடந்த ரயில் மீது அந்த வழியாக வந்த சரக்கு ரயில் மோதியதால் பெரும் சேதம் ஏற்பட்டது. பயணிகளை மீட்கும் பணிக்காக தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு அவசரகால படையினர் மற்றும் விமான படையினரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். சிக்கிய பயணிகளை மீட்கும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

ரயில்வே தண்டவாளத்தில் குண்டு வெடித்தது உண்மைதான் என ரயில்வே துறை அமைச்சர் மம்தா ஒப்புதல் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி, ரயில்வே துறை அமைச்சர் மம்தாவை அழைத்து விசாரித்தார். இந்த நிலைமை குறித்து பிரதமரிடம் விளக்கப்பட்டது. சம்பவத்தை அடுத்து இப்பகுதியில் ஹவுரா வழியாகச் செல்லும் ரயில்கள் ரத்து செய்யப்பட்டன. 150 பேர்வரை காயமடைந்துள்ளனர் எனவும், உயிர்ப்பலி அதிகம் இருக்கும் என அஞ்சப்படுகிறது எனவும், உள் துறைச் செயலர் ஜி.கே. பிள்ளை கூறினார்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் மாவோ - நக்ஸல்கள் இருக்கின்றனர் என சந்தேகிக்கப்படுகிறது என ரயில்வே போக்குவரத்து துறையினர் தெரிவிக்கின்றனர்.

சம்வபவம் நடந்துள்ள பகுதிக்கு ரயில்வே துறை அமைச்சர் மம்தா பானர்ஜி விரைந்தார். தாக்குதல் நடந்த சம்பவம் குறித்து அவர் கேட்டறிந்தார். மேலும் அங்கு நடக்கும் மீட்பு பணிகளைப் பார்வையிட்டு அங்கிருந்தபடியே உத்தரவு பிறப்பித்த வண்ணமாக இருந்தார். இதில் பலியானவர்களுக்கு நிவாரணமாக ரூபா 5 லட்சமும், காயமுற்றவர்களுக்கு ரூபா 2 லட்சமும் வழங்கப்படும் என அவர் அறிவித்துள்ளார்.

# இந்திய ராணுவ, உளவுப்பிரிவினருக்கு விசா வழங்க கனடாத் தூதரகம் மறுப்பு

## பதிலடி தரப்படுமென மத்திய அரசு எச்சரிக்கை

டில்லி,மே29

இந்திய இராணுவ மற்றும் உளவுத் துறையில் பணியாற்றியவர்களுக்கு விசா வழங்க கனடா மறுத்து வருகிறது. இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ள இந்தியா, பதிலடி தரப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்திய எல்லைப் பாதுகாப்பு படையில் கான்ஸ்டபிளாக பணியாற்றி ஓய்வு பெற்ற பதேசிங் பாந்தர் என்பவர் கனடாவுக்குச் செல்ல 'விசா'வழங்க கோரி, சமீபத்தில் டில்லியில் உள்ள கனடா தூதரகத்தில் விண்ணப்பித்திருந்தார். ஆனால், 'காஷ்மீரில் வன்முறையில் ஈடுபடும் எல்லைப் படையில் பணியாற்றியவர்' என்று காரணம் கூறி அவருக்கு விசா வழங்க கனடா மறுத்து விட்டது.

இந்த விடயம் வெளியாகி 4 நாள்களான நிலையில், ஏற்கனவே இந்திய இராணுவ மற்றும் உளவுத்துறையினர் பலருக்கு கனடா விசா வழங்க மறுத்துள்ளமை தெரிய வந்துள்ளது. உளவுத்துறை முன்னாள் அதிகாரி எஸ்.எஸ்.சித்து, கனடாவில் உள்ள தன்னுடைய மகனை பார்க்கச் செல்வதற்காக, கடந்த மார்ச் மாதம் விசா கேட்டு விண்ணப்பித்தார். ஆனால், அவர் பணியாற்றிய உளவுத்துறை, ஜனநாயக நாடுகளில் உளவு பார்த்தல், ஆட்சி கவிழ்ப்பு, தீவிரவாதம் போன்ற செயல்களில் ஈடுபடக்கூடியது என்றும், ஆகவே, அவருக்கு விசா வழங்க முடியாது என்றும் டில்லி கனடா தூதரகம் கூறிவிட்டது.

மேலும், அடுத்த மாதம் ஜி-20 மாநாட்டில் பங்கேற்பதற்காக, பிரதமர் மன் மோகன் சிங் கனடா செல்கிறார். அது தொடர்பாக நேரில் ஆய்வு செய்வதற்காக இந்திய உளவுத்துறை அதிகாரி ஒருவர் கனடா செல்ல விசா கோரி விண்ணப்பித்திருந்தார். ஆனால் அவருக்கு கனடா விசா வழங்க மறுத்து விட்டது. இந்தியாவின் கடும் எதிர்ப்புக்கு பிறகே, அவருக்கு விசா வழங்கப்பட்டது.

இந்தியச் செய்திகள்

ஐ.நாவில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்

# சீனாவிடம் ஆதரவு கோரினார் பிரதீபா!

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்ஸிலில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் இடம் அளிப்பது தொடர்பாக சீனாவின் ஆதரவை இந்தியா கோரியுள்ளது.

சீனா சென்றுள்ள குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல், அங்கு சீன ஜனாதிபதி ஹூ ஜின்டாவோவிடம் இந்தக் கோரிக்கையை வைத்தார்.

கடந்த வியாழக்கிழமை மாலையில் சீன ஜனாதிபதி ஹூ ஜின்டாவோ, குடியரசுத் தலைவர் பட்டீல் ஆகியோர் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக பேச்சு நடத்தினர். மூன்று ஒப்பந்தங்களும் அப்போது கையெழுத்தாகின. ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து கிடைப்பதற்கு சீனாவின் ஆதரவை பட்டீல் கோரினார் எனத் தெரிகிறது. சீனா மட்டுமின்றி பிற நாடுகளிடமும் இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

# காதலின் ஆழத்தைக் காட்ட மதம் மாறுகிறார் நயன்தாரா!



சென்னை,மே 29

பிரபுதேவா மீதான காதலின் ஆழத்தை வெளிப்படுத்த நடிகை நயன்தாரா மதம் மாறத் தீர்மானித்துள்ளார் .

நயன்தாராவின் சொந்தப் பெயர் டயானா மரியம் குரியன். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த இவர், சினிமாவுக்காக நயன்தாரா என பெயர் வைத்துக் கொண்டார். இப்போது நயன்தாரா என்ற பெயரையே நிரந்தரப் பெயராக மாற்றிக் கொள்ளப் போகிறாராம்.

தன்னை விட்டு ஒரு கணமும் பிரியமாட்டேன் என்று பிரபுதேவா பஞ்சாயத்தாரிடம் உறுதியாகக் கூறியதில் நெகிழ்ந்து போன நயன்தாரா, உடனே மதம் மாறி திருமணம் செய்து கொண்டு கள்ளக் காதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று பிரபுதேவாவிடம் கூறினாராம்.

ஆனால், ரம்லத் நீதிமன்றுக்குப் போனால் கம்பி எண்ண வேண்டிய நிலை இருப்பதால், அவரைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் தனது குடும்பத்தினரையே பிரபுதேவா ஈடுபடுத்தியுள்ளாராம்.

எனவே, பிரச்சினை சரியான பின்னர் நயன்தாராவைத் திருமணம் செய்ய முடிவெடுத்துள்ளாராம் பிரபுதேவா.

# கொளுத்தும் வெயிலுக்கு ஆந்திராவில் 75 பேர் பலி!

ஆந்திராவில் கொளுத்தும் வெயிலுக்கு கடந்த இரண்டு நாள்களில் 75 பேர் பலியாகியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ராமகுண்டத்தில் அதிக பட்சமாக 114.8 டிகிரியில் வெயில் கொளுத்தியது.

கோடை வெயிலின் அனல் தாங்க முடியாமல் கடந்த இரண்டு நாள்களில் அடிலாபாத் மாவட்டத்தில் 17 பேரும், மெஹ்பூப் நகர் மாவட்டத்தில் 16 பேரும், கரீம்நகரில் 10 பேரும், மேடக்கில் ஆறு பேரும், கம்மம் மாவட்டத்தில் ஐந்து பேரும், கர்னூல், விசாகப்பட்டினம், மேற்கு கோதாவரி மாவட்டங்களில் தலா நான்கு பேரும், நெல்லூர் மற்றும் நிஜாமாபாத் மாவட்டத்தில் தலா மூன்று பேரும், அனந்தபூர், ஸ்ரீகாகுளம், விஜயநகரம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவரும் பலியாகியுள்ளனர்.

மேலும், கடலோர நகரான விசாகப்பட்டினத்தில் வெயில் வறுத்தெடுக்கிறது. லைலா புயல் முடிந்ததும் அனல்காற்று அதிகரித்திருக்கிறது. அதிகாலை முதல் நீடிக்கும் வெப்பம், இன்னும் ஒரு வாரத்திற்கு நீடிக்கும் என்று வானிலை [illegible]

# சீமானின் மாநாட்டில் பினாங்கு முதல்வர் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேச்சு

## நடவடிக்கை எடுக்கக் கோருகிறது இந்தியா

சென்னை,மே29

சீமானின் அரசியல் கட்சி மாநாட்டில் பினாங்கு துணை முதல்வர் ராமசாமி, இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியுள்ளார். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று மலேஷிய அரசுக்கு இந்திய வெளியுறவுத்துறை கடிதம் அனுப்பியுள்ளது.

சீமானின் அரசியல் கட்சி மாநாடு மதுரையில் மே 18 ஆம் திகதி நடைபெற்றது. மலேஷியாவின் பினாங்கு மாநிலத் துணை முதல்வர் இம்மாநாட்டில் கலந்துகொண்டு பேசினார்.

பொதுவாகவே இந்த மாநாட்டில் பேசியவர்களின் பேச்சுகள் பற்றி இந்திய உளவுத்துறை குறிப்பெடுத்தது . விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளதால் அந்த இயக்கத்தை ஆதரித்து பேசுகிறார்களா என்று அவதானித்தது.

இந்தக் குறிப்புகள் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பினாங்கு துணைமுதல்வர் ராமசாமி, மதுரை மாநாட்டில் பேசும்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசினார். மலேஷியாவில் எங்கள் ஆட்சி அமைந்தால் விடுதலைப் புலிகளுக்கு அங்கீகாரம் அளிப்போம் என்று பேசினார் என அந்தக் குறிப்புகளில் அடங்கியிருக்கின்றன.




இந்திய வெளியுறவுத்துறை இந்த குறிப்புகளை மலேஷிய அரசுக்கு அனுப்பு வைத்திருக்கிறது. அத்துடன் ஒரு கோரிக்கைக் கடிதத்தையும் அனுப்பி வைத்திருக்கிறது.

அந்தக் கடிதத்தில், இந்திய இறையாண்மைக்கு எதிராக பினாங்கு துணை முதல்வர் ராமசாமி பேசியுள்ளார். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் படை தாக்கியதில் தலிபான்கள் 40 பேர் மரணம்!

பெஷாவர்,மே29

பாகிஸ்தான் இராணுவம் மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் 40 தலிபான்கள் கொல்லப்பட்டனர்; 15 பேர் காயமடைந்தனர்.

வடமேற்கு பாகிஸ்தான் பகுதியிலுள்ள ஓரக்ஜாய் பழங்குடியினப் பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் மறைந்திருந்து படையினர் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். அங்குள்ள தலிபான் தீவிரவாதிகளை வேரறுப்பதற்காக பாகிஸ்தான் இராணுவத்தினர் தீவிர தேடுதல் வேட்டையை முழுவீச்சில் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், வியாழக்கிழமை தபோரி, கில்ஜோ ஆகிய பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 15 தலிபான்கள் கொல்லப்பட்டனர்; மேலும் 15 பேர் காயமடைந்தனர்.

ஹெலிக்கொப்டரிலிருந்து பாகிஸ்தான் இராணுவத்தினர் குண்டுகளை வீசி, தலிபான்களின் 5 மறைவிடங்களையும் தகர்த்தனர். ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய காஷா பகுதியிலும் பாகிஸ்தான் இராணுவத்தினர் தலிபான்கள் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் 25 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

அதேவேளை, வடமேற்கு பாகிஸ்தானின் ஹன்கு மாவட்டத்தில் வியாழக்கிழமை பொலிஸாருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 2 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பொலிஸார் ஒருவரும் உயிரிழந்தார்.

பொலிஸார் அன்று ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்கள் சென்ற வாகனம் மீது, தீவிரவாதிகள் திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதையடுத்து, இரு தரப்பினருக்குமிடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இதில் 2 தீவிரவாதிகளைப் பொலிஸார் சுட்டுக் கொன்றனர். தீவிரவாதிகள் சுட்டதில், பொலிஸார் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர். ஹன்கு மாவட்ட பொலிஸ் தலைமை அதிகாரி மிர் சமன் இத்தகவலை வெளியிட்டார்.

## எவரெஸ்டில் ஏறியவர்களுக்கு நேபாளத்தில் கௌரவிப்பு

காத்மாண்டு,மே29

உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் மலைச் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ள 100 பேரை நேபாளம் இன்று பாராட்டி கௌரவிக்கிறது

இவ்விழாவின்போது 20 தடவைகள் எவரெஸ்டில் ஏறி சாதனை படைத்துள்ள அபா ஷெர்பாவுக்கு, சார்க் நல்லெண்ணத் தூதர் பதவி அளிக்கப்படும். எவரெஸ்ட் சிகரம் அருகிலுள்ள கும்பு பகுதி வளர்ச்சிக்காகப் பாடுபடும் வீரருக்கு டென்சிங் ஹிலாரி விருது அளிக்கப்படும்.

விருது வழங்கும் விழாவுக்கு முன்னர் எவரெஸ்டில் மலையேறிய வீரர்கள், சுற்றுலா ஏற்பாட்டு முகவர்கள், அதிகாரிகள், அரசு அதிகாரிகள், தொழிலதிபர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் பங்கேற்கும் பேரணியொன்றும் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஒபாமாவின் சொத்து மதிப்பு ரூ. 75 கோடி



வாஷிங்ரன்,மே29

ஒபாமா, உலகின் மிகப்பெரிய செல்வந்த நாட்டுக்குத் தலைவராக இருக்கலாம். ஆனால், அவரது தனிப்பட்ட சொத்து மதிப்பு இலங்கை நாணயப்படி வெறும் சுமார் 75 கோடி ரூபாய்தான். கடந்த 50 ஆண்டுகளில் இவரது சொத்து மதிப்புதான் மிகவும் குறைவானதாகும்.

கடந்த காலத்தில் 1945 ஆம் ஆண்டு முதல் 1953 ஆம் ஆண்டுவரை அமெரிக்க ஜனாதிபதியாக ஹாரி ட்ரூமன் இருந்தார். இவர்தான் மிகக் குறைவான சொத்து மதிப்புடையவர். இவரது சொத்து மதிப்பு அந்த காலத்தில் வெறும் 15 கோடி ரூபாதான்.

அரசியல் சட்ட நிபுணரான ஒபாமா பேராசிரியராக இருந்தார். இதன் மூலம் கிடைத்த சம்பளம், இவர் எழுதிய புத்தகங்களுக்குக் கிடைத்த சன்மானம் ஆகியவைதான் இவரது வருவாய் ஆதாரங்களாகும்.

ஒபாமாவுக்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த புஷ்ஷின் சொத்து மதிப்பு இலங்கை நாணயப்படி ரூ. 300 கோடி ஆகும். அவருக்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த பில் கிளிண்டனின் சொத்து மதிப்பு ரூ. 570 கோடி ரூபா ஆகும்.

## 60 வயதில் சீனப்பெண்ணுக்கு இரட்டைக் குழந்தைகள்!

பீஜிங்,மே29

சீனாவைச் சேர்ந்த 60 வயது பெண்ணொருவர் செயற்கை முறையில் கருத்தரித்துள்ளார். இவருக்கு கடந்த சிலநாள்களுக்கு முன்னர் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இந்தப் பெண்ணின் பெயர் வெளியிடப்படவில்லை.

இவர் அன்கூய் மாநிலத்திலுள்ள ஹேபேய் நகரைச் சேர்ந்தவர். இவரது ஒரே மகள் டிங்டிங் 28 வயதில் விஷவாயு தாக்கிய சம்பவத்தில் தனது கணவருடன் இறந்துவிட்டார். இதனால் வாரிசு இல்லாத நிலை ஏற்பட்டது.

இதனால் இப்பெண் தனது கணவருடன் கலந்து பேசி, மீண்டும் குழந்தை பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தார். இவர்கள் கடந்த ஆண்டு மே மாதம் பீஜிங் நகருக்கு சென்று மகப்பேறு மருத்துவர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள்.

இப்பெண்ணைச் சோதித்த டாக்டர்கள் கருத்தரிப்பதற்கான வாய்ப்பு மிக அரிதாக உள்ளது எனத் தெரிவித்தனர். இதனால் கரு முட்டைகளை இவரின் உடலுக்குள் செலுத்தி செயற்கை முறையில் கருத்தரிக்க டாக்டர்கள் நடவடிக்கை எடுத்தனர். இதன்படி நடந்துகொண்ட அந்த பெண்ணுக்கு சமீபத்தில் இரட்டை பெண் குழந்தைகள் பிறந்துள்ளன.

### உலக அரங்கில்



பிரான்ஸ் வந்திருந்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நிட்டன்யாகவை (இடது) அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஷி, பாரிஸிலுள்ள எல்ஸி அரண்மனையில் வரவேற்றார்.

## தீவிரவாதி ரகுமான் லக்வியின் மனு பாக். உச்ச நீதிமன்றால் தள்ளுபடி

இஸ்லாமாபாத்,மே29

மும்பைத் தாக்குதல் குற்றச்சாட்டிலிருந்து தன்னை விடுவிக்குமாறு தீவிரவாதி ஜாகியுர் ரகுமான் லக்வி தாக்கல் செய்த மனுவை பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு தீவிரவாதிகள் நடத்திய நேரடித் தாக்குதலில் 150 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளில் முகமது அஜ்மல் கசாப் என்பவர் மட்டுமே உயிருடன் பிடிக்கப்பட்டார். இந்தத் தாக்குதல் தொடர்பாக மும்பை சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று, இறுதியில் அஜ்மல் கசாப்புக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மும்பைத் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர்களில் பலர் பாகிஸ்தானில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அஜ்மல் கசாப் அளித்த வாக்குமூலத்தின்படி, இவர்களில் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாத தளபதி ஜாகியுர் ரகுமான் லக்வி மீதும் மற்றும் ஆறு பேர் மீதும் பாகிஸ்தான் தீவிரவாத ஒழிப்பு சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், குற்றச்சாட்டிலிருந்து தன்னை விடுவிக்குமாறு பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் லக்வி மனு தாக்கல் செய்தார். அவர் தனது மனுவில், ''இந்தியாவில் அஜ்மல் கசாப் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே என் மீது குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது. வேறு எந்த ஆதாரமும் எனக்கு எதிராக இல்லை'' எனத் தெரிவித்திருந்தார்.

இந்த மனுவை, தலைமை நீதிபதி இப்திகார் சவுத்திரி தலைமையிலான மூன்று நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்றக் குழு விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. அப்போது லக்வி சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுல்தான், ''இந்தியாவில் கசாப் அளித்த வாக்குமூலம் பாகிஸ்தானில் செல்லுபடியாகாது'' என வாதிட்டார். அதை நீதிபதிகள் ஏற்கவில்லை.

இரு தரப்பு வாதங்களைக் கேட்ட பின்னர் லக்வியின் மனுவை பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மேலும், ''இந்த விவகாரத்தில் தீவிரவாத ஒழிப்பு நீதிமன்றம் மட்டுமே முடிவு எடுக்க முடியும். வழக்கின் தற்போதைய நிலையில், உச்ச நீதிமன்றம் முடிவு எடுப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. எனினும், தீவிரவாத ஒழிப்பு நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றங்களில் மேல் முறையீடு செய்யலாம்'' என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

## ஆஸ்திரேலியாவில் குடியேறும் இந்தியர் எண்ணிக்கை அதிகரிப்பு

மெல்போர்ன், மே 29

ஆஸ்திரேலியாவில் குடியேறும் இந்தியர்களின் எண்ணிக்கை கடந்த ஆறு ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. சமீபத்திய கணக்கெடுப்பில் இது தெரியவந்துள்ளது.

2007-08ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவில் குடியேறிய பிரிட்டன், நியூஸிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களைவிட இந்தியர்களின் எண்ணிக்கை அதிகமாகும் என்று ஆஸ்திரேலிய குடியுரிமைத்துறை தெரிவித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்திய வாழ் ஆஸ்திரேலியர்களின் எண்ணிக்கை 1,10,563 ஆக இருந்தது. இது 2008ஆம் ஆண்டில் 2,39,295 ஆக உயர்ந்தது. திறமைபெற்ற தொழிலாளர்களின் வருகையாலும், மேற்படிப்புக்காக ஆஸ்திரேலியா வந்தவர்களாலும் இந்த எண்ணிக்கை உயர்வடைந்தது.

2007-08 ஆம் ஆண்டுகளில் மட்டும் ஆஸ்திரேலியாவுக்கு வந்த இந்தியர்களின் எண்ணிக்கை 39,529 ஆகும்.

இந்தியாவுக்கு அடுத்தபடியாக சீனாவிலிருந்து வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 32,563 சீனர்கள் ஆஸ்திரேலியா வந்துள்ளனர்.

மூன்றாமிடத்தில் நியூஸிலாந்து நாட்டவர்கள் உள்ளனர். மொத்தம் 31,248 பேர் நியூஸிலாந்திலிருந்து ஆஸ்திரேலியா வந்துள்ளனர். பிரிட்டனிலிருந்து 17,397 பேர் வந்துள்ளனர்.

2008-09 ஆம் ஆண்டுகள் வரை ஆஸ்திரேலியாவுக்கு வரும் இந்தியர்களின் எண்ணிக்கை 40 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. இதே ஆண்டில் ஆஸ்திரேலியாவில் விக்டோரியா மாகாணத்தில் நிரந்தர குடியுரிமை பெற்ற இந்தியர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும். ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றுவந்த இந்தியர்கள் மீதான தாக்குதல் சம்பவங்களால் 2009-10 ஆம் ஆண்டுகளில் இங்கு குடியேற விரும்புவோரின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்தது.

பிரிட்டனைச் சேர்ந்தவர்களே மிக அதிக எண்ணிக்கையில் இங்குள்ளனர். 11.66 இலட்சம் பேர் அதாவது மொத்த மக்கள் தொகையில் 6 சதவீதத்தினர் பிரிட்டனைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுக்கு அடுத்தபடியாக நியூஸிலாந்தைச் சேர்ந்தவர்கள் உள்ளார்கள். இவர்களின் எண்ணிக்கை 4.94 இலட்சமாகும். இத்தாலியைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 3,427 ஆகக் குறைந்தது. 1970களுக்குப் பின்னர் இத்தாலியைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறையத் தொடங்கியது.

இருப்பினும், 2006 ஆம் வருடத்திய கணக்கெடுப்பின்படி 8.52 இலட்சம் ஆஸ்திரேலியர்கள் தாங்கள் இத்தாலிய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர்.

## ஆயுள் நீடிப்புக்குத் தேன்: 111 வயதுப் பாட்டி பேட்டி!



லண்டன்,மே29

பிரிட்டனில் மிக வயதானவர் என்ற சாதனை படைத்துள்ள 111 வயது பாட்டி தனது வாழ்நாள் நீடிப்புக்குத் தேன் சாப்பிடுவதே காரணம் என்று கூறியுள்ளார். பிரிட்டனைச் சேர்ந்தவர் ஈனைஸ் பாமேன். வயது 111.

ஸ்கொட்லாந்து, பிரிட்டன், அயர்லாந்து, வேல்ஸ் ஆகியவை சேர்ந்த யுகேயில் இவர் அதிக வயதானவர் என்ற சாதனை படைத்துள்ளார். இவர் தனது ஆரோக்கிய வாழ்வுக்கான காரணம் குறித்து 'டெய்லி எக்ஸ்பிரஸ்' நாளிதழுக்குப் பேட்டியளித்துள்ளார்.

''எனது வாழ்க்கை எளிமையானது. அதிகம் கோபப்படமாட்டேன். கிடைத்ததை நினைத்து திருப்தி அடைவேன். அதிக பயணம் செய்ததில்லை. மதுவை கண்ணால்கூடப் பார்த்ததில்லை. புகைப்பழக்கம் கிடையாது. எல்லாவற்றுக்கும் மேலாக தினசரி உணவில் தேன் சேர்த்து வருகிறேன். இதுதான் எனது நீண்ட வாழ்நாளுக்குக் காரணம் என்று நினைக்கிறேன்'' என இவர் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

''1898 ஆம் ஆண்டில் பிறந்த நான், எனது வாழ்நாளில் இதுவரை 6 மன்னர்கள், 22 பிரதமர்கள் ஆகியோரைப் பார்த்துவிட்டேன். எனக்கு 6 குழந்தைகள், 17 பேரன், பேர்த்திகள், 32 கொள்ளுப் பேரன், பேர்த்திகள் ஆகியோர் உள்ளனர். கொள்ளுப்பேரன், பேர்த்திகளின் 5 குழந்தைகளையும் பார்த்துவிட்டேன்'' என்றும் ஈனைஸ் பாமேன் அதில் விவரித்துள்ளார். பாட்டி பற்றி பேரன் ஜோன் பெர்ரி (வயது 45) கூறுகையில், ''அவர் முகத்தில் எப்போதும் புன்னகை இருக்கும். அதுவும் ஆரோக்கியத்துக்குக் காரணமாக இருக்கலாம்'' எனத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Study in Singapore

## With industry attachment Diploma, Advanced Diploma in Tourism & Hospitality Management (12 Months)

Hurry, Admission is open for June intake!

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA

Call: Mr.N.Geethan
0773484467
International Placements(S) (Pte) ltd, Singapore

மாபெரும் கருத்தரங்கு

றீல்கோ ஹோட்டல்
No. 70/6 K.K.S. Road,
30 th May at 10 am - 12 pm

அனுமதி இலவசம்


## வத்தனை முன்பள்ளியில் விளையாட்டுப் போட்டி

புலோலி வத்தனை மழலைகள் கல்விப் பூங்கா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வத்தனை ஞானவைரவர் கோயிலுக்கு அருகில் உள்ள மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை அதிபர் கா. ராமஜயம் கலந்து கொள்வார். (1)

## கைதடியில் சம்பூரண அரிச்சந்திரா நாடகம்



கைதடி வடக்கு, சாளம்பை அண்ணமார் ஆலய வளர்ச்சிக்காக நடிகக் கலாமணி கைதடியூர் செல்லப்பா மற்றும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணிக் கலைஞர்கள் பலர் இணைந்து வழங்கும் சம்பூரண அரிச்சந்திரா இசை நாடகம்.

காலம் : இன்று (29.05.2010) சனிக்கிழமை இரவு 7 மணி

இடம் : ஆலய முன்றல்


நாடக ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

கைதடி வடக்கு. (98883) நாடகக் குழுவினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கணபதிப்பிள்ளை பரமசாமி

(முன்னாள் உரிமையாளர், பரமராஜா ரான்ஸ்போட்)



திதி: துதியை

அன்னை மடியில்
22 - 04 - 1927

அம்பாள் அடியில்
09 - 06 - 2009

தாய் தந்தைக்கு பிள்ளையாய் தாரத்திற்கு கணவனாய்
பிள்ளைகளுக்கு தகப்பனாய் மருமக்களுக்கு மாமனாய்
பேரர்களுக்குப் பேரனாய் பூட்டிகளுக்கு பூட்டனாய்
எடுத்த பொறுப்பெல்லாம் எள்ளளவும் பிசகாமல்
எளிதாக செய்து முடித்து எம்மை விட்டு
தூரதேசம் சென்று ஒரு வருடம் ஆகிவிட்டது
எண்ணிப் பார்க்கையில் உள்ளம் துடிக்குது அப்பா
என்ன சொல்லியும் உங்கள் பிரிவை தாங்க முடியவில்லை அப்பா!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*

(சி-567997)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 - 05 - 1937

மறைவு
09 - 06 - 2009



### திருமதி பரஞ்சோதி இராசரத்தினம்

திதி: (துதியை) 29.05.2010

ஒளி விளக்காயிருந்து எமக்கு வழிகாட்டிய செல்வமே
பண்பின் சிகரமாயிருந்து எம்மை உயர வைத்து
வழிகாட்டிய அன்புச் செல்வமே
பாசத்தினால் எம்மை ஆண்ட சோதியே
எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றது ஓராண்டல்ல
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவு எம்மோடிருக்கும்.

'கன்னிகா பவனம்'
பிரதான வீதி,
வல்வெட்டி.

(சி-567998)

என்றும்
உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தையலாம்பாள் சுந்தரமூர்த்தி (அம்பிகா)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பரம்பரை தர்மகர்த்தாவும் உரிமையாளருமாகிய அமரர் கந்தப்பச் செட்டியார் வைத்திலிங்கச் செட்டியார் - அமரர் கண்ணம்மாளாச்சி ஆகியோரின் அருமைப் புதல்வியும் அமரர் சீனிவாச பிள்ளை- அமரர் செங்கம்மாளாச்சி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பேராசிரியர் சுந்தரமூர்த்தியின் (மதுரை) அருமை மனைவியுமாகிய தையலாம்பாள் (அம்பிகா) 25.05.2010 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அனுசியா, கண்ணன் (முன்னாள் விரிவுரையாளர், கணனி விஞ்ஞானத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும் வைத்திலிங்கம் செட்டியார் (பரம்பரை தர்மகர்த்தா, வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், பொறியியலாளர் - யூரோவில்), தயாமதி ஆகியோரின் அன்பு மாமியும் கந்தப்பா (பாபு), மதுரா ஆகியோரின் அன்புப் பாட்டியும் அமரர்களான கந்தப்பச்செட்டியார், முத்துக்காயரோகணம் செட்டியார், ஜெகதாம்பாள் மற்றும் மங்களாம்பாள் (இந்தியா), சுந்தரலிங்கம் செட்டியார் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சரோஜா ஆச்சி (கஸ்தூரி), சக்குபாய் (இந்தியா), இராஜேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்றவர்களான சுவாமிநாதபிள்ளை, சீனுவாசபிள்ளை, சண்முகசுந்தரம்பிள்ளை, நடராஜபிள்ளை, பேராசிரியர் ராஜகோபாலன், கனகாம்பாள் மற்றும் சொக்கலிங்கம்( இளைப்பாறிய நீதிபதி, வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2010) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

160, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
0212223264

(98885)

தகவல்:
கந்தப்பச்செட்டியார் வைத்திலிங்கம் செட்டியார்,
கந்தப்பச்செட்டியார் ரமேஷ்,
(வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்)
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உள்ளூர் உற்பத்தியில் உயர்வோம்' கண்காட்சி விவசாயிகள், மாணவருக்கு பெரும் வரப்பிரசாதம்

## பயிரிடுவது முதல் சந்தைப்படுத்துவது வரையில் தெளிவான விளக்கங்கள்

யாழ்ப்பாணம்,மே29

விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவோர் தமது தொழிலை மேம்படுத்துவதற்குரிய ஆலோசனைகளும் விளக்கங்களும் பெறக்கூடிய ஏற்பாடுகள் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்றுவரும் 'உள்ளூர் உற்பத்தியில் உயர்வோம்' கண்காட்சியில் செய்யப்பட்டுள்ளன என பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சி தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடபகுதியில் விவசாயத்துறை மேலும் விருத்தி செய்யப்படவேண்டும். அதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மூன்று தினங்கள் இடம்பெறும் 'உள்ளூர் உற்பத்தியில் உயர்வோம்' என்ற தொனிப்பொருளிலான கண்காட்சியில் எமது துறைசார் உற்பத்திப் பொருள்களுக்கான மூன்று அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று விற்பனைப் பகுதியாகும்.

பயிர்ச்செய்கையில் ஆரம்பம் முதல் அறுவடை வரையான தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய 17 வகை இறுவட்டுகள் உள்ளன. அவை பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோருக்கு மிகப் பயனுடையவை ஆகும்.

விவசாயிகள், பாடசாலை மாணவர்களுக்கு இக்கண்காட்சி பெரும்வரப்பிரசாதமாகும். அவர்களுக்குப் பயன்படும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்படுகின்றன. அத்துடன் மரக்கறிப் பயிர் செய்கைகளுக்கான விதைகள், பழமரக்கன்றுகள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. விளைபொருள்களை எவ்வாறு சந்தைப்படுத்துவது குறித்தும் விளக்கம் வழங்கப்படுகிறது. காளான் செய்கை தொடர்பான விவரணப்படம் காண்பிக்கப்படுகிறது.

பப்பாசிச்செய்கையில் உயிரியல் முறையில் வெண்மூட்டுப் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறை குறித்தும் சிறப்பாக விளக்கம் அளிக்கப்படுகிறது. வாழைமரச்செய்கையாளர்கள் எவ்வாறு அதிக லாபம் பெறுவது குறித்தும் தெளிவுபடுத்தப்படுகிறது.

பிபில இனிப்பு ஒட்டுத்தோடை இனங்களும் உள்ளன. அவற்றையும் பெற்றுக்கொள்ள முடியும். விதை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழுடன் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். - என்றார். (ஒ-14)

# வடமராட்சியில் நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,மே29

வடமராட்சிப் பிரதேசத்துக்கான மின் விநியோகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5மணி வரையும் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில், வீதி அகலிக்கும் வேலைகளுக்கான உயர் அழுத்த மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதன் காரணமாகவே மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் மேலும் அறிவித்துள் ளார். (50-14)

# பேராதனை பொறியியல் பீட மாணவன் ஆனையிறவில் நடந்த விபத்தில் பலி!

## சகோதரர் படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில்

கிளிநொச்சி,மே29

கிளிநொச்சி, திருவையாறுப் பகுதியில் தமது காணியைப் பார்த்துவிட்டு யாழ்ப்பாணத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த சகோதரர்கள், லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் அந்த இடத்திலேயே மரணமானார்; மற்றவர் படுகாயமடைந்தார்.

ஆனையிறவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த குறிப்பிட்ட லொறியின் ' ரியூப்' திடீரென வெடித்ததால் அந்த லொறி ஒரு பக்கமாகச் சரிந்து இழுபட்ட வேளை, மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

உயிரிழந்த இளைய சகோதரரான சண்முகநாதன் சுஜீவன் (வயது 24), பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட 2 ஆம் வருட மாணவன் என்றும் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பழைய மாணவன் என்றும் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த சகோதரரான சண்முகநாதன் பார்த்தீபன் (வயது 26) அம்புலன்ஸ் மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ஒ-405)

# தென்மராட்சிப் பிரதேசத்துக்கென தனி மின் நிலையம் வேம்பிராயில் நிர்மாணம்

யாழ்ப்பாணம்,மே 29

தென்மராட்சிப் பிரதேசத்திற்கென தனியான மின்நிலையம் மீசாலை வடக்கு வேம்பிராய் பகுதியில் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த மின் நிலையத்திற்கு சுன்னாகம் மின்நிலையத்திலிருந்து நேரடியாக மின்சாரம் வழங்கப்பட்டு அங்கிருந்து பிரதேசத்திற்கு மின் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் தென்னிலங்கையிலிருந்து வந்த தொழில்நுட்பவியலாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின் இணைப்புக்கான கம்பங்கள் சாவகச்சேரிக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. (1-207)

# எனது அமைச்சின் மூலம் உள்ளூர் உற்பத்திகளுக்கு அனைத்து உதவிகள், நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கும்

## கண்காட்சி நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், மே 29

வடமாகாணத்தின் உள்ளூர் உற்பத்தி முயற்சிகளுக்கு அனைத்து உதவிகளும் நிதி ஒதுக்கீடுகளும் எனது அமைச்சினூடாக மேற்கொள்வேன் என்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

'' உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம்'' எனும் வடமாகாண உள்ளூர் உற்பத்திகளின் மூன்று நாள் கண்காட்சி நேற்று யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாகியது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலத்தில் யுத்தம் என்னும் கொடிய சூழல் நிலவியது. அப்போது மக்கள் நலனுக்காகக் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த கடந்த கால அரசியல் தலைமைகள் மறுத்து வந்தன. தற்போது அமைதியான, சந்தோஷகரமான சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது. கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தனிமனித உயர்வுக்காகவும் சமூக உயர்வுக்காகவும் சந்தர்ப்பங்கள் பயன்படுத்தப்படவேண்டும்.

மஹிந்த அரசு எமக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. இதற்கு எமது முயற்சியும் பங்களிப்பும் அவசியமானதாகும்.

ஆளுநர் வழிகாட்டலில் ஆரம்பமாகியுள்ள இந்த உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம் எனும் கண்காட்சியானது வரலாற்றில் பதியப்பட வேண்டியதே.

உள்ளூர் உற்பத்திகளின் ஊக்குவிப்புக்காக வடமாகாண ஆளுநர், உள்ளூர் மாகாண அமைச்சு அதிகாரிகளும் தொடர்ந்தும் உதவுவார்கள். உள்ளூர் உற்பத்தித் துறையில் அதிக ஆர்வமுடைய நானும் எனது அமைச்சினூடாக பல்வேறு உதவிகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்குவேன்.

கடந்த வருடம் வடமாகாண சிறுகைத் தொழில் முயற்சிகளுக்கென 11 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வடமாகாண உள்ளூர் உற்பத்தி முயற்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வேன்.

உள்ளூர் உற்பத்தித் துறைகள் மேம்பாடு காண்பதன் மூலம் வளங்கள் பயன்பாடும் சேவை வாய்ப்பும் எமது பகுதி மக்களுக்குக் கிடைக்கும்.

எதிர் காலதில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தியின் பிரதிபலன்களை இந்தக் கண்காட்சி மூலம் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ஒ-14)

# அரையிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம்,மே29

ஐக்கியப்படுத்தலுக்கான அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

அரையிறுதி ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு-

* காலை 8.15 மணி - மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மட்டக்களப்பு அலிசார் மத்திய கல்லூரி.
* காலை 9.30 மணி - மன்னார் சென். சேவியர் கல்லூரி எதிர் புத்தளம் சாஹிராக் கல்லூரி

இந்த ஆட்டங்களில் வெற்றிபெறும் அணிகள் இறுதியாட்டத்தில் மோதவிருக்கின்றன. (1-23)

# யாழ்.நகரப் பள்ளிவாசலில் 20 வருடங்களின் பின் நேற்று ஜும்மா தொழுகை

யாழ்ப்பாணம்,மே29

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி வீதியிலுள்ள பெரிய ஜும்மா பள்ளிவாசலில் நீண்டகால இடைவெளியின் பின்னர் நேற்று ஜும்மாத் தொழுகை நடைபெற்றது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முஸ்லிம் மக்கள் வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டதன் பின்னர் இந்தப் பள்ளிவாசல் கவனிப்பாரின்றி சேதங்களுடன் காணப்பட்டது.

கடந்த சில மாதங்களாக பள்ளிவாசலின் புனர்நிர்மாண வேலைகள் இடம்பெற்று 20 வருடங்களின் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை ஜும்மா பிரசங்கமும் தொழுகையும் இடம்பெற்றன. (ஒ-14)

# கிளிநொச்சி நகரில் வெசாக் நிகழ்வுகள்

கிளிநொச்சி,மே29

கிளிநொச்சி நகரில் உள்ள விளையாட்டு மைதானத்தில் வெசாக் கொண்டாட்டங்கள் நேற்று கோலாகலமாக இடம்பெற்றன.

மாலை 6 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான படையினரும் பொது மக்களும் கலந்துகொண்டனர்.

பந்தல்களும் வெளிச்சக்கூடுகளும் அமைக்கப்பட்டிருந்தன. பக்தி கீதங்கள் மற்றும் இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

கிளிநொச்சி, மாங்குளம், கனகராயன் குளம், புளியங்குளம் பகுதிகளிலும் வெளிச்சக்கூடுகள் கட்டப்பட்டு கண்கவர் மின் குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. (ஒ-405)

### ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சி...?

# அல் ஜெஸீராவின் கேள்விகளும் ஜனாதிபதியின் பதில்களும்!

கொழும்பு,மே29

இலங்கையில் ராஜபக்ஷ வம்ச அரசியலை நீங்கள் கட்டி எழுப்பி வருகிறீர்கள் என்று உங்கள் எதிரிகள் கூறுகிறார்களே, அதற்கு என்ன பதில் கூறுகிறீர்கள் என்று அல் ஜெஸீரா தொலைக்காட்சி செய்தியாளர் பவுஸியா இப்றாகிம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கேட்டார். அதற்குப் பதிலளித்த ராஜபக்ஷ - அப்படி நான் செய்யவில்லை. ஏன் செய்யவேண்டும் அது மக்களின் வேலை. மக்கள்தான் அவர்களைத் தெரிவு செய்கிறார்கள். என்னால் என்ன செய்ய முடியும் என்று கேட்டார்.

அல் ஜெஸீரா தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி அளித்த பேட்டியின் முழு விவரம் நேற்றைய உதயனில் வெளிவந்திருந்தது. அதில் மேலும் ஒரு ருசிகரமான பகுதி இங்கு தரப்படுகிறது.

மக்கள் வேண்டாம் என்று நினைத்தால் உதைத்து வெளியேற்றிவிடுவார்கள். ராஜபக்ஷக்கள் அனைவரும் உதைத்து வெளியேற்றப்படுவார்கள். எனவே அவர்கள் மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்றார் ஜனாதிபதி.

**கேள்வி :** அமைச்சரவையில் உங்கள் குடும்ப உறுப்பினர்கள் பலர் முக்கியமான பதவிகளில் இருக்கிறார்கள். உங்கள் சகோதரர்கள் பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு செயலாளர் பதவி, சபாநாயகர் பதவி என்று மற்றும் முந்நூறுபேர் முக்கிய பதவிகளில் இருக்கிறார்கள்.

**ராஜபக்ஷ:** இந்த புள்ளி விவரத்தை யார் கொடுத்தது. 300 உறவினர்களா..? நான் சொல்கிறேன் முழு நாடுமே எனக்கு உறவினர்கள்தான்.

**கேள்வி:** மிகப்பெரிய குடும்பம்?

**பதில் :** ஆம் பெரிய குடும்பம்.

**கேள்வி:** பாருங்கள் - குடும்ா ஆட்சி நடத்துகிறீர்கள் என்ற குற்றச்சாட்டு?

**பதில் :** அப்படி எப்படி சொல்லமுடியும்?

**கேள்வி :** ஏனென்றால் உங்கள் குடும்பத்தவர்கள்தான் முக்கிய பதவிகளில்...?

**பதில் :** இல்லை இல்லை அவர்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள்

**கேள்வி :** மிக முக்கிய பதவிகள்...

**பதில்** இல்லை, ஒருவர்தான். அவர் ஓர் அமைச்சர். கோத்தபாயவை நான் பாதுகாப்புச் செயலாளராக நியமித்துள்ளேன் - ஆம்!

**கேள்வி :** அது முக்கியமான பதவி?

**பதில் :** ஆம் ஏன் கூடாது? பாதுகாப்புச் செயலரை நாம் நம்பவேண்டும்

**கேள்வி :** அப்ப நீங்கள் நம்பக்கூடிய ஒரே ஆள் உங்கள் குடும்ப உறுப்பினர்தான்.

**பதில் :** இல்லை இல்லை அவர் தகுதிவாய்ந்தவர், தகுதியானவர் என்று காட்டியுள்ளார். நான் அவரை நம்புகிறேன். அதனால் ஏன் கூடாது.

- இவ்வாறு அமைந்திருந்தது அந்தப் பேட்டி நிகழ்ச்சி (ப)

# நெடுந்தீவில் நாளை சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம்,மே29

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் சம்பந்தர் குருபூசை நிகழ்வு வித்தியாலய அதிபர் ச.சத்திய வரதன் தலைமையில் இடம்பெறுகின்றது. இந்நிகழ்வில் விசேட பூசை, பஜனை, கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறுகின்றன. (ஒ-1)

# விபத்தில் காயமடைந்த ஓட்டோ சாரதி மரணம்

யாழ்ப்பாணம்,மே29

கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைமன் வீதிப் பகுதியில் இடம்பெற்ற ஓட்டோ - ஹைஏஸ் விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஓட்டோ சாரதி சிகிச்சை பலனின்றி நேற்று மரணமானார்.

இச்சம்பவத்தில் கோப்பாயைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான ஆர்.அருள் ஜெயக்குமார் (வயது 37) என்பவரே யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்துள்ளார். (1-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்

# இலங்கையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் திருப்திகரமாக அமையாது!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவிப்பு

கொழும்பு, மே 29

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்க இலங்கையில் நியமிக்கப்பட்டிருக்கும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் அமெரிக்கா எதிர்பார்க்கின்ற விதத்தில் திருப்திகரமாக அமையப் போவதே இல்லை''

இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்,பீரிஸ் நேற்று அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் கிலாரி கிளின்ரனைச் சந்திக்கவிருந்தார்.

இலங்கையில் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது அரச படையினரால் மேற் கொள்ளப்பட்டன என்று கூறப்படும் யுத்தக் குற்றச்சாட்டுகள் குறித்து இருவரும் பரஸ்பரம் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கையின் யுத்தக் குற்றங்கள் குறித்து சர்வதேச மட்டத்திலான நீதிமன்ற விசாரணை அவசியம் இடம்பெற வேண்டும் என்று இச்சந்திப்பில் ஹிலாரி வலியுறுத்த வேண்டும் என்று இக்கண்காணிப்பகம் கோரியுள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி நேற்றுக்காலை அது ஹிலாரிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்திலேயே யுத்தக்குற்றம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கேட்டுள்ளது.

அதில் முக்கியமாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்ற விசாரணைக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கக் கூடாது என்கிற கோரிக்கையை இச்சந்திப்பில் பீரிஸ் முன்வைக்க உள்ளார்.

அதற்கு அமெரிக்கா இணங்கவே கூடாது. மாறாக இலங்கையில் சர்வதேச யுத் தக் குற்ற விசாரணை நடத்தப்பட வேண் டும் என்பதை தவறாமல் வலியுறுத்த வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அண்மையில் அந்நாட்டில் அமைக்கப் பட்டிருக்கும் நல்லிண்க்க ஆணைக்குழு எதையுமே சாதிக்கப் போவது இல்லை என்றும் தெரிவிக்கவேண்டும் - என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உலக வங்கியின் நிதியுதவியில் நெடுங்கேணிக்கு குடிதண்ணீர்

கொழும்பு, மே 29

உலக வங்கியின் நிதி உதவியுடன் நெடுங்கேணியில் 10 கோடி ரூபா செலவில் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த பகுதியில் சந்தையும் பஸ் நிலையமும் அமைப்பதற்காக உலக வங்கியின் நிதியில் 4கோடியே 30 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## காணாமற்போனவர் வந்து சேர்ந்தார்

யாழ்ப்பாணம், மே 29

தென்னிலங்கையில் இருந்து சுற்றுலாப் பயணம் மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த களுத்துறையைச் சேர்ந்த விண்செண்ட் கொத்தலாவல என்ற 80 வயது வயோதிபரை காண வில்லை என அவரது மகன் அறிவித்தல் விடுத்திருந்தார். நேற்று நள்ளிரவு தந்தை திரும்பி வந்தார் என்று அவரது மகன் தெரிவித்தார்.

# இலங்கை விடயத்தில் ஹிலாரி கிளின்டன் சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது!

## மன்னிப்புச் சபை வேண்டுகோள்

கொழும்பு, மே 29

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடனான சந்திப்பின் போது அமெரிக்கா வலியுறுத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை கோரி உள்ளது.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாது என்றும் அது வலியுறுத்தி உள்ளது.

இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவே ஜி.எல்.பீரிஸ் முக்கியமாக அமெரிக்கா வந்துள்ளார் என்று சுட்டிக்காட்டி இருக்கும் இந்த அமைப்பு, இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களினதும் இச்சந்திப்பை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கிறது எனவும் அறிவித்துள்ளது. (சி)

(நேற்று நண்பகலில் கிடைத்த செய்தி)

## போர்க்குற்ற முறைப்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்றிரவு (இலங்கை நேரப்படி 10.30 மணி) அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரனுடன் பேச்சு நடத்தினார். அதன் பின் இருவரும் சேர்ந்து ஊடகவியலாளர் மாநாடு நடத்தினார்கள்.

அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் இது குறித்து அங்கு தெரிவித்ததாவது:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் நெருங்கிச் செயற்பட வேண்டும். அவர்களின் சிபாரிசுடன் அரசாங்கமும் உரிய கவனம் செலுத்துவதுடன் அவற்றை பகிரங்கப்படுத்துவதும் மிக முக்கியம்.

ஆணைக்குழு முன் சாட்சியம் அளிப்போருக்கும், ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் போதுமான காத்திரமான பாதுகாப்பு வழங்கப்படுவது மிகவும் அவசியமாகும். இதில் அரசாங்கம் கூடுதல் கவனமும் சிரத்தையும் எடுக்க வேண்டும்.

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் சுதந்திரமானவர்களாகவும் எவருக்கும் பாரபட்சம் காட்டாதவர்களாவும், திறமைசாலிகளாகவும் தகுதியானவர்களாகவும் இருப்பது மிகவும் அவசியமாகும்.

இந்த நல்லிணக்க ஆணைக்குழு இலங்கையில் 40 வருடங்களாக நடைபெற்ற சிவில் யுத்தத்தினால் பாதிப்புற்ற அந்நாட்டு மக்களின் விருப்பங்களையும் தேவைகளையும் பாதிப்புகளையும் பிரதிபலித்து அவற்றை வெளிக்கொணர வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம் - என்றார்.

இலங்கையின் வெளிவிகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த முக்கிய கருத்துகள் வருமாறு:-

* ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சகல சுதந்திரங்களும் கொண்டவர்களே. ஆணைக்குழுவுக்கு வேண்டப்படும் அதிகாரங்கள் போதிய அளவு வழங்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவின் விசாரணைகள் எதிர்பார்புகளை நிறைவு செய்து வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கையுடன் அது தமது பணிகளை ஆரம்பிக்க ஊக்கமளிக்க வேண்டும்.

* ஆணைக்குழு தனது பணிகளை எவ்வித தடையோ அல்லது இடையூறோ இன்றி ஆரம்பிப்பதற்கு சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்பதே எமது வேண்டுதலாகும்.

* எமது ஆணைக்குழுவின் விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது, எங்களுக்கு உதவி தேவை என்று கருதும் பட்சத்தில் ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்புகொண்டு பேசவும் இந்த விடயங்களில் அதன் அனுபவம் மற்றும் பாண்டித்தியத்தைப் பகிர்ந்துகொள்ளவும் நாம் மனப்பூர்வமாகவும் மகிழ்ச்சியுடன் முன்வருவோம். (அ)

## இந்தோனேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணத்தினால் குறித்த 26 பேரையும் அங்கு அழைத்துச் செல்லமுடியாமல் இருப்பதாக ஜாவாவில் உள்ள சிலாகெப் முகாமின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

''கடலில் இருந்து மீனவர்களால் காப்பாற்றப்பட்ட 26 பேரும் களைப்படைந்து இருக்கின்றனர். சிலர் சுகவீனமுற்ற நிலையில் இருக்கின்றனர். அவர்களுக்கு சிகிச்சைகள் தேவைப்படுகின்றன.'' என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர். (அ-சி)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார். பாதுகாப்பு அமைச் சின் நேரடிக் கட்டுப்பரட்டின் கீழ் விசேட அதிரடிப்படைப் பொலிஸ் பிரிவைக் கொண்டுவருவதன் மூலம் அமைச்சுக்கும் இப்பிரிவுக்கும் இடையிலான தொடர்பை இன்னும் நெருக்கமாக்க முடியும் என்று அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

பாதுகாப்பமைச்சரின் அறிவுறுத்தலுக்கு அமைய கடந்த 12 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விசேட அதிரடிப் படைப் பொலிஸ் பிரிவு பாதுகாப்பு அமைச்சினால் பொறுப்பேற்கப்படுகின்றது என்று அமைச்சரவைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## அமெ.பத்திரிகையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த தேசிய பத்திரிகையாளர் சங்கத்தைச் சேர்ந்த ரெஜின்டர் சிங் என்பவர் இதனை உறுதிப்படுத்தினார். ''அவர் (பீரிஸ்) இந்தக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக வந்திருந்தார். ஆனால் எதுவும் பேசாமல் வெளியேறிவிட்டார். ஏன் வெளியேறினார் என்பது தெரியவில்லை.'' என்று ரெஜின்டர் சிங் தெரிவித்தார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டனுடன் பீரிஸ் நேற்று பேச்சு நடத்தவிருந்தார். இந்தச் சந்திப்புக்கு முன்னோடியாகவே நேற்றுமுன்தினம் தேசிய பத்திரிகையாளர் சங்கத்தில் மேற்படி கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பத்திரிகையாளர் கூட்டத்திலிருந்து பீரிஸ் வெளியேறியமையை கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சும் உறுதிப்படுத்தியது. எனினும் அவரது வெளிநடப்புக்கான காரணத்தைக் கூற அமைச்சு மறுத்துவிட்டது. ''இறுதி நேரத்தில் ஏற்பாட்டாளர்களுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டத்திலிருந்து அவர் வெளியேறியிருக்கக் கூடும்'' என்று தெரிவித்த வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள், எனினும் உண்மையான காரணத்தை அறிய இன்னும் கால அவகாசம் தேவை என்றும் குறிப்பிட்டனர்.

கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக அமெரிக்காவில் செல்வாக்கு மிக்க அமைப்பாகத் திகழ்கிறது தேசிய பத்திரிகையாளர் சங்கம். அமெரிக்க ஜனாதிபதிகள், முன்பு ஆட்சியிலிருந்த மன்னர்கள், மகாராணிகள், பிரதமர்கள், அமைச்சர்கள் என்று பிரபலங்கள் எல்லோருமே மேற்படி தேசிய பத்திரிகையாளர் சங்கத்தின் ஆதரவுடன்தான் செல்வாக்குப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திலிருந்து பீரிஸ் வெளிநடப்புச் செய்தமையானது பெரும் பரபரப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இது ஒருபுறமிருக்க - இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட 'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவுக்கு 2009ஆம் ஆண்டின் சிறந்த ஊடக சுதந்திரத்துக்கான விருது அமெரிக்காவின் தேசிய பத்திரிகை சங்கத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

கடந்த வருடம் அந்த விருது லஸந்தவின் சார்பாக அவரது மனைவிக்கு வழங்கப்பட்ட அதே மண்டபத்தில்தான் பீரிஸின் கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

லஸந்தவுக்கான விருது வ்ழங்கும் விழாவில் அவரது மனைவி ''இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருக்கும்வரை தாம் அங்கு திரும்பிப் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது'' என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுத்தப்படும்.

நாடு முழுவதும் 80 ஆயிரம் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு சனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளி விவரத் திணைக்கள ஊழியர்களுக்கும் சனத்தொகை மதிப்பீட்டுக்கெனத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் விசேட பயிற்சிகளை வழங்கவும் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (அ-சி)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் வவுனியா அரச அதிபர் குறிப்பிட்டார்.

வவுனியாவில் உள்ளூர் வீதி அபிவிருத் திப் பணிகளுக்கென 5கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (அ-சி)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே மேற்கண்டவாறு கூறினார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலனுக்காக, இலங்கை அரசினால் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இவ்வருடம் 15 கோடி அமெரிக்க டொலர்கள் கடனாக ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். (அ-சி)

## படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது. இனி இதற்குப் பிறகு மீண்டும் ஒரு பொதுமன்னிப்பு வழங்கப்பட மாட்டாது என்றும், இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடுகின்ற படைவிட்டோடிகள் கைது செய்யப்படுவார்கள் என்றும் இராணுவம் எச்சரித்துள்ளது.


**A/L 2012 வர்த்தகப் பிரிவு**

புதிய அலகுகள் ஆரம்பம்

| பொருளியல் | வணி.கல்வி | கணக்கீடு |
|---|---|---|
| S.S.சிறி | பசில் | D.SAM |
| செவ். வியா 3 p.m. | செவ் -4 p.m. சனி -3 p.m. | செவ் -5 p.m. வியா. -4 p.m |

காலம்: 01.06.2010 செவ்வாய் 3 மணி

ACA கோவில் வாசல், கே.கே.எஸ். வீதி, இணுவில்.

**BEACON** Clock Tower Road, Jaffna.

| பெயர் | புள்ளி | பாடசாலை |
|---|---|---|
| J.ஜெமில்ரன் | 82 | J/C/C |
| K.வினித்திரா | 80 | H/F/C |
| S.ஜென்சி | 78 | H/F/C |
| E.சுபிதா | 75 | C/H/C |
| A.ஜெரிஜோன்சன் | 71 | S/P/C |
| K.பிரசாத் | 71 | J/H/C |
| V.வசுமதி | 70 | Trinco |
| M.பேபியானா | 68 | H/F/C |

S.K.Balasabesh(H.N.Dip in Acc

2010A/L

**வேலையாள்கள் தேவை**

எமது காமன்சுக்கு தையல் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு:

கிளை - 1
றொசானி காமன்ஸ்
263/1, இராஜகாரியர் லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

கிளை - 2
சபாபதிப்பிள்ளை வீதி,
புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு அருகில்
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

**பவிஷா பாம்**

வைறா Cic நியூ வேனாட் ஒரிஜினல் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு.

உங்களுக்குத் தேவையான உமி, மாஸ், மருந்து வகைகள், குஞ்சுகள் என்பன உங்கள் வீடுகளுக்கு கொண்டுவந்து தரப்படும்.

40 நாள்களின் பின்னர் உங்கள் வீடுகளுக்கு வந்து நியாயமான விலையில் கோழிகளையும் பெற்றுக் கொள்வோம். பதிவுகள் முற்கூட்டியே பதிவு செய்யப்பட வேண்டும். அத்துடன் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
பவிஷா எலக்ரோனிக்கல்ஸ்
343, பருத்தித்துறை வீதி, நல்லூர். யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 5680167, 0772529551


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org